JL
m211, N29BH
N29.1.4
198521

HARATI"                Reg. No. M. 2456.

OFFICE OF THE REGISTRAR
No.
10 JUN 1929
MADRAS

ஏப்ரல் 1929.

மாலை 1.

# பாரதி

## ஒரு தேசிய மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

பிரசுராலயம்:
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

# 'பாரதி'யின் போஷகர்கள்.

1. Messrs. மச்சா முனுஸ்வாமி செட்டியார் & பிரதர்ஸ், சென்னை.

2. ஸ்ரீமான் நாகையஸ்வாமி அவர்கள், மானேஜர், தேவாரம் ஜமீன், தேவாரம்.

3. ,, T. A. K. அழகர் ராஜா அவர்கள், சொந்தக்காரர், மஹேஸ்வரி விலாஸ் எஸ்டேட், தேவாரம்.

4. ,, C. சங்கரலிங்கம் அவர்கள், சொந்தக்காரர், ஆனந்த விலாஸ் எஸ்டேட், தேவாரம்.

5. ,, சி. ராமலிங்கம் செட்டியார் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.

6. ,, S. ராமலிங்கம் செட்டியார் அவர்கள், மிராஸ்தார், கூடலூர்.

7. ,, ப. ச. வேலுச்சாமி அவர்கள், ஜவுளி வியாபாரம், கூடலூர்.

8. ,, V. S. சுப்ரமண்யம் அவர்கள், மிராஸ்தார், சித்தயங்கோட்டை.

9. ,, பெயர் தெரிவிக்க இஷ்டமில்லாதவர்

10. ,, ஜான் அந்தோனி ஆஜூ அவர்கள், பைசன் வாலி, தேவிகுளம், திருவாங்கூர்.

II

# போஷகர்கள்

(தொடர்ச்சி.)

OFFICE OF THE REGISTRAR
No.
10 JUN 1929
MADRAS

11. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள், ஜமீன்தார் & முனிசிபல் சேர்மன், போடிநாயக்கனூர்.

12. ,, உ. ம. சே. முகியித்தீன் பிள்ளை ராவுத்தர் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., கோம்பை.

13. ,, ந. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.

குறிப்பு:— போஷக சந்தா குறைந்தது ரூபாய் 100.

"பாரதி"

படங்களுடன் வெளிவந்துலாவும்

தேசிய மாஸிகை.

பொருள் அடக்கம்.


தொடர் எண். பக்கம்.

1. மலையாளத்து மாதர்கள்—ஆசிரியர், "பாரதி" ... 241
2. கவிதையின் பெருமை—திரு. பண்டிதை அசலாம்பிகை [அம்மையார் ... 245
3. தேவியின் துயரம்—ஸ்ரீமாந் அளகை M. பொன்னுஸ்வாமி [அவர்கள் ... 248
4. நாகரீகமென்பது யாது?—ஸ்ரீமாந் கு. கோ. கிருஷ்ணன், [B. Sc. (Hon) ... 251
5. நைட்டிங்கேல் அம்மையார்—ஸ்ரீமாந் ரகுபதி சர்மா [அவர்கள், M. A., L. T. ... 256
6. தமிழா—ஸ்வாமி சுத்தானந்த பாரதி அவர்கள் ... 268
7. கண்ணனை கண்ணீ— " ... 269
8. மூட வழக்கங்கள்—ஸ்ரீமாந் முனகால S. பட்டாபிராம [அய்யர் அவர்கள் ... 270
9. சுதேச கைத் தொழில்கள்—ஸ்ரீமாந் T. N. வெங்கடேசன் [அவர்கள் ... 281
10. நெல்—ஸ்ரீமாந். வக்கீல், நடேச பிள்ளை அவர்கள் ... 285
11. பாரதகண்டத்தின் பெருமையும் தற்காலத் தன்மையும்— [ஆசிரியர், "பாரதி" ... 290
12. தமிழ்மொழி—ஸ்ரீமாந் சி. பொ. செல்லையா [அவர்கள் ... 295
13. வாலிபர்களுக்கு எச்சரிக்கை—ஸ்ரீமாந் இராஜாராம் [யம். கொம்டா அவர்கள் ... 300
14. ஆசிரியர் குறிப்புகள் ... ... 303



தமிழ்நாடு ஆவணக் காப்பக
198521



ரவீந்திரநாத் தாகூர்

# "பாரதி"

## ஒரு மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர். (பாரதி.)

ஆசிரியர் : ரா. நாராயணஸ்வாமி.

| மாலை | உத்தமபாளையம் | மணி |
|---|---|---|
| 1 | 1929- ஏப்ரல்மீ | 4 |


## மலையாளத்து மாதர்கள்*

நமக்கோர் பாடம்


திரு. ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர், "பாரதி."


தென்னை, கமுகு, மா, பலா, விதம் விதமான வாழை, வெற்றிலை, மிளகு, மரச்சீனி, சேனை, காய்ச்சில் முதலிய மரஞ் செடி கொடி கிழங்கு வகைகளாலும், அவைகளின் வளர்ச்சியாலும், அடர்த்தியாலும், அவைகளின் அனந்த முகங்கள் போன்ற பச்சைப் பசேலென்ற பசிய இலைகளாலும், மேற்குத் தொடர்ச்சி மலையின் அநேக அருமையான இயற்கை அழகுகளாலும், விநோதங்களாலும், அநேக ஆரோக்கி

*இந்த வியாசம் இலங்கைத் திருக்கோணமலை மாதர் ஐக்கிய சங்க ஆண்டு வெளியீட்டிற்காக எழுதப்பெற்றது.

ஆசிரியர், "பாரதி."

யப் பிரதேசங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, அவைகளின் மாட்சியோடும் அவ் விநோதக் காட்சியோடும் கலந்து களித்து வாழும் மலையாள நாட்டு மாதரசிகளைப் பற்றிச் சிறிது எழுதுகிறோம்.

இத் தேசம், சில கேவலமான பழக்க வழக்கங்களுக்கு அடிமையாய்ப் போயிருக்கிறதென்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். இந்நாட்டின் சில ஆசாரங்களைத் தமிழர்கள் கனவிலும் நினையார்கள். இருப்பினும் இங்குச் சில மேலான அனுஷ்டானங்களும் இருக்கின்றன. அவைகளில் பெண்களது சில உயரிய கொள்கைகளை மட்டும் கவனிப்போமாக.

ஆண்களைப் போலவே பெண்களுக்கும் குடும்பச் சொத்தில் சமமான பங்குண்டு. இங்கு வாரீஸ் பாத்தியம் நமது நாட்டைப் போலல்ல. தகப்பன் சொத்து மக்களுக்குக் கிடையாது. "மாமன் காணிக்கு மருமக்கள்" என்பது அங்குதான். இப்பொழுது இவ் வழக்கம் மாறிக்கொண்டு வந்தபோதிலும், அரசர் வம்சத்தில் பழையபடியேதான். உண்மையாகப் பேசுமிடத்து ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்குத்தான் அதிக உரிமைகள் உண்டு என்று சொல்லலாம். இங்கு ஸ்திரீகள் அடிமையாக நடத்தப்படவில்லை. ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால், அகில இந்தியாவிலேயே கேரளத்திற்றான் மாதர்களுக்கு அதிகமான சுதந்திரம் இருக்கிறது என்று தெரியும். இதற்குச் சான்று இப்போது பட்டம் வகிக்கும் திருவாங்கூர் மேன்மைவாய்ந்த மகாராணி ரீஜெண்ட் அவர்களேயாகும்.

சமீப காலத்திற்கு முன்பு மலையாளத்தில் அறியாமை என்னும் அந்தகாரத்தில் அடைபட்டுக் கொடிய ஆசாரங்களுக்கு அடிமையாகிக் கிடந்து தவித்த மாதர்கள் இப்பொழுது மூடப் பழக்க வழக்கமென்னும் கோட்டையைத் தகர்த்தெறிந்துகொண்டு முன்னேறிப்போகிறார்கள். நம்பூதிரிப் பிராமண மங்கையர்களுக்குத் தக்கபடி அங்கு இன்னும் சீர்திருத்த உணர்ச்சி உண்டாகவில்லை.



பால்ய விவாகத் தொந்தரவு கிடையாது. பிராமணர்களைத் தவிர்த்து மறுமணம் அனுமதிக்கப்படுகிறது. வீண் விவாகச் செலவு கிடையாது. இந்தியாவில் இப்பொழுது திருவாங்கூர்ச் சமஸ்தானமே கல்வியில் முன்னணியில் நிற்கிறது. பெண் கல்வியிலும் அப்படியே. சில வனிதாரத்னங்கள் அயல் நாடுகளில் சென்றும் கல்வி கற்று வருகிறார்கள். சர்வ கலாசாலைப் பட்டம் பெற்ற பல பெண்மணிகள் இங்கு இருக்கின்றார்கள்.

இவர்கள் மிகவும் சிக்கனமாயிருக்கிறார்கள். சமைப்பதிலும் உண்பதிலும் உடுப்பதிலும் செட்டுத்தான். பேச்சுக்களிலும் கூட இவர்கள் சிக்கனமே! ஒரு ரூபாய்ச் செலவிற்கூட அநேக ஜாதியாரில் விவாகம் வேண்டுமானால் நடத்தலாம். நாள் தவறாது குளித்துச் சுத்தமாயிருக்கிறார்கள். களங்கமற்று ஆண்களுடன் சம்பாஷணை செய்கிறார்கள். பட்சிகள் போன்று கவலையற்று ஆனந்தமாயிருக்கிறார்கள். குடும்பச்சச்சரவு அதிகம் கிடையாது. இம் மங்கையர்களின் ஆடை ஆபரணங்களில், கூந்தலடர்த்தியில், உடலழகில், பண்டைப் பெருமையில், தற்காலக்கல்வியில் நாம் மயங்கிப் போய்விடவில்லை. இவர்களின் சில உயரிய பழக்க வழக்கங்கள், சிக்கனச் சிறப்பு, குடும்ப நிர்வாகத் திறமை, சுத்தம், சுதந்திரம், களங்கமற்ற அருமையான மெதுவான பேச்சு, சந்தோஷம், சாந்தி, அடக்கம், அன்னியர்களுக்கு அதிக அன்பான உபசரிப்பு முதலியவைகளே எமது இருதயத்தைக் கவர்ந்தன. மலையாள ஆண்களைக் காட்டிலும் மலையாளப் பெண்களே அழகிலும், அமைப்பிலும், அறிவிலும், அன்பிலும், ஆற்றலிலும், அடக்கத்திலும் அதிகமுடையவர்கள் என்பதே எமது தாழ்மையான அபிப்பிராயம். இன்னும் சில ஆண்டுகளில் இவர்களில் கல்வி கல்லாதாரின் எண்ணிக்கை மிக மிகக் குறைந்துவிடும்.

இம் மாதரசிகளை மனதிலெண்ணி, இவ் விஷயத்தை இங்கு இப்பொழுது எழுதும் பொழுது, நமது தேனொழுகும் தமிழ் நாட்டுச் சகோதரிகளைப்பற்றிச் சற்று நினைக்காமலும், அவர்களைப்பற்றி ஒன்றிரண்டு வரிகள் எழுதாமலுமிருக்கமுடியவில்லை. ஐயோ! தமிழ் நாட்டில் பெண்கள் ஆண்களோடு பேசினால் சந்தேகம்; கண்கொண்டு நோக்கினால் சந்தேகம். அநேக ஞானிகளையும் வீரர்களை

யும் பெற்றெடுத்த தாய்மார்கள் வழி வழி வந்த சகோதரிகளைச் சந்தேகித்து, அவர்கள் சுதந்திரத்தை நசுக்கி அவர்களை அடிமைகளாக்கிவிட்டோம். “ஒரு மனிதனைத் திருடன் என்று சொல்; அவன் திருடனாகி விடுவான்”. என்று ஒரு பெரியார் சொல்லியிருக்கிறார். மனிதர்களை அநேக வழிகளில் நல் வழிப்படுத்தித் தூய நிலைக்குக் கொண்டு செல்லும் தெய்வீகத் தன்மைபொருந்திய பெண்மணிகள் அடிமைப்படவே நாடும் அடிமைப்பட்டு அல்லல் அடைந்து கொண்டிருக்கிறது. நமது சகோதரிகளை மிருகங்களைக் காட்டிலும் கேவலமாக மதித்து நடத்தி வருகிறோம்.

இப்பொழுது மனமொத்த மணங்களைக் காண்ப தரிதாகி விட்டது. காதல் மணத்தைக் காணக் கருதினால், கனவில்த்தான் கண்டுகளிக்க வேண்டியிருக்கிறது. பால்ய விவாக மொருபக்கம், கிழவர் மணம் இன்னொருபக்கம், கட்டாயக் கைமை மற்றொருபக்கம், அடிமை வாழ்வு வேறொரு பக்கமாக நமது மாதர்களை வாட்டிக்கொண்டிருக்கின்றன. ஐயகோ! தாயார் மடிமீதிருந்து பால் குடிக்கும் ஒன்றுமே யறியாத பச்சைப்பசுங் குழந்தைகள் விதவைகளாம்! பள்ளியில் பயின்று கொண்டிருக்கும் சின்னஞ் சிறு பெண்கள் விதவைகளாம்! நன்றாய்க் கல்வி கற்றுப் புத்திக்கூர்மையுடன் பல வழிகளில் மேன்மையுற்று விளங்கும், பிள்ளையே பெற்றறியாத யௌவன மங்கையர்கள் விதவைகளாம்! ஆ! நமது நாட்டில் மாதரசிகளுக்குச் செய்து வரும் அருத்தமற்ற, பொருத்தமற்ற, ஈவு இரக்கமற்ற, குருட்டுத்தனமான, மூடத்தனமான, கால தேச வர்த்தமானத்திற் கொவ்வாத கொடுமைகளை எவ்வாறு ரத்ன சுருக்கமாகச் சொல்வது! இப்பொழுது அயல் நாடுகளைக் கவனித்துப் பாருங்கள். அங்கோரா நாட்டை நோக்குங்கள்; எகிப்து தேசத்தைப்பற்றி எண்ணுங்கள்; ஆப்கனிஸ்தானத்தைப் பற்றி ஆலோசியுங்கள்; வேலை செய்து விடுதலை பெறுங்கள்.

“எழுமின்! விழிமின்! கருதிய கருமம் கைகூடும் வரை உழைமின், “அறிமின்”

(ஸ்வாமி விவேகானந்தர்)

விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

---



# கவிதையின் பெருமை.

திரு. பண்டிதை அசலாம்பிகை அம்மையார்.

கவிதை என்பது ஈண்டு நமது தாய் மொழியாகிய தமிழ்மொழி இன்னிசைப் பாக்களையே குறிக்கும். கவிபாடும் ஆவலால் அதற்குப் போதிய அறிவாற்றல், பொருள் வளம், அநுபவம் முதலியவைகளைப் பெறாத நிலையிலும் சிலர் மொழிகளை அடுக்கியும், அழித்தும், திருத்தியும், ஒடித்தும், வளைத்தும், படாத அல்லல்கள் பட்டுக் கவி புனைகின்றனர். இவர்களின் அரைகுறையான புலமையை அவர்களால் யாக்கப்படும் போலிக் கவிதைகளை நன்கு புலப்படுத்தும். இது பெதும்பை யொருத்தி மடந்தைப் பருவம் பெற விரும்பி இடர்ப் படுவதையே யொக்கும். இவைகள் உண்மைக் கவிகளாகா.

மொழியியல்புணர்ந்த மூதுணர்வாளர்களால் சொல் நயமும், பொருள் வளமும், தளையியல்பும். ஓசையின்பமும் ததும்ப முயற்சியின்றி (பழம் புண்ணியத்தினால்) யாக்கப் பெறும் பாக்களையே கவிதைகளென் றுரைப்பது பொருந்தும்.

கவிதையின் உள்ளுறை, வீரத்தையோ அச்சத்தையோ சோகத்தையோ மகிழ்ச்சியையோ குறிக்கின்றதென்று அம் மொழியையே யறியாதாரும் உணருமாறு அவ்வக்குறிப்பை யுணர்த்தும் இனபேதத்தாலாகிய வன்மை, மென்மை, தண்மையாகிய ஓசைகளை யுடைய எழுத்துக்கள் மிகுதியும் விரவிய மொழிகளாலிணைக்கப்பட்டு அதற்கேற்ற ஓசையின்பம் பெருக்கும் சந்தங்களாலும் அமைக்கப் பெறும் கவிதைகளையே மொழியோவியங்கள் என அறிந்தநுபவிப்பர் பேறுடையோர்.

இதற்கு உதாரணமாக இரண்டொன்றை மட்டும் குறிக்கின்றேன்.

சுக்ரீவன் இராம சகாயம் பெற்ற தீரத்தினால் அஞ்சாது சென்று வாலியைப் போர்க்கு அறைகூவி யழைத்ததாகக் கூறிய

"இடித்துறப்பி வந்து போர் எதிர்த்தியேல்
அடர்ப்பனென்

றடித்தலங்கள் கொட்டி வாய்மடித் தடுத்
தலங்குதோள்

புடைத்து நின் றுளைத்த பூசல் புக்க தென்ப
மிக்கிடந்

துடிப்ப வங்குறங்கு வாலிதிண் செவித்
தொளைக்கணே"

என்ற பாடலில் வீரச் சுவையினையும்

இராமன் வனம்புகப் பணித்த சிற்றன்னையின் ஆணையைக் கேட்ட இலக்குவன் பொறாது கூறிய

"விண்ணாட்டவர் மண்ணவர் விஞ்சையர்
நாகர் மற்றும்

எண்ணாட்டவர் யாவரும் நிற்க
வோர் மூவராகி

மண்ணாட்டுனர், காட்டுனர், வீட்டுனர்
வந்தபோதும்

பெண்ணாட்டம் ஒட்டேன் இனிப்பே
ருலகத்துள் என்னா"

என்ற செய்யுளிற் கோபக் கொதிப்பினையும்

இராமன் பிராட்டியைப் பிரிந்து சோகத்தால் மெலிந்து புலம்பியதாகக் குறிக்கும்



"பஞ்சு பூத்த விரற் பதுமம்
பவளம் பூத்த சீறடியாள்

நெஞ்சு பூத்த தாமரையில்
நிலையம் பூத்தாள் நிறம் பூத்த

மஞ்சு பூத்த மலர் பூத்த
குழலாள் கண்போல் மணிக்குவளாய்

நஞ்சு பூத்தாலென்ன வென்னை
நகுவாய் இன்னல் தருவாயோ"

என்ற கவியிற் சோகரசத்தினையும் நோக்குவோர்க்குக் கவிதைகளின் பெருமை விளங்கும்.

இதுகொண்டே கவிதைகளை மொழி யோவியங்களென மேலே கூறியதும்.

முதிர்ந்த கருத்துக்களடங்கிய இன்னிசைக் கவிதைகளின் வற்றா வின்பம் விழைந்து கடவுளரும் அக்கவி வாணர்கட்கு எல்லா வகையிலும் தொழிற்பட்டு அவர்களை மகிழ்வித்தன ரென்பது நூல் வழக்காகும்.

அத்தகையார்களையே "அருட்கவி" "வரகவி" களெனப் புகல்வர்.

"கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டாம்—துணிவுடைய
செந்நாப் புலவனிதோ செல்கின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்"

என்னும் வெண்பாவினைத் தொண்டை நாட்டுத் தலை நகராகிய கச்சியம்பதி வாழ்ந்த செந்நாப் புலவர் கூறிய மாத்திரத்தில் ஸ்ரீ வரதராஜப் பெருமாள், புலவர்பெருமானை நன்கு மதியாத அரசனது நகரில் அவர் இன்றித் தானும் இருக்க விரும்பாது அக்கணமே திருக்கோயிலை விட்டகன்று மஞ்சணீர் ஆற்றங் கரையில் வந்தெழுந்தருளினானென்னும் சரிதம் ஒன்றே முத்தமிழ் வாணர்கட்கு மும்மூர்த்திகளும் ஈடுபட்டு நிற்பர் என்பதற்குத் தக்க சான்றாகும்.

# தேவியின் துயரம்.

## (எனது கனவு)

ஸ்ரீமாந். அளகை *M.* பொன்னுஸ்வாமி அவர்கள்.




இதென்ன காட்சி. நீண்டு அடர்ந்து தோன்றும் கார் முகிலுக்கிடையே பொலியும் பூரணச் சந்திரனா? ஓ! இல்லை—அது ஓர் மங்கையின் தோற்றமே. என்ன அழகு! வானிடைத் தோன்றும் மின்னல் கொடியோ? அவள் யாரோ? ஓர் அழகுத் தெய்வம்போலும். இருந்தும் என்ன? அவள் எழில் வதனத்தில் துயரமன்றோ நிரம்பிக் கிடக்கின்றது.” என்று பலவாறு எண்ணிக்கொண்டிருந்தேன். அவ

---

சுருங்கக் கூறுமிடத்து, மொழிக் கூட்டங்கள் யாவும் உடலாயின் அம்மொழிகளாலாக்கப்படும் கவிதைகளே அவைகட்கு நல்லுயிராகும்.

உடலிற்குத் தூய குருதி எவ்வாறு பொலிவு, செழிமை, வளர்ச்சி, உரம் ஆகிய நலன்களைப் பெருக்குவிக்குமோ, அவ்வாறே எம்மொழிகட்கும் வனப்பும், வளர்ச்சியும், பொலிவும், பெருமையும் அளிப்பது அவ்வம்மொழிகளினாலாகிய கவிதைகளேயாகும்.

கவிதைகளின் இன்பத்தையுணரும் பேறுடையார் மிகச் சிலரேயாகக் குன்றி நிற்கும் இஞ்ஞான்று, மொழிப்பற்றினாலன்றி நாட்டுப் பற்று உயிர்த்தெழாதென்னும் உண்மையைக் கண்டுணர்த்துவோர் பலர் தோன்றியிருப்பது நற்காலத்தின் அறிகுறியே. மொழிப்பற்றென்பது கவிதையின்ப நுகர்ந்தாலன்றி உண்மைக்கால் கொள்ளாது. இதுபற்றியே இக்கட்டுரையை நாட்டுப் பற்றினுக்கு நல் வழியாக மேற்கொண்டு கண்ணுறுமாறு வேண்டுகின்றேன்.

---



ளும் என் பக்கத்தில் நெருங்கினாள். அண்மையில் வரவும் “தாயிடம் சேய்க்குள காதல்” என்னுள்ளத்தில் எழுந்தது. “தேவி தாங்கள் யார்?” என வினாவினேன். “சிறுவ! நான் நினது தாய்; நீ, யான்பெற்ற சேயன்றோ!” என்றாள், அன்பேயுருவா யமைந்த அவ் வணங்கு. மேலும் அவ்வழகுத் தெய்வம் “மகனே! இன்னுமா உறக்கம்? எழு! எழு!! நான் துயருற, நீ துயில்கின்றனையே! இதுவா தாய்க்கு மகனாற்றுங் கடன்!” என்றாள். “தாயே! அப்படியாயின் தங்களுக்குற்ற துயரம் யாது?” என்று கூறித் தாயின் அடியை வணங்கினேன். அருளே வடிவாயமைந்த அன்னை, பின்வருமாறு கூறினாள்:—

“மகனே! நீ கோழையா? அல்லது தீரனா? எதை நீ விரும்புகிறாய்? வாழ்க்கையில் அரசு வீற்றிருக்கும் நிலையா? அல்லது மிகப் பணிந்த அடிமைத்தனமா? உன்னைப் பெற்ற இவ் வயிற்றுக்குப் பெருமை கொடுக்கவேண்டுமென்று எண்ணினால் எழு! நான் கூறுகின்றபடி செய்! ஜாதி வேற்றுமைகளையும் மத வேற்றுமைகளையும் எட்டத் துரத்திவிடு. உனது சகோதரர்களை முதலில் ஒற்றுமைப்படுத்து—ஒன்றுசேர். பின் வாங்காதே. இதுவே ஆண்மை. சக்தி உன் வசத்திலிருக்கின்றது. ஜாதி விதிகளின் பயமும், பழைய வழக்கமென்ற பயங்கரமான பிசாசும் துரத்தப்பட வேண்டும். அவைகளே உனது முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கின்றன. அவைகளுக்கு நீ அஞ்ச வேண்டாம். மனு வசித்த காலம் எப்பொழுதோ போய்விட்டது. பூமியானது பல மாறுதல்களை அடைந்துவிட்டது. அடர்ந்த காடுகள் கொளுத்தப்பட்டுப்போயின. புஷ்ப ஜாதிகளும், மிருக ஜாதிகளுமே மாறிவிட்டன என்பதை எண்ணிப்பார்.

ஆதித் திராவிடரையும் உனது சகோதரராகப் பாவித்து நடத்து. அவர்கள் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைப்பதனாலன்றோ, உனது வாழ்க்கை இன்பமாகக் கழிகின்றது. அப்படியானால் அவர்களை அவமதிக்க நீ யார்? அவர்கள் உங்கள் தெருக்களில் நடக்கக்கூடாதாம். குடிக்கத் தண்ணீர் எடுக்கக்கூடாதாம். ஆ! என்ன கொடுமை! அதனாலல்லவா அவர்கள் நாள்தோறும் குறை

ந்துகொண்டே போகின்றார்கள். அதனால் உன்னைப் புதைக்க நீயே குழி தோண்டிக் கொள்கிறாய். அவர்களை நடத்திய கொடுமையை இப்போது அந்நியரிடம் அனுபவிக்கின்றாய். இந்தக் கொடிய நோயை முதலில் தீர்த்துக்கொள்ளப் பிரயத்தனப்பட வேண்டும். அல்லாவிடின் சுதந்திர மென்ற வீட்டை அடையமுடியாது.

மகனே! உங்களில் எத்தனைபேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களென்பது உனக்குத் தெரியுமா? அந்தோ! என் மனங் கூசுகின்றது; வெட்கத்தால் தலை குனிய வேண்டியவளாக இருக்கின்றேன். அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய அந்நிய நாடுகளைப் பார்ப்பாயாக. எங்கும் கல்வியைப் பரப்ப முயலுவாய்! மேனாடுகளுக்குச் சென்று கைத்தொழில் முறைகளைக் கற்றுவர ஆட்களை அனுப்பு! அப்படியானால் தான் பனியால் நனைந்து, வெயிலால் உலர்ந்து, பசியால் அலைந்து, உடல் மெலிந்து திரியும் கோடிக்கணக்கான உனது சகோதரர்களைக் காப்பாற்ற முடியும்.

உனது சகோதரிகளைப்பார்! இது என்ன அநியாயம்! கோடிக் கணக்கான பெண்மணிகளை ஒன்றுக்கும் உதவாதவரென்று கட்டிப் போட்டு வைத்திருக்கின்றனையே! குழந்தைக்குத் தாலி கட்டும் கொடுமையல்லவா அவர்களை அவ்விதம் செய்து விட்டது. எதிர் காலத்திற்குப் பாத்தியப்பட்ட சிறுவனே! நிறுத்து! நிறுத்து! அக் கொடிய வழக்கத்தை உடனே நிறுத்து! சன்மார்க்கம் செழிப்பதற்காகவும், உன்னுடைய முன்னேற்றத்திற்காகவும், உன் பெருமைக்காகவும், உன்னுடை சந்ததிகளுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். உறுதியுடன் முன்வருவாயாக! வெகுகாலங்களுக்கு முன், குளிர் நடுக்கியபோது போட்டு வந்த உடுப்புக்களை, இந்தக் கொடிய கோடைகாலத்தில் போட்டுக்கொள்ள விரும்புகிறாயா? உங்கள் கொடிய விதிகளால் துன்புறும் பெண்மணிகளுக்குச் சுதந்திரத்தைக் கொடுப்பாயாக! இன்னும் என்னால் அதிகம் பேசிக்கொண்டிருக்க முடியாது. சுதந்திரத்தை அடைவதே என் துயரைப் போக்குவதாகும்" என்று கூறி மறைந்தாள். அது யார்? என் அன்னை பாரததேவி—என் தாய் "பாரதி."



# நாகரீகமென்பது யாது?

ஸ்ரீமான் கு. கோ. கிருஷ்ணன், B. Sc. (Hon.)



மானிட வாழ்க்கை வழி, பண்டைக் காலத்திலிருந்து புறப்பட்டு இவ்வளவு காலங்களாக வளர்ந்து வளர்ந்து சென்று தற்போது யாதொன்றும் தோன்றாத எதிர் காலத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இம் மானிட மார்க்கத்தின் மர்மத்தை ஆராய்ச்சி செய்வதைப் போல எவ்வித ஆராய்ச்சியும் மனதிற்கு அவ்வளவு குதூகலத்தைத் தரத்தக்கதன்று. இவ்வழி பற்றிச் சென்றவர்கள் புதிய உலகத்தின் மகத்துவத்தைக் கண்டு மகிழ்ந்திருக்கின்றனர். இவர்கள் உலகத்தில் சிற்சில பாகங்கள் தோன்றலையும், சிற்சில மறைதலையும், எரி மலைகளையும், பூமி அசைவையும், வெள்ளங்களையும், புயலையும், பனிக் கட்டிகளையும் கண்கூடாகக் கண்டு மறைந்தனர். இம் மானிட வாழ்க்கைவழியிலுண்டான சம்பவங்களில், மானிடர் தங்களுக்குச் செவ்வனே கிடைக்கப்பெற்ற சக்தி-தேகசக்தி, மூளைச்சக்தி, மனோசக்திகளின் விடாமுயற்சியினால் மிக்க மேம்பாட்டை யடைந்திருக்கின்றனர்.

மானிடக் கூட்டமும் முன்னேற்றமடைய ஒருவர்க் கொருவர் உதவி புரிவது இன்றி யமையாததென மானிடர் நன்கறிந்தார்கள். இதைக் கற்றுக்கொள்ள மானிடர்களுக்கு மிக்க காலமும், மிக்க கஷ்டங்களும் ஆயின. இம்மானிட வாழ்க்கை வழியில் காரணங்களும் அவைகளின் உற்பத்திகளும், முயற்சிகளும், இகழ்ச்சிகளும்,

ஜெயிப்பும் தோல்வியும் உண்டாகி அவைகளால் மானிட முன்னேற்றம் தொடங்கிற்று. இப்படியான மானிட வாழ்க்கை வழி பற்றி உண்டான விருத்திக்கு நாகரீகமெனப்பெயர்.

வில்லும், அஸ்திரமும், கல்லினால் கோடரிகளும், மற்றப் பண்டை ஆயுதங்களும் உண்டாக்கிய அந் நாளிலிருந்து நாகரீகந் தொடங்கிற்று. துஷ்ட மிருகங்களிடமிருந்து தப்பிக்கவும், வசிக்க வீடுகள் உண்டாக்கவும், ஆகாரங்கள் தேடிக்கொள்ளவும், மானிடர் ஒருவரோடொருவர் ஒற்றுமையோடு வாழவும் முற்பட்ட காலத்திலிருந்து மானிட நாகரீகம் பெற்றுத் தற்போது எண்ணவும் எழுதவுங் கூடாத கைத்தொழில் ஜன சமூக வாழ்க்கை முதலிய விருத்திகளில் உன்னத பதவியை யடைந்திருக்கின்றனர்.

ஒரு கூட்டத்தார் தாங்கள் நாகரீகத்தில் முன்னேற்றமடைந்தவர்களென்றும், மற்றக் கூட்டத்தார் அநாகரீகமுள்ள காட்டு ஜாதிகளென்றுஞ் சொல்லிக் கொள்வது சகஜம். இந்தியா, சீனா, ஜப்பான், கிரீஸ், எகிப்து முதலிய தேசங்கள்தான் முன் காலத்தில் முதன் முதலாக நாகரீகத்தில் முன்னேற்ற மடைந்த நாடுகள். அக் காலங்களில், காட்டு ஜனங்களாய்த் திரிந்த மேனாட்டார், கீழ் நாடுகளின் நாகரீக வாசனையாலும் தங்கள் விடா முயற்சியாலும் சிரேஷ்ட அமைப்பாலும் நாகரீகத்தில் முன்னேற்றமடைந்திருக்கின்றனர். அப்படியிருப்பினும் இந்தியா, சீனா, ஜப்பான் இம் மூன்று தேசங்களிலும் மேனாட்டார் இன்னும் அறிந்துகொள்ளக் கூடிய நாகரீகம் புதைந்துகிடப்பதைப் பல மேனாட்டார்களே ஒப்புக் கொள்ளுகின்றனர். அமெரிக்காவிலுள்ள செந்நிற இந்தியர் (Red Indians)களைத் தங்கள் எளிய வாழ்க்கையால் நாகரீகத்தில் குன்றியவர்களென்று கூறுவர் பலர். ஆனால் அவர்கள் சொல்திறம் பாலமையிலும், நம்பிக்கையிலும், ஊக்கத்திலும் மேலாக விளங்கும்போது, ஏதோ நாகரீகத்தில் மட்டும் மேன்மையடைந்தோமெனக் கூறிக்கொள்ளும் சில கூட்டத்தார், அவர்களை எப்படி முற்றிலும் நாகரீக மற்றவர்களெனக் கூறிவிடுவது?



‘காக்கைக்குந் தன்குஞ்சு பொன் குஞ்சு’ என்றபடி ஒவ்வொரு இனத்தாரும் நாகரீக மற்றவர்களென்று சொல்லப்படும் மற்றோரினத்தாரிடமிருக்கும் அரிய பெரிய குண குணங்கள், தங்களிடமில்லாமை கண்டும் அவர்கள் நாகரீகத்தில் குன்றியவர்களென்றும் தாங்கள் மேன்மை யடைந்தவர்களென்றுங் கூறிக்கொள்ளுகின்றனர்!

நாகரீகத்தினா லுண்டான நன்மைகளில், தானிய விளைவு பொருட்கள், நாடு நகரங்கள், வியாபாரங்கள், கைத் தொழில்கள், கோவில் குளங்கள், பள்ளிகள், நியாய ஸ்தலங்கள், ஜெயில்கள், சட்டங்கள், ஆஸ்பத்திரிகள், தர்மசாலைகள், புகை வண்டிகள், பல வகைக் கப்பல்கள், கம்பியில்லாத் தந்திகள், மின்சாரத்தா லுண்டாகும் பல அரிய செய்கைகள், உடை நடைகள், அழகு, திடகாத்திரம் ஆகிய இவைகளும் சில. இவைகள் நாகரீகத்தா லுண்டான விளைவுகளே யன்றி நாகரீகத்தின் தன்மையின் உருவங்களன்று. கடவுள் வழிபாட்டிலும், தர்ம ஊழியத்திலும், ஜனசமூக உழைப்பிலும், கல்வி அபி விருத்தியிலும், மானிடரின் ஒரே மன ஒற்றுமையே நாகரீகத்தின் தன்மைகளில் சிலவற்றைக் குறிக்கின்றன. மானிடரின் நினைப்பின் வல்லமையும், குண குணங்களும், பலருக்கும் உதவி புரியுந்தன்மையில் வாழும் வாழ்க்கையும் உண்மையான நாகரீகத்தின் தன்மையில் சிலவாம்.

சுமார் நூறு வருஷங்களுக்கு முன்னும் பின்னுமுள்ள வித்தியாசங்களை நோக்கின், காட்டுத் தன்மைக்கும் நாகரீகத்திற்குமுள்ள பேதங்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தோன்றுகின்றதன்றோ? இயற்கையின் தன்மையும், மற்றும் எவ்வித கல்வி வாசனையுமடையாத ஓர் பண்டைக் காலத்து மனிதனை, அவன் என்றும் பாராத ஒருலகத்தில் திடீரென்று தோன்றச் செய்துவிட்டால், அவன் தன்னைக் காப்பாற்றும் வழிகளைத் தானாகவே தேடிக் கொள்ளுகிறான். பசி சகிக்க முடியாது ஆகாரத்தைத் தேடிக்கொள்ளுவான். மழை புயல் சூரிய வெப்பங்களின் கஷ்டங்களைச் சகிக்காது அணிய ஆடையையும், தங்க வீட்டையுந் தேடிக்கொள்வான். இவ்வித

இயற்கையின் போதனையால், தான் செய்புந்தொழில்களில் தேர்ச்சி யடைந்துகொள்ளுகிறான். பிறகு இயற்கையாகவே தனக்கு வேலை செய்யும் வழியைக் கண்டுபிடிக்க முயல்கிறான். ஆதியில் நாகரீகத்திற்கு, இயற்கையா லுண்டான பலவித உணர்ச்சிகளே குருவாயிருந்தன. பிறகு அவைகளே அடிமைத் தொழில் செய்யும் நிலைமையில் புகுத்திவிட்டன. இந் நிலைமையைபடைய எவ்வளவோ காலமாயின. இன்னும் நாகரீகத்தால் எந்நிலைமை யடைவோமோ யாரறிவர்?

நாகரீகம் பற்பல விடங்களில் பற்பல விதமாகத் தோன்றப்படுகின்றது. தங்களைச் சுற்றி இயற்கையா யமைந்துள்ளவைகளுக்கு ஒப்பும்படிக்கு நடந்துகொள்ளக் கூடிய உயிர்கள் பலவிதங்களாய்ப் பல விடங்களி லுண்டாகின்றன. மேலும் இவ்வுயிர்களின் கொள்கைகளும் மாறுகின்றன. ஆதலால் பெர்சியன், கிரீக்ஸ், ரோமர்கள், சீனர்கள் ஆகிய இவ்வினத்தாரின் கொள்கைகள், "தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு" என்பது போலவே வெவ்வேறாகியிருப்பது பிரத்தியட்சம். மிக்க அமைதியாயிருக்கும் பிரமிட்ஸ் (Pyramids) என்ற சிகரங்களும், கோவில்களும் நாகரீகத்தின் உயர்தரத்தை உலகத்திற்குக் காட்டியபோதிலும் எகிப்து தேசத்தாருக்கு அதின் உயர்வு தோன்றவில்லை. மேல்நாட்டு நாகரீகம் ஓர்விதத்தன்மை உடையது. இம் மேல்நாட்டாருக்குள்ளேயும் நாகரீகத்தில் வேற்றுமை பல உள. ஆனால் இவ்வேற்றுமைகள் அவர்கள் நெருங்கிப் பழகுவதினாலும், ஓரினத்தார் மற்றோரினத்தில் மணஞ் செய்து கொள்வதினாலும், அதிகமாகக் குறைந்து வருகின்றன. ஆனால், கீழ் நாடுகளில் இவ்விதப் பழக்கங்கள் இல்லாமையாலும் தீண்டாமை முதலிய தீக் குணங்களினாலும் நமது நாகரீகம் முன்னேற்றமின்றிப் பலர் நகைப்புக்கிடமாகி யிருக்கிறது. பண்டைநாட் பழக்க வழக்கங்கள், இன்று மானிடரை ஆண்டு வருகின்றன. தங்கள் வம்சத்தார்களால் அநுசரித்துவந்த வழக்கங்களைத்தொண்டு தொட்டுக் கடைப்பிடித்துத் தங்கள் வாழ்நாட்களுக்கு இன்றியமையாதவைகளாகப் போற்றிவருவது மிகவும் வருந்தத் தக்கதே. இவ் வழக்கங்களைப் பொதுவாக எல்லா இனத்தார்களும் (முக்கியமாகக் கீழ் நாட்டார்கள்) கையாண்டு வருகின்றனர். தங்கள் மூதாதைகளெப்படியோ அப்படியே தாங்களும் நடந்து வருகின்றனர். அந்தோ! தங்கள் மூதாதைகள் நடந்துசென்ற அந்நெறி பற்றிச் செல்லாவிட்டால் பாவிகளாகி விடுவதாகவும், முன்னோர் எழுதிவைத்த நூல்களைத்தான் படிக்கவேண்டுமென்றும் பெரும்பாலர் கருதுகின்றனர். என்னே இவர்கள் கூற்று! ஏதாவதோர் விஷயம் முடிக்க வேண்டியிருப்பின் அதை முடிக்க நல்லதோர் வழியிருப்பினும், அதைப் புறக்கணித்து வழக்கமாகச் செய்து முடிக்கும் வழி (மிக்க கஷ்ட நஷ்டமாயினும்) ஏதோ அதனையே கையாண்டு வருவதை நோக்க ஒரு புறத்தில் வருத்தத்தையும் மறு புறத்தில் நகைப்பையும் உண்டுபண்ணுகிறது. சட்டங்களாகப் பாவித்துவரும் நம் மூடப் பழக்க வழக்கங்களை வேரோடு பிடுங்கிவிட்டு நம் பகுத்தறிவைக் கொண்டு எச் செய்கையையும் முடிக்க முன் வந்தாலன்றி நாம் ஒருபோதும் முன்னேற்றமடைய மாட்டோமென்பதில் ஐயமுண்டோ?



நாகரீகத்தின் விளைவு முன்னேற்றம். இன்னும் மானிடர் முடிவான முன்னேற்றத்தை யடையவில்லை. ஆதலால் மானிடர் இன்னும் முயற்சியில் தளராது முன்னடக்கவேண்டியிருக்கின்றனர். அறிவு விசாலப்படவும், நற் குணங்கள் விருத்தி யடையவும், சுதந்தரம் பெருகவும், ஜன சமூகம் ஒத்து வாழவும், இன்னும் உயர்தரமடைய வேண்டும். நாம் முன்னேறும் வழியில் தளர்ந்து நின்றுவிடக்கூடாது. அப்படி நின்றுவிட்ட தேசத்தார் யாரோ அவர்கள் அழிந்தவர்களே. முன்னேற்றம் பொதுவாக இருப்பினும், ஒரு பக்கத்தில் தனித்தனி மாந்தர்களின் மேன்மையாலும், மறு பக்கத்தில் ஓர் இனத்தாரின் மேன்மையாலும், காட்டப்படுகிறது. மாந்தர் தனித்தனி மேன்மையும், இன்ப வாழ்வும் பெறவே முற்படுவது சகஜம். ஆனால் தற்காலம் ஒருவர்க்கொருவருண்டான கேண்மை, ஒற்றுமை, நட்கை முதலியவைகளில் முன்னேற்ற மடையாது, தனித்தனி முன்னேற்றம் எவ்வாறடைவது? தனித்தனி முன்னேற்றத்திற்குடைய செய்கைகளைச் செய்தால் சுதந்தரம் எவ்வாறடைவது?

# நைட்டிங்கேல் அம்மையார்.

ஸ்ரீமான் ரகுபதி சர்மா அவர்கள், *M. A., L. T.*

‘லீ’ என்பதோர் அழகிய சிறு கிராமம். அது இங்கிலாந்து தேசத்து டெர்பிஷயர் ஜில்லாவில் உள்ளது. இவ்வூரினைக் காண வருபவர் எவரும் மூங்கிற் கூடு ஏற்றிய வண்டி ஒன்றினைக் காணேரிடும். இதன் வரலாற்றை அவ்வூரில் எவரை வினவினும் அவ் வண்டி, பிறர் துயரந் தீர்க்கவே பெரிதும் பாடுபட்ட மாதுசிரோன்மணி ப்ளாரன்ஸ் என்பவருக்குரியது என்றும், முன்னொருக்கால் இவ் வண்டி யுத்தகளத்தின்கண் காயமடைந்து வீழ்ந்த வீரர் பல

---

நாகரீகமடைந்த மனிதரின் நோக்கந்தான் என்ன? ஏன் மானிடர் விடா முயற்சியைக் கடைப் பிடிக்க வேண்டும்? கடைசியான வாழ்க்கைதானென்னே? எதனையடைய மானிடர் வாழ்கின்றனர்? உடைக்கும், உணவுக்குமே என்று எளிதில் பதில் உரைத்துவிடலாம். அல்லது, நல்ல வாழ்க்கையையடையக் கடவுள் சிந்தனையிலேயே இருக்கவென்று எளிதில் பதில் அளித்துவிடலாம். அன்றிப் பண்டை விஷயங்களை யறியப் புஸ்தகங்களையே படித்து, உண்மைகளைக் கண்டு வாழ் நாளைக் கழிக்கவென்றுவது சுருக்கத்தில் சொல்லிவிடலாம். ஆனால் உயிரின் முடிவையும், உண்மையான நாகரீகத்தின் எல்லையையும் அறிவது எளிதல்ல. சரியாகப் பெருவாழ்வை யடைதலும், நன்னெறியில் சந்தோஷத்தைப் பெறுதலும், தன் இனத்தாரோடு நல்ல விதமாக நல்ல நோக்கத்தோடு ஒத்து வாழ்தலுமே ஒவ்வொரு மானிடரின் முக்கிய நோக்கமாக இருத்தல் வேண்டும். இதற்கு இன்றியமையாததாயிருப்பது முன்னேற்றமே. ஆதலால் நம் பரத நாடு நாகரீகத்தில் முன்னேற்றமடைந்து கூடிய சீக்கிரம் சுதந்தரம்பெற நாம் எல்லாம்வல்ல இறைவனைப் போற்றி பெருமுயற்சியி லீடுபடுவோமாக.



ரையும் ஏற்றிச் செல்லப்பட்டதென்றும் கூறுவர். இம் மங்கையர் திலகந்தான், சரித்திரக்காரர்களால் மிகவும் புகழ்ந்து பாராட்டப்படும் ப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் என்பவராவர். இவர் ஐரோப்பாவில் கிரிமியன் யுத்தம் நடைபெற்ற காலத்து இருந்தவர்.

## பிறப்பும் பால பருவமும்

இத்தலி தேசத்தின் கண், நானாவித சிருங்காரங்களோடு கூடிய புஷ்பங்கள் பலவும் பூத்து அலங்காரமாய் விளங்கிய பூந்தோட்டங்களின் வனப்பு மிகுந்த ப்ளாரன்ஸ் என்னும் நகரில், 1820-ம் ஆண்டு மேமீ நைட்டிங்கேல் என்பவருக்கும் அவரது மனைவியாருக்கும் ஓர் பெண்மகவு பிறந்தது. அந் நகரின் அழகு, அதனைக் கண்டோர் மனதனைத்தையும் கவரும் இயல்புடையதாய் விளங்கினமையால் அந் நகரின் பெயரையே அக் குழந்தைக்கும் சூட்டினர். சின்னாட் கழிந்த பின், தங்கள் தாய்நாடாகிய இங்கிலாந்திற்குச் சென்று “லீஹால்” என்ற பெயருடன் விளங்கி நின்ற தங்களது வீட்டினையடைந்து இல்லறம் நடத்தி வந்தனர். இப் பெண்மணியின் பால பருவம் இக் கிருஹத்திலேயே கழிந்தது. “விளையும் பயிர் முளையிலே” என்னும் முதுமொழிக் கிணங்க இக் குழந்தையின் பால்ய விளையாட்டுகளும் செய்கைகளும் இவரது பிற்கால வாழ்வின் பெற்றியைப் பெரிதும் விளக்குகின்றது. இக் குழந்தை, தான் விளையாடும் பிரதிமைகளை மிக ஜாக்கிரதையாகவும் கருணையுடனும் காப்பாற்றி வந்தது. அவைகளின் மீது பிறர் கை படச் சற்றேனும் சகியாது. “பார்த்தி” என்னும் அவளது சகோதரியோ அவ்விதப் பிரேமை, தன் பிரதிமைகளிடம் பாராட்டினாள் இல்லை. அதனால் அவைகளிற் சில கைமுறிந்தன, காலொடிந்தன; மற்றும் சில தீக்கிரையாயின. கை கால் முறிவுபட்ட பிரதிமைகளை ப்ளாரன்ஸ் என்னும் குழந்தை, தான் பழுது பார்ப்பதாக அக் கை கால்களைச் சேர்த்துப் பொருத்துவதையும், போலி ரணக் கட்டுகள் கட்டுவதையும் பார்க்க ரண வைத்தியத்திற் கைதேர்ந்தவரும் வியந்து மெச்சத் தகுந்ததாயிருந்தன.

## ஓர் நோயுற்ற நாய்க்குச் சிகிச்சை

நோயுற்றவரின் துயரை நீக்குவதே உவகையெனக் கொண்ட இச் சிறுமி, பத்துவயது நிரம்பியதும் ஒரு நாள் தனது நண்பரில் ஒருவராகிய "ரோஜர்" என்னும் ஆட்டிடையரைச் சந்தித்தாள். அவ்வமயம் அவரது நாய் சில துஷ்டச் சிறுவர்களால் கல்லெறியுண்டு பெருங் காயப்பட்டு வருந்துவதையும், அன்று அந் நாயினது உதவியின்றித் தான் மிக வருந்துவதையும், அந் நாய் படும் துயரினைக் காண மனம் தாழாமையால் அதனைக் கழுத்தில் சுருக்கிட்டுக் கொல்வதே நலமென்று தான் தீர்மானித்திருப்பதையும் அவர் சொல்லக் கேட்டனள். அச் செய்தியைக் கேட்ட அளவில் மனமிளகி இரங்கி "அதற்குச் சிகிச்சை செய்வது அசாத்தியமா" என்றனள். அதற்கு அந் நண்பர் யாதொன்றும் செய்ய இயலாத நிலையென்றும், அது வருந்துவதைப் பார்க்க அதை வதை செய்வதே அதற்கு மிகுந்த நலமென்றும் பதிலளித்தார். அப்பொழுது அவருடன் நின்று கொண்டிருந்த அவ்வூர்ப் பாதிரியையும் உடன் அழைத்துக் கொண்டு அந் நாயினைக் காணச் சென்றனள். ரோஜர் வீட்டுக் கொட்டத்தில் மண் தரையில் மிகவும் அவதியுடன் படுத்திருந்த அந் நாயை அருகிலுற்று நோக்கினள். அதன் கால் முறிவுபடாமல், பெருங் காயமட்டும் இருந்ததைக் கண்டனள். அச் சமயம் அந் நாய் மிக வருந்திய பார்வையுடன் அவளை நோக்கிற்று. அந் நோக்கு, அவளது அன்பினையும், ஆதரவினையும் யாசித்து நாவால் பகர்ந்ததுபோல் தோன்றிற்று. அன்று முதலே காயத்தாற் கடுந் துயர் உற்றவரின் கண்ணோக்குகள், இவரது கருணைக்குப் பாத்திரமாயின. பெற்றோருக்குத் தன்னைத் தேடாதிருக்குமாறு செய்தி விடுத்துவிட்டு, அன்று முழுதும் நாயினது காயத்தைச் சொஸ்தப் படுத்துவதில் மனவூக்கத்துடன் பாடுபட்டாள். நன்றியறிதலையே இயற்கைக் குணமாகப் பெற்ற அவ்வற்பப் பிராணியும் அவரது சிகிச்சைகளை நன்குணர்ந்து மிகவும் பொறுத்திருந்தது. அன்று மாலை நண்பர் ரோஜர், வீட்டையடையவும் நாயினது ரணம் ஆறி வருவதைத் தெரிவித்துத் தன்னில்லம் சேர்ந்தாள். கொல்லப்படும் நாய் குணப்பட்டுவிட்டது.



## கல்விப் பயிற்சி

ப்ளாரன்ஸ் மங்கையும், அவரது சகோதரியும், ஓர் உபாத்தியாயினியை அடைந்து, வாழ்நாள் முழுவதும் உற்ற துணையாய் விளங்கும் நற் கல்விகள் பல பயின்று, நல்லொழுக்கத்திலும் சிறப்புடைந்து வந்தனர். அவரது பிதா இவரது ஊக்கத்தினையும், புத்திக் கூர்மையையும் நன்குணர்ந்து, இவரது, கல்வியினை அபிவிருத்தி செய்யும் பொருட்டுப் பல ஏற்பாடுகள் செய்வாராயினர். இவ்வாறு கல்வி பயின்று வருங்கால், இவரது மனத்தில் நோயுற்றவரின் துயரைத் துடைக்கும் தொழிலாகிய தாதி (Nurse) யாகத் தான் ஆகவேண்டுமென்ற எண்ணம் உதிக்கலாயிற்று. அதற்குத் தக்க சமயமும் தனக்கு நேருமென்றும் இவரது உள்ளத்தில் தோன்றிற்று. தன் தந்தை செல்வவந்தராயும், செல்வாக்குள்ளவராயும் விளங்கினமையால், பிரபுஜன சமூகப் பழக்கமே பெரும்பாலும் இருந்தாலும் இவர் ஏழைகளிடையே சென்று பழகி அவர்களது குறைகளை நீக்குவதே இவருக்கு முக்கிய தொழிலாக இருந்தது.

## தேச சஞ்சாரம்

இவர் தனது மங்கைப் பருவம் அடைந்ததும், அப்பொழுது தன் மனதிலுதித்த தாதித் தொழிலையே மேற்கொண்டு வாழ்வதாகத் தீர்மானித்தார். இவரது நெருங்கிய பந்துக்களிருவர், கொடும் நோயால் பீடிக்கப்பட்டு வருந்த, அவர்களுக் கியற்றிய உதவியின் பயனாய்ப் பிணியாளரைப் பேணும் திறமை இவருக்குத் தேர்ச்சியில் வந்தது. அவ் விருவரையும் பேணுதல் முடிவு பெறவே, இவ்வாறு பிணியாளரை நன்றாய்ப் போற்றும் முறைப் பழக்கத்தினைக் கற்றறிய முயற்சி செய்வார் ஆயினர். இச் சமயம் பிறர் நலமே தன்னலமெனக்கொண்டு ஒழுகிக் கீர்த்திபெற்ற "எலிஸபெத் பிரை" என்னும் மாதுசிரோமணியைச் சந்திக்க நேரிட்டது. அன்னவரின் உயரிய நற்குணங்கள், நமது நங்கைக்கு நல்லொளி வீசி வழிகாட்டும் விண் மீன்கள்போல் என்றும் நல்வழியே பூண்டொழுக

வழிகாட்டிகளாயின. இம் மாதைச் சந்தித்த சமயம் நற் சமயமென்றே கூறவேண்டும். ஏனெனில் இம்மாது, சிறையில் அடைபட்டுள்ள பெண்கைதிகளின் முன்னேற்றத்திற்காக வெகுநாட்கள் பாடுபட்ட அரும் பெரும் செயல்களின் பயனாய் இம் மாதின் கியாதி, எங்கும் பரவியது. இம்மாது, தன்னைப்போன்று, பிறர்க்கென்றே தொண்டு பூண்டொழுகும் குணச்சிறப்பை அணிகலமாகக் கொண்ட பெண்மணியைத் தேடித்திரிந்த சமயம் இம்மாதினிடமிருந்து ஜெர்மனிய தேசத்தில் டஸல்டார்ப் என்னும் நகரத்தினருகே கெயிஸர்வெர்த் என்னுமிடத்தில் மருத்துவப் பயிற்சிசாலை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருப்பதையும், அதன் விசேஷ தகவல்களைப் பற்றியும் தெரிந்து கொண்டனர். சிறிதுகாலம் இங்கிலாந்து, பிரான்ஸு, ஜெர்மனி, இத்தாலி முதலிய தேசங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் அத்தொழில் முறை ஏற்பாடுகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதைத் தேச சஞ்சாரம் செய்து நேரில் பார்வையிட்டுத் தெரிந்து கொண்டார். பின்பு கெயிஸர் வெர்த் மருத்துவப் பயிற்சி சாலையையடைந்து தன் பொருட் செலவு செய்துகொண்டே அத் தொழின் முறைமைகளை நன்கு பயின்றார். சில மாதங் கழிந்த பின்னர்த் தன்னூரையடைந்தார். அப்பொழுது ஆரோக்கியக் குறைவு ஏற்பட்டது. அதனால் தன் மனதில் கொண்டபடி பிணியாளரைப் பேணுதல் சரிவரச் செய்ய முடியவில்லை. ஆயினும் லண்டன் நகரில் சில காலம் அத் தொழிலிலும், சில காலம் தன் தேக சௌகரியத்தை விருத்தி செய்வதிலும் கழித்துவந்தார்.

## யுத்தரங்க வேலை

தான் கற்ற கல்வியையும் பிணியாளரைப் பேணும் பயிற்சியையும் எவ்வாறு பிறருக்குப் பயன்படுத்துவோம் என்றிருந்த இம் மாதரசிக்கு ஐரோப்பாவில் ருஷியாவோடு ஏற்பட்ட கிரிமியா யுத்தம், ஒரு பெரிய சந்தர்ப்பமாய் வாய்த்தது. அதற்கு இடையில் நேர்ந்த "இங்கர்மென்" சண்டையில் நேசக்கட்சியினரான இங்கிலாந்து, பிரான்ஸு, ஜெர்மனி, இத்தாலி, துருக்கி முதலிய தேசத்துப் படை வீரர் காயமடைந்து மிகவும் வருந்தினர். பிரான்ஸு சைந்யங்களுக்கு மட்டுமே உதவி புரியத் "தயாளச் சகோதரிகள்" என்ற மாதர்கள் அங்குச் சென்றிருந்தனர். பிரிட்டிஷ், வீரர்களுக்குச் சில காவலாளரின் பராமரிப்பே யிருந்தது. அவர்கள் சரியான சிகிச்சை பெறுமையால் கவனிப்பாரின்றி மிகவும் பரிதாபகரமான நிலையில் இருந்தனர். அக் காலத்தில் அப் படை வீரர் படும் கஷ்டத்தைக் கண்ணாரக் கண்டு மனம் சகியாது யுத்த களத்திலிருந்த நிருபர் வில்லியம் ஹாவர்டு ரஸல் என்பவர் அக் காயம் பட்டவருக்குச் சிகிச்சை செய்ய முன்வர வேண்டிப் பிரிட்டிஷ் மாது சிரோன்மணிகளைப் பிரார்த்தித்தார். அவர் வேண்டுகோளுக் கிணங்கிப் பல ஆங்கில மாதர்கள் முன்வந்தனர். ஆனால் இவர்களில், சென்றவிடத்தில் செய்யவேண்டிய வேலைகளை ஒழுங்குபடுத்தி அதற்குரிய திட்டங்களைச் சீர்படுத்தி மேற்பார்வையிட்டு நடத்தத் தகுந்த ஒருவரும் அமையவில்லை. ப்ளாரன்ஸ் நைட்டிங்கேல், தான் தேசத் தொண்டிற்காக எவ்வித வேலைகளையும் ஒப்புக் கொள்வதாய் மனுச் செய்து கொண்டிருந்தார். அவ்வாறிருக்க இவளையும் இவரது மருத்துவத் திறமையையும் நன்கு தெரிந்திருந்த யுத்த தளகர்த்தரான சிட்னி ஹெர்பார்ட், அவரைப்பற்றி அவரே மருத்துவக் கூட்டத்தினை ஒழுங்கு படுத்தி வேலை வாங்கும் திறமை வாய்ந்தவர் என்று தன் நண்பர்களுக்குச் சிபார்சு செய்ததின் பயனாய் அவரை அரசாங்கத்தார் ஸ்குடாரி என்னுமிடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இராணுவச் சிகிச்சை சாலைக்குச் சூப்பர்ண்டெண்டாக நியமித்தார்கள்.



## ஸ்குடாரி இராணுவ ஆஸ்பத்திரி

அவ் வுத்தரவின்படியே ஸ்குடாரி யென்னுமிடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இராணுவ ஆஸ்பத்திரியை அவர் அடைந்தனர். இங்கிருந்த நிலைமையானது மிகவும் சீர்குலைந்திருந்தது. அவைகளை ஒழுங்குபடுத்துவதற்காக வேண்டி அவர் கொண்ட பெரும் முயற்சிகளில் நேர்ந்த இடையூறுகளுக்கோ எல்லையில்லை. யுத்த களத்தில் காயப்பட்டு வீழ்ந்த வீரரை ஆஸ்பத்திரியை அடையச் செய்யத் தகுந்த சௌகரிய சாதனம் ஒன்றுமில்லை. ஆஸ்பத்திரியிலோ இட வசதி மிகக் குறைவு. நோயாளர்களுக்குப் போதுமான உண

வுப் பொருள்களும், உடைகளும், மருந்துப் பொருள்களும் வேண்டிய அளவு சேமிக்கப்பெறவில்லை. அப்பொழுது ஆன்பர் பலரிடமிருந்து இப் பொருள்களைப் போதிய அளவு உடனே தயாரிக்க வேண்டி ஒரு நிதி வசூலிக்க ஏற்பாடு செய்தார். இவ்வித பண உதவி கிடைக்கப் பெறாதிருக்குமாயின் யுத்தகளத்தில் மாண்டவரைவிட ஆஸ்பத்திரியில் மடிந்தவரே அதிகப்பட்டிருப்பர். முப்பதாண்டுகூட முடியப் பெறாத இம் மெல்லியல் மாது இவ்வரும் பெரும் கடமைகளை யெல்லாம், வந்து பத்துத் தினங்களுக்குள்ளேயே அவ்விடத்தில் ஏற்படுத்திய ஒழுங்கு நிலையான அமைப்புகள் மிகவும் பாராட்டத் தக்கதே.

## ஆஸ்பத்திரியின் வேலைகள்

வெகு அமைதியுடனும், சுறுசுறுப்பாயும் நடைபெற்று வந்தன. நோயாளியின் வேதனைக் கூக்குரல் சிறிதேனும், அவர்களைப் பேணும் மருத்துவப் பெண்மணிகளின் செவியிற் படாதிருக்க முடியாது. உடனே அவரது கவனிப்பால் அவ்வித விசன ஒலிகள் நின்றுவிடும். நைட்டிங்கேல் மாதரசியும், அவரது மருத்துவப் பெண்டிரும் இடைவிடாது பிணியாளரைப் போற்றுவதிலேயே பொழுது போக்கி வந்தனர். இறக்க நேரிட்டவரெல்லாம் அம்மையாரின் ஹித வசனங்களைச் செவி மாந்திச் சென்றனர். இவ்வித ஏற்பாடுகளோடு நோயாளர்களுக்கு உணவு தயாரிப்பதும், அவர்களுக்கு வேளாவேளைக்கு வெளுத்த துணிகளைத் தயாரிப்பதும் சிப்பாய்களின் கதியற்ற மனைவியருக்கும், விதவைகளுக்கும் ஓர் பிழைப்புக்கு இடமாயின. அம்மட்டோ! அவ்வாஸ்பத்திரியிலே எவ்வித வசதியற்றதும் பயம் நிறைந்ததுமான அவ்விடத்தில், உலகில் ஜனிக்க நேரிடும் ஆங்கிலக் குழந்தைகளைப் பராமரிக்கப் பிரசவப் பகுதி யொன்றும் ஏற்படுத்தப் பெற்றது. பேணுதலொழிந்த அமயங்களில் சிப்பாய்களின் பந்துக்களுக்குக் கடிதம் வரைவதும், கவலையுடனும் ஆவலுடனும் யுத்தகளச் செய்தியைக் கடித மூலம் அறிய விரும்பியவர்களுக்குப் பதில் அளிப்பதுமே அவரது அலுவல்களா யிருந்தன.



## வேலைக்கு நேர்ந்த விபத்துகள்

போர்க் களத்திலுள்ள டாக்டர்களிற் சிலர், காயம் பட்டவர் சிகிச்சைக்குப் பெண்களை நியமித்ததை வெறுத்துச் சில இடையூறுகள் விளைவித்தனர். ஆனால் இவர்கள் புரியும் நற்றொழிலை நேரிற் கண்ட பின்னர் அவர்கள் அவ்விதத் தீச் செயலை விட்டுவிட்டனர். இங்கிலாந்தில் சில சிற்றறிவாளர், நைட்டிங்கேல், பிறர் துயரம் தீர்க்கவேண்டிப் படும் இடையறாப் பாட்டினையும் கவனியாது, அவரது மதக் கொள்கைகளைக் கொண்டு அவர்பால் அன்பற்றவர்களாய் அவர்மேற் பெருங் குறை கூறி வீண் ஆரவாரங்களைச் செய்தனர். ஆனால் பரோபகாரமே பிறவியின் பயனெனக் கொண்ட மாதின் மனதை அவர்களின் ஆரவாரங்களெல்லாம் ஒரு சிறிதுமே சலிக்கச் செய்யவில்லை. இவர் இயற்றிவரும் நற்செய்கைகளைக் கேள்வியுற்ற மாட்சிமை வாய்ந்த விக்டோரியா மகாராணியார், இவரைப் புகழ்ந்து கூறி இவர்பால் தான் நல் அபிப்பிராயம் கொண்டிருப்பதாக ஹெர்பர்டு என்னும் மந்திரிமூலம் செய்தி யனுப்பினார்.

அம்மையார் தான்கொண்ட நற்றொழிலுக்கு இவைகளைப் பார்க்கினும் வலிமை மிக்க இடையூறுகளுடன் சிரமப்படவேண்டியிருந்தது. அதாவது ஆஸ்பத்திரிக்கு வேண்டிய சாமான்கள், மேலதிகாரிகளின் பரிசோதனைத் தாமதத்தாலும், வழக்கத்தையே பெரிதாகக் கருதிய உத்தியோகஸ்தருடைய கவலையீனத்தாலும் சரிவரக் காலாகாலங்களில் கிடைக்கப்பெற வில்லை. அவ்விதக் கால தாமதத்தால் காயம் பட்டவருக் கேற்ற மருந்து முதலிய சிகிச்சைக்குரிய சாமான்களின் குறைவினால் பிணியாளர்கள் இறக்க நேரிடும் தருவாயில் இருப்பதைக் கண்டு மேலதிகாரிகள் உத்தரவை எதிர் பாராமலேயே தன் பொறுப்பில் தானே பண்டக சாலையைத் திறந்து வேண்டிய சாமான்களை எடுத்து வருவதுண்டு. இவ்வித இவரது துணிகரமான செய்கை, சில அதிகாரிகளின் விரோதத்தை ஏற்படுத்தியது மல்லாமல், உத்திரவன்றியே தங்களை அவமதியும் செய்து பொருட் படுத்தாது நடந்தார் என்பது முதலான குறை

தூற்றுக்கு இடம் செய்தது. நம் வனிதா ரத்தினம் இவற்றிற்கெல்லாம் பயந்து தன் வேலைகளைச் சரிவரப் புரிவதில் நின்றும் சற்றும் தயங்கினாரில்லை. ஒருசமயம் சிறிது சுண்ணாம்பின் தேவை ஆவஸ்யமாயிருந்தது. பலமுறை கேட்டுப் பார்த்தும் பண்டக சாலையிலிருந்தும் இல்லையென்ற பதிலே கிடைத்தது. அம்மை நைட்டிங்கேல் அப்பொருள் பண்ட சாலையிலிருக்கப் பார்த்திருந்ததால், அதனை நன்கு பரிசோதிக்கவேண்டுமென்று வற்புறுத்தியதின்பேரில் 90 பவுண்டு எடையுள்ள சுண்ணாம்பு கிடைத்தது. அவர்தம் வேலையில் காட்டிய ஊக்கமும், அறிவும், மனவுறுதியும் கண்ட உத்தியோக வர்க்கத்தினர், தாங்கள் அவர்மீது கொண்ட தப்பான அபிப்பிராயத்தை நாளடைவில் மாற்றிக் கொண்டனர். பின்னர் ஆஸ்பத்திரிக்கு வேண்டிய பல பொருள்களும் அவர் வசமே ஒப்பிவிக்கப் பட்டன. காயம் பட்டவருக் கேற்ற சிகிச்சை முழுமையும் அவரது மேற் பார்வைக்கே விடப்பட்டன. இச் சந்தர்ப்பத்தில் மகாராணியாரிடமிருந்து வந்த அநுதாபக் கடிதம் அவரது பெருமையையும், செல்வாக்கையும் அதிகரிக்கும்படி செய்தது.

யுத்த களத்தினின்று ஸ்குடாரிக்குக் கொண்டுவரும் காயம் பட்ட வீரர்களைக் குணம்பெறக் கூடியவர் கூடாதவர் எனப் பிரித்தெடுப்பது பெரிய ரண வைத்தியரது பொறுப்பு வாய்ந்த வேலையாகும். ஒரு சமயம் அவ்வாறு குணம்பெறக் கூடாதவரென்று பிரித்து வைக்கப் பட்டவர்களை மிஸ். நைட்டிங்கேல் பார்வையிட நேர்ந்தது. அவர்களில் ஐவரைத் தனது சிகிச்சைக்கு விட்டு விடும்படி பலமுறை முயன்று அனுமதி பெற்று, அவர்கள்மீது இடையறாக் கவனம் செலுத்தி அவர்களில் சிலரை உயிர்ப்பித்தார். இச் சம்பவத்தின் பின்னர், பெரிய ஸர்ஜன்களும் அவரது அபிப்பிராயத்தைப் பெரிதும் மதித்தனர்.

அவர் இரவில் தன் பிணியாளர்களைப் பார்வையிடும் பொருட்டு ஆஸ்பத்திரியின் பல பாகங்களிலும் சுற்றிச் செல்வதுண்டு. அங்ஙனம் செல்கையில் கையில் சிறு விளக்கேந்திச் செல்வர். அவ்



விளக்கொளியில் அவரது நிழல், அவரது வரவை மிக ஆவலுடன் எதிர் பார்க்கும் குற்றுயிர் நோயாளிகளின்மேல் விழவும் இதனால் நோயாளிகள் ஆறுதலும் அமைதியும் அடைவர். அவரது வரவிற்கு முன் தூற் சம்பாஷணையில் ஈடுபட்டவர், அவர் வந்த மாத்திரையில் அதனை விடுத்து அவரது நற் செய்கையினைப் புகழ்ந்து தெய்வ வழிபாடு கூறுவர். இவ்வாறு அன்பின் மிகுதியால் அப்பிணியாளரைப் பேணிவந்த செய்கைகளைப்பற்றி இங்கிலாந்தில் தினசரிப் பத்திரிகைகளில், கையில் விளக்கொளி வீசும் பெருமாட்டி என்னும் பெயரிட்ட தலையங்கங்களுடன் புகழ்ந்து கூறப்பட்டன.

## விஷஜ்வரங் காணுதல்

ஸ்குடாரியில் ஆறுமாதங்கள் கழிந்தன. பிறகு பாலக்லாவா என்னும் யுத்த களத்திலே ரணமுண்டு வருந்தும் வீரருக்குத் தகுந்த போஷணையும் பேணுதலும் நடக்கிறதாவென்று கவனித்து வரச் சென்றார். அங்கிருந்த 'ஸிபஸ்டபூல்' என்ற ராணுவத் தலைமை ஆஸ்பத்திரியைப் பார்வையிட்டனர். பாக்லாவுக்குச் சென்றவிடத்து அவருக்கு விஷ ஜ்வரம் கண்டது. அதனால் மிக வருந்தினர். அங்குள்ள மேட்டுப் பிரதேச மொன்றினில் அமைத்திருந்த ஆரோக்கிய ஆஸ்ரமக் குடிசைகளில் சிலகாலம் தங்கியிருந்து குணமடைந்தனர். இவர் நோயால் வருந்துவதைக் கேள்வியுற்ற ராணுவத் தலைவரான ராக்லன் பிரபு இவரைக் காணவேண்டியே ராய் நகரிலிருந்து புறப்பட்டுப் பார்வையிட வந்தனர். அவர் இவரைப் பார்க்க வரவும் இவரைக் கவனித்துக் கொண்டிருந்த தாதியொருத்தி யாரென வினவ, தான் ஒரு சிப்பாயென்று பதில் வந்த குரலினால் இன்னாரெனத் தெரிந்து அவர், தன்னை அந்த ஸ்திதியில் பார்க்க வருவது அபாயகரமென்று நைட்டிங்கேல் தடுத்தும் அப்பிரபு அவர்மேல் பாராட்டிய அன்பினால் அவரது மறுப்பையும் கவனியாது அவரையணுகித் தன் அநுதாபத்தை வெளியிட்டனர். ஏனெனில் அவரின் கீழ் இருந்த துருப்புகளின் ஆரோக்கியத்திற்காக அவர் உழைத்த உழைப்பு அவர் மனதை விட்டகலவில்லை.

இவ் வியாதி குணப்படவும் தன்னூரையடைவதே நலமெனப் பலர் வற்புறுத்தியும் அவர்களது வார்த்தையினைக் கேளாது, மறுபடியும் ஸ்குடாரி ஆஸ்பத்திரியை அடைந்து தனது சிரமமான அலுவல்களையெல்லாம் மறுபடியும் மிகுந்த ஊக்கத்துடன் கவனித்து வந்தார். கிரிமியன் யுத்தம் முடிவுபெற்றுச் சிப்பாய்கள் அனைவரும் திரும்பிய பின்னர்த்தான் தன்னூருக்குப் பிரயாணமாயினர்.

## தன்னூர் திரும்புதல்

இங்கிலாந்தில் அந்த யுத்தத்தின் வெற்றியைக் கொண்டாடும் பொருட்டாய் நிருமித்த பல விமரிசையான ஏற்பாடுகளில், நைட்டிங்கேல் அம்மையாரின் பரோபகாரச் செய்கைகளைப்பற்றிப் புகழ்ந்து பேசாதவரும் அதனைக் கேளாதவரும் எவருமிலர். அவருக்கு விமரிசையான வரவேற்புச் செய்ய வேண்டுமென்று அமைத்த ஏற்பாடுகளைத் தான் தெரிந்து அவற்றைத் தடுத்து யாதொரு பெருமைக்கும், ஆடம்பரத்திற்கும் தான் தகுதியற்றவளென்று கூறி அமைதியாய்த் தன்னூரை யடைந்தார். அவரைப்பற்றிப் பிறர் புகழ்ந்து பேசுவதையும் அவரது கியாதி யெங்கும் பரவச் செய்ய வேண்டுமென்று செய்த ஏற்பாடுகளையும் அவர் வெறுத்து இகழ்ந்தார். அவரது நண்பர் ஹெர்பர்டு என்பவரின் ஆலோசனைப் பிரகாரம் அவரது யுத்த களத் தொண்டினுக்கு ஞாபகச் சின்னமாயும் அறிகுறியாயும் அம் மங்கை பேர்பூண்ட ஆஸ்பத்திரி ஒன்று ஸ்தாபிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. அதற்காக 50,000 பவுன் வசூலாயிற்று. நைட்டிங்கேல் அவ்வித பெருமை தனக்குத் தேவையில்லை யென்றும் அதற்குப் பதிலாக அக் காலத்தில் பிரான்ஸில் ஏற்பட்ட பற்பல கஷ்ட நிவர்த்திக்காகப் பொருளுதவி செய்ய வேண்டுமென்றும் பொது ஜனங்களிடம் தெரிவித்துக் கொண்டார். வசூலித்த பணம் ஆலோசித்த பிரகாரம் நிறைவேறப் பெறுமற்போக, அவற்றை மருத்துவத் தொழின்முறையை மாதர்களுக்குக் கற்பிக்கும் பயிற்சி சாலை ஏற்படுத்த வேண்டுமென்றும், அவ்வித பயிற்சியினைக் கற்க வரும் மாதருக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்றும் பிரார்த்தித்தார். இதனால் இம் மாதரசியாரே, மாதர்கள் மருத்துவத் தொழிலினை மேற்கொண்டு பிறருக்கு உதவி புரியும் நற்றொழிலுக்கு நற்றுணையானார் என்றே கூறலாம்.



1871-ம் ஆண்டு லண்டன் மா நகரில் உள்ள ஸெயிண்ட் தாமஸ் ஆஸ்பத்திரியில் ஓர் பகுதி, இவரது பேர்பூண்ட மருத்துவப் பயிற்சி சாலை, ஸ்திரீகளுக்கென்று ஏற்படுத்தப்பட்டது. கற்கும் மாணவிகளுக்குப் போஜன வசதி இருப்பு வசதி யிடவசதிகளும் இவரது பெயராலேயே திறக்கப்பட்டன. இதுவே இவர், தன் வாழ்நாளில் கைக்கொண்டு நடத்திவந்த பரோபகாரத்தின் பெரும் பயனெனப் பகரலாம். இப் பயிற்சி சாலை இன்றளவும் ஐரோப்பாவிலேயே மிகவும் சிறப்புடையதாய் நிகரற்று விளங்குகின்றது.

## அந்திய காலம்

தன் அந்திய காலத்தில் தன்னைப் போன்று மருத்துவத் தொழிலினை மேற்கொள்ளும் மாதரை உற்சாகப்படுத்தியே வந்தார். தன் காலத்தில் இல்லாத புதிய வசதிகள் பல இருக்கும் இந்நாளில் அவர்கள் செய்யும் சிறிய செய்கையினையும் பெரிதாகவே புகழ்ந்து பேசி ஊக்கமூட்டியே வந்தனர்.

1907-ம் ஆண்டு ஒரு மாதருக்கும் அளிக்கப்பெறாத ஆர்டர் ஆப் மெரிட் (Order of Merit) என்ற O. M. பட்டம் அவருக்கு அளிக்கப்பட்டது. பின்னர் மூன்று ஆண்டுகள் ஜீவித்திருந்து 1910-ம் ௵ ஆகஸ்டு ௴ 13-ம் ௳ விண்ணுலகமுற்றனர். அம் மாதம் 20-ம் ௳ அன்று செயின்ட்பால் கோவிலில் அவரது மரணத்திற்காகப் பெரியதோர் பிரார்த்தனை நடைபெற்றது. அப்பொழுது அவரது நற்குணங்களையும், பரோபகாரமே சிரோபூஷணமாகக் கொண்டொழுகிய நற் செய்கைகளையும் கிரிமியன் யுத்த வீரர் பலரும், தாதிகளும், ராஜாங்கப் பிரதிநிதிகளும், இன்னும் மற்ற ராணுவ ராஜாங்க உத்தியோகஸ்தர் பலரும் வாயார வாழ்த்தி மனமாரப் புகழ்ந்து புகழ்ந்து பேசினர். அந்நாள் அந்நாடு முழுதும் அவரைப் போற்றியது.

அவரது ஜீவிய சரிதம், பரோபகாரமே பிறவியின் பயனெனக் கருதும் மாதர் மாந்தர் பலருக்கும் விண்ணொளிபோல் இன்னும் பிரகாசிக்கின்றது.

# தமிழா!

## I

*சுவாமி சுத்தானந்த பாரதி அவர்கள்.*

தலை குனியாதே—தமிழா
தாயை மறவாதே!
மலை குலைந்தாலுந்—தமிழா
மனங் குலையாதே! 1

வீரத் திருவழகைத்—தமிழா
விலைக்கு விற்காதே
பாரின் புகழெல்லாந்—தமிழா
பரவு துன்னிடம் பார்! 2

குன்றுறழுந் தோளா!—தமிழா!
குவலயத் தோழா!
வென்றி யுனதன்றோ—தமிழே
வேந்து மொழியன்றோ! 3

பிறந்தவ ரெல்லாந்—தமிழா
சிறந்தவர் தாமே!
மறந்து நில்லாதே—ஜாதி
மயக்கில் விழாதே! 4

மக்களுக்கோர் சமயம்—தமிழா!
மன்னுயிர்க் கோரிறைவன்!
மக்களும் ஓர் வகுப்பே—எனிலோ
மற்றுமுண்டோ பகுப்பே! 5

ஒற்றுமைச் சங்கொலிப்போம்—தமிழா
உண்மை யொளி பிடிப்போம்!
வெற்றி முரசடிப்போம்—தமிழே
வீர மொழி யரசி! 6



# கண்ணான கண்ணி.

## II.

[பாரத தேவியை இன்னல் தவிர்க்கும் பச்சிளம்
இளவரசியாகக் கருதி வீரத் துணிவு கூறல்.]

கண்ணான, கண்ணே! கருமணியே! கற்பகமே!
மண்ணோடு மண்ணாய் நீ மண்ணாகக் காண்போமோ! 1
பொன்னான மண்ணினிலே பொங்குவளம் பூத்திருக்க,
அன்னமென்றே நீ யலைதல் ஆகா! பொறுப்போமோ! 2
கண்ணீரால் நின்னைக் கழுவித் துடைக்கையிலே,
புண்ணீரும் நெஞ்சுடைத்துன் பூமேனி பாயுதடீ! 3
மட்டில்லாச் செல்வத்தின் மாசற்ற நல்லரசீ!
கட்டுண் டிருக்கக் கணமுஞ் சகிப்போமோ? 4
ஏனடீ யஞ்சுகிறாய்? எங்கள் சதையெல்லாம்
ஊனடீ யுன்றனுக்கே! உயிரடீ நீயெமக்கே! 5
கண்ணடீ நாங்கள், கதிரொளியே. நீயெமக்கு!
மண்ணெல்லாம் உன்றனொளி வாழும் அரசன்றோ! 6
சோற்றோட்டம் வற்றிடினும் தோற்றோட்டம் பற்றாமல்,
ஆற்றோட்டம் போலே அணிநின்று போர்புரிவோம்! 7
மானமே பாவாக, வாய்மையே ஊடாகத்
தேனே யுனக்கே திருவாடை செய்வோமே. 8
இரவென்றே யேங்காதே! எவ்வுலகம் உன்னெழிலே
விரவும் விரைவினிலே மேவுமுன்றன் மெய்யரசே! 9
பூரணியே! புண்ணியமே! பூவுலகிற் பேரின்ப
வாரிதியே! பாரதியே! வாழியநீ டென்னரசீ! 10.

# மூட வழக்கங்கள்.

## II.

ஸ்ரீமாந் முனகால S. பட்டாபிராம அய்யர் அவர்கள்.

### பால்ய விவாஹமும் விதவைகள் துயரமும்

பால்ய விவாஹம் 1. இணக்கமற்ற விவாஹம் 2. புருடர்களின் பல விவாஹம் 3. விதவா விவாஹ மறுப்பு 4. ஸ்திரீகளுக்கு விவாஹ ரத்துச் செய்யும் அதிகார மறுப்பு 5. வேசை முறை 6. புருடர்களுக்குச் சமூகத்தில் விபசாரஞ் செய்ய வழங்கப் பட்டிருக்கும் ஜெனரல் லைசென்ஸ் 7. இவை முதலிய மூட வழக்கங்கள் தான், பெண்களை இழிவுபடுத்தும் தீய குணமுடையவை.

இவை சாதாரணமாக ஹிந்துக்களில் உயர்ந்த ஜாதி யெனப் படுவோருக் குள்ளாகவே காணப்படுகின்றன. (இம்மூட வழக்கங்களின்) இப் பாசங்களில் சிக்குண்டு இறுக, இறுக, இவர்களின் ஜாதி இறுமாப்பு உயர், உயர வளரும். இக் கொடிய வழக்கங்களிற் கட்டுண்ட மேல் ஜாதிப் பெண்பாலர் முழுதும் செயலற்று ஸ்மரணையற்றுக் கிடக்கின்றனர். பெண் பிறப்பு பாபகரமென்றும், பெண்கள் ஆண் மக்களை யொப்புச் சுதந்தர உரிமைகளையடைந்தால், இப் பூவுலகம் தலைகீழாய்க் கவிழ்ந்துவிடு மென்ற துர் எண்ணத்தால் அவர்களை யடக்கி மடக்கி வைப்பதற்கென இம்முறைகளைக் கையாண்டு வருகின்றோம், இப் பாதகங்களைப் புண்ணிய கருமங்களென்றும், உயர் தருமங்க ளென்றும், பரலோகத்தில் பலன் பயப்பவை யெனவும் பறைசாற்றி வருகின்றோம்.



புருஷார்த்த சித்திக்கேற்ற முன்னேற்றத்திற்குரிய சாதனங்கள் கொஞ்சம் அமையப் பெற்றிருக்கும், நமது உயர் வகுப்புங்கூடப் பக்ஷவாதத்தாற் பீடிக்கப் பட்டு விழுந்து கிடந்து தவிக்கும் நோயாளியை யொத்து விளங்குகிறது.

இவைகளில் பால்ய விவாகமே இளம் பெண்களை விதவைகளாக மாற்றும் தொழிற்சாலை. பால விவாகத்தா லுண்டாகும் சந்ததிகள் வீரியமற்றவர்களாயும், விசாரணை செய்யத் தகாதவர்களாகவும், மனச் சோர்வு உடையவர்களாகவும், மிதித்த தடத்தை மிதிக்கும் தன்மையை யுடையவர்களா யிருப்பதால், நாம் சுதந்தரத்தை யிழந்து அடிமைத்தனத்திலுழன்று கரையேறச் சக்தியற்றுப் புழுக்களைப்போல் நெளிந்து நெளிந்து இந் நரகத்தையே சுக சுவர்க்கமென்று மோகித்து நாம் ஆழ்ந்து கிடக்கும் இந் நரகப் படுகுழியிலிருந்து வெளியேறுவதற்கே இச்சையில்லாதவர்களாக விருக்கிறோம்.

டில்லிச் சட்ட சபையில், பால்ய விவாகத் தடுப்பு மசோதா நிறைவேறிவிடுமோ வென்ற பயத்தால் வைதீக வுலகத்தில் மிகுந்த பரபரப்பும் பதட்டமும் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. நமது சமூகத்தில் இம் மூட வழக்கம் எவ்வளவு வேரூன்றி வலுத்து வியாபித்திருக்கிற தென்பதற்கு இப் பரபரப்பும் பதட்டமுமே போதுமான அத்தாட்சியாகும். பழங் குப்பை கொல்லைகளில் நாய்க் குடைகள் (காளான்கள்) ஒருங்கே தோன்றுவதுபோல் நம் சமூகத்துக் குப்பை மேடுகளில், வர்ணாஸ்ரம தர்ம மஹா நாடுகளும், பிராமண சம்மேளனங்களும் முளைத்திருக்கின்றன.

சென்னையிற் கூடிய வர்ணாஸ்ரம தர்ம மஹா நாட்டிற் றலைமை வகித்த திவான் பகதூர் பகருகிறார். கேளுங்கள்! "புருஷர்களுக் கெப்படி உப நயனமோ அப்படியே ஸ்திரீகளுக்கு விவாகமிருந்து வருகிறது" இதில் அவர் நினைக்காமலேயே உண்மையைக் கக்கிவிட்டார்! எப்படி வேதங்களைச் சாங்கோபாங்கமாய்க் கற்றறிவதற்குக்

குருகுலத்தைச் சேர்ப்பித்தலுக்கு மாறாகப் பிள்ளையின் தோளில் பூணூலை மாட்டி, கொட்டு மேளங் கொட்டி, ஊராருக்குண்டி யளித்துப், புரோகிதருக்குச் சம்பாவனையும் வைதிகர்களுக்குத் தக்ஷிணையும் கொடுத்துவிட்டால், உபநயன சமஸ்காரம் முற்றுப் பெற்றதென்று நம் நாட்டு வைதிகர்கள் நினைக்கிறார்களோ, அப்படியே பிரமசரிய விரத சமாப்திக்குப் பிறகு பிரௌடைப் பருவமடைந்த பிரமசாரியும் பிரமசாரிணியும் இல்லறத்திற் புகுந்து ஸந்தானோற்பத்திக்காகச் சுயம்வர முறையில் தன்னு மனமுவந்து வதூ அல்லது வரனைப் பொறுக்கி விவாகம் செய்துகொள்வதற்கு மாறாகப் பால்மணம் மாறா இளம் பெண்குழந்தையின் கழுத்தில் தாலியைப் பூட்டிப் பட்டுப்புடவை யுடுத்தி, வீட்டுக் கிழங் கைம் பெண்களின் ஆசை தீர ஊஞ்சலாட்டி, நலங்கிட்டு, வந்தவர்களுக்கு வயிறுபுடைக்க விருந்தளித்துச், சந்தன தாம்பூலங்கள் வழங்கி, நாகசுரம் மத்தாப்புகளுடன் ஊர்கோலம் சுற்றி வந்துவிட்டால் விவாஹம் முடிந்துவிட்டதென்றே நம்மவர்களில் ஜாதிச் செருக்குண்ட குருடர்கள் நினைக்கிறார்கள்.

பால் பருகும் பெண் குழவிகளின் கழுத்துகளில் திருமங்கல்யம் தொங்கவிட்டிருப்பதை நம் நாட்டில் சிதம்பர தீட்சதர்கள் என்று கூறப்படும் தில்லை வாழந்தணர் வீடுகளிற் காணலாம்.

அக் குலத்தாரி லொருவர் மதுரைச் சம்மேளனத்து அக்கிராசனப் பதவியில் அமர்ந்து சீதைக்கு இளம்பிராயத்தில் விவாகம் நடந்ததென்றாராம்! அச் சம்மேளனத்தில், வான்மீகி இராமாயணம் பிரமாணமில்லைப் போலும்! சீதா பிராட்டியாரே அத்திரி மகரிஷியின் மனைவியான அனசூயை யிடத்தில் தன் விவாகத்தைக் குறித்துச் சொல்லும்போது, தான் பிரௌடையாகி வெகு காலத்திற்குப் பிறகு இராமனை மணந்ததாகக் கூறியிருக்கிறார். *

*வால்மீகி இராமாயணம் அயோத்தியா காண்டத்தில் 118-வது அத்தியாயத்தை வாசித்துப் பார்க்கவும். மேலும் விசேஷமாக 24-வது சுலோகம் முதல் 34-வது, 44-வது சுலோகங்களையுங் கவனிக்கவும்.



மூட வழக்கங்களுக் காதாரம் மூட நம்பிக்கைகள்தான். இம் மூட நம்பிக்கைகள், இக்குருட்டுச் சம்மேளனங்களைப் போலொத்த கூட்டங்களிலிருந்து கிளம்பிப் படிப்பும் யோசனையுமில்லாத பாமர ஜனங்களினிடையே பரவுகின்றன.

உயர்ந்த வகுப்பாரெனப் படுவோரில் விதவைகளின் விருத்திக்குக் காரணம், பால்ய விவாகமென்பதை எவரும் மறுக்க முடியாது. விதவைகள் வெள்ளம்போல் பெருகுவதின் உதவியால் ஏனைய மூட வழக்கங்களும், அவைகளுக் காதாரமான மூட நம்பிக்கைகளும், மூடக் கொள்கைகளும் ஓங்கி வளர்கின்றன.

ஆரியர்களுடைய பிரமாணமான புராதன இதிகாசங்களிலேனும், பிராமணர்களின் மேன்மையான சூத்திரக் கிரந்தங்களிலேனும், பால்ய விவாகத்திற் காதாரங்கள் கிடையா. பெண்கள் ஆண்மக்களுடைய காம விகாரத்தைத் தணிப்பதற் கேற்பட்ட கருவிகளென்றும், பெண் மக்களுக்குக் கற்பு வேண்டுமென்றும், ஆண்மக்கள் கோவிற் காளைகளைப் போலக் கொழுத்துப் பெட்டைமோப்பம் பிடித்து, அலைந்து சுற்றித் திரிவது தங்களுடைய தருமமென்றெண்ணப்படும் மூடக் கொள்கைகள், பெண் மக்களை அடிமைத் தனத்திற் கட்டியிறுக்கத் தூண்டுகின்றன.

விபசாரம் பெண்களுக்குத் தோஷமென்றும், ஆண்களுக்குப் பூஷணமென்றும் நினைக்கும் மூடத்தன்மையை நாம் முற்றிலும் விட்டொழிக்க வேண்டும். இவ்வெண்ணத்தை யொழித்து, ஆணுக்கும் பெண்ணுக்கும் விபசாரம் சமமான தோஷமென்று நம் பண்டைக் காலத்து முன்னோர்கள் பாவித்ததுபோல் நாமும் கருதுவோமானால் விவாக சம்பந்தமான மூட வழக்கங்கள் யாவும் தானாகவே ஒழிந்துவிடும். இவ் வழக்கங்களெல்லாம் முழுமையுங் கொடுமையானவை. அவற்றில் மிகக் கொடியது விதவா விவாக மறுப்பு.

1921-வது வருஷ ஜன கணிதப்படி நம் நாட்டின் இளம் விதவைகளின் தொகை பின்வருமாறு:—

| வயது | தொகை |
|---|---|
| 0-முதல் 1-வரையுள்ள விதவைகள் | 597 |
| 1 ,, 2 ,, ,, | 497 |
| 2 ,, 3 ,, ,, | 1237 |
| 3 ,, 4 ,, ,, | 2837 |
| 4 ,, 5 ,, ,, | 6707 |
| 5 ,, 10 ,, ,, | 85037 |
| 10 ,, 15 ,, ,, | 232147 |
| 15 ,, 20 ,, ,, | 396172 |
| 20 ,, 25 ,, ,, | 742820 |
| 25 ,, 30 ,, ,, | 1163720 |

விவாகமென்ப தின்னதென் றறியாத பெண்களுக்குக் கலியாணஞ் செய்து லக்ஷக் கணக்கான இளம் பெண்களை விதவைகளாக்கிப் பாழாக்கி வைத்திருக்கிறோம்! காய், கனி, கிழங்கு, இலை, தழை, துளிர், நீர், காற்றுகளைப் புசித்துத் தவம்புரியும் மகரிஷிகளாலும், முனிகளாலும், ஜெயிக்க முடியாத இயற்கைத் தேவியை வென்று-காம விகாரத்தை யொடுக்கி, நமது விசாலமான போக விலாஸ உல்லாஸங்களுக்கு இடையே, குமரிப் பெண்கள் யோகிகளாகிப் புனிதமாயிருக்க வேண்டுமென் றெண்ணுவது நம்முடைய முழு மூடத்தனத்தையும், இயற்கை யறிவின்மையையும் வெளியாக்குகிறது.

தகுந்த வயது வந்த பின்பு, மெய்யாக விவாக சமஸ்காரத்தின் தத்துவத்தை யறிந்த பிறகு சரியான முறையில் மணம்புரிந்த விதவைப் பெண்ணுக்காவது, விதுர (தாரமிழந்த) புருடனுக் காவது மறுமணம் தேவையில்லை யென்பது யுக்திக்கும், புத்திக்கும், இயற்கைக்கும், பொருத்தமாக விருக்கும். அப்படி மெய்யான விவாகம் செய்து கொண்டோர்களுடைய மனமும் இலகுவில் புனர் விவாகத்தை நாடிச் செல்ல மாட்டாது. நம் மேல் ஜாதியாரின் மனப் போக்கை நாமென்னவென் றுரைப்பது? சின்னஞ் சிறு பிராயத்தில் பெண்களுக்குப் பொம்மைக் கலியாணஞ் செய்து வைத்தால்தான் கற்பு நிலைக்குமாம்! மணத்திற்குத் தகுந்த பருவம்



வந்துவிட்டால் பாதகமாம்! வெட்கமாம்! கற்பழிந்துவிடுமாம்! ஆனால், குமரிப் பருவம் வருவதற்குமுன் விதவையாகி வீட்டில் வாழ்ந்தால் கவலையில்லையாம்! தலையை மொட்டையடித்து, ஊர்ப் புரோகிதருக்கு வாழ்நாள் முழுதும் தானம் கொடுப்பதே அவள் கடமை யென்று சொல்லிவிடுவதே புண்ணியமாம்! மானமாம்! கௌரவமாம்!

சாஸ்திர வாசனை யறியாத சாஸ்திரிகளும், வேதமோதி யறியாத வைதீகர்களும், பக்தி வைராக்கியமில்லாத விட புருட பாகவதர்களும், ஞானமும், சாந்தமுமில்லாத துறவிகளும், மடாதிபதிகளும் நம் நாட்டில் விதவைப் பயிர் செழித்து வளர்வதினாலே தான் ஜீவித்து வருகிறார்கள்.

ஆதலால் அவர்களெல்லாம் வருணாச்சிரம தர்ம மகா நாடுகளையும், சம்மேளனங்களையுங் கூட்டி விதவைகளின் உற்பத்திக் கழனியாகிய பால்ய விவாகத்தைப் பாதுகாக்கப் பரபரப்புடன் முன் வருவதில் வியப்பொன்று மில்லை.

உலக வாழ்க்கையிலிருந்து விலக்கி வைக்கப் பட்டிருப்பதினால் "விதவைகள்" குறுகிய நோக்கங்களையும், மூடக் கொள்கைகளையு முடையவர்களாகி மூட வழக்கங்களைக் கைக்கொள்ளுகிறார்கள். அம் மூட வழக்கங்களைச் சாதாரண ஆடவர்களும், உலக வியல்பை உண்மையிலறிந்த புருடர்களும் அனுஷ்டிக்கும்படி நேரிடுகிறது. விதவைகளின் மனதை ஒரு வழிப்படுத்தும் நோக்கத்துடன் பல மூட வழக்கங்கள், கற்பனை செய்யப் பட்டிருக்கின்றன.

அவைகளாவன:—தீர்த்த யாத்திரைகள், கிரஹண ஸ்நானங்கள், துலாக்காவேரி புராண சிரவணங்கள், ரிஷிபஞ்சமி விரதங்கள், விருஷபோத் ஸர்ஜனம் முதலியவைகளே. இவையெல்லாம் விதவைகளின் ஆதரவற்றுப் போய்விட்டால் தங்கள் வைபவங்களை யிழந்துவிட நேரிடுமன்றோ? இம்மூட வழக்கங்களி லுழன்று, புரு

டார்த்தங்களை மறந்து, உலக வாழ்க்கையின் மேன்மையை வெறுத்து, மானிடப் பிறவியி னுரிமைகளை யிழந்து, புழுப் பூச்சிகளைப் போல் கும்பல் கும்பலாகத் தோன்றிக் கூட்டோ டழியுந் தருவாயி லிருக்கிறோம்.

நம்மழிவை யுணர்த்தும், சின்னங்க ளெத்தனையோ நம் கண் முன் தோன்றினும், நாம் நம்மைப் படைத்த கடவுள் தலையில் பழியைச் சுமத்தி, கலி புருடனைக் கடிந்து, நம் தலைவிதியை நொந்துகொள்ளுகிறோம். கடவுள் கொடுத்த புத்தியை உபயோகித்து நமது கடமைகளைத் தைரியமாகச் சரிவரச் செய்து வருவது மட்டுமில்லை.

பெண்களின் கற்பே பொற் களஞ்சியமெனக் கருதப்படும் நம் பாரத நாட்டில் 1921-வருஷத்திய கணக்குப்படி 472996 வேசைகள் விபசாரத் தொழிலிலிருந்து வருகிறார்கள். வெளிப்படையாகத் தொழிலை நடத்துபவரின் தொகையே மேற்கூறப்பட்டுள்ளது. இனி இலை மறைவிலும், தலை மறைவிலும், வேசித்தொழிலைச் செய்து ஜீவிக்கும் வேசியரின் தொகை கணக்கிடப்பட வில்லையென்பது நாம் குறிப்பிடாமலேயே விளங்கும். சர்க்கார் கணக்குப்படி மேற்கண்ட பகிரங்க தாசிகளின் வருட வருவாய் 62 கோடியே 46 லக்ஷம் ரூபாயாம்! நம் புண்ணிய க்ஷேத்திரமாகிய காசியில்மட்டும் பதினாயிரம் பெண்கள் விபசாரத் தொழிலால் ஜீவனம் செய்துவருகிறார்கள். அவர்களில் 100-க்கு 10 மக்கள் வேசைகள் குலத்தி லுதித்தவர்களும் அவ்வேசைகள் கையிலகப்பட்டு வளர்க்கப்பட்டவர்களு மாவார்கள். மீதி ஒன்பது பங்கு விபசாரிகள், ஜாதிச் செருக்கால் மூக்கு நீண்ட மேல் ஜாதிகளிற் பிறந்த ஹிந்து விதவைகள்!

அவர்க ளெல்லோரும் பகிஷ்காரத்திற் கஞ்சிக் கர்ப்பந் தரித்தவுடன், கங்கா ஸ்நானத்திற்கென்று காசி நகரம் சேர்க்கப் பட்டு எப்படியோ விதி வலியால் பிழைத்துக் கடைசியில் வயிற்றுப் பிழைப்புக்காக விபசார ஜீவனத்தைக் கைக் கொண்டவர்கள்.



கல்கத்தா நகர் ஒன்றில் மட்டும் வருஷம் 1-க்கு 2000 ஹிந்துப் பெண் குழந்தைகள் வேசிகளுக்கு விற்கப்படுகிறார்கள். இது தவிர நாட்டுப் புறங்களிலுள்ள பிரசித்தி பெற்ற கோவில்களி லெல்லாம் கடவுளுக்காகப் பொட்டுக் கட்டித் தேவ தாசிகளென்ற பெயருடன் வேசித் தொழில் நடத்துவது வெகு சகஜமாகவே யிருக்கிறது. கடவுளாகக் கருதப்படும் மூலஸ்தானத்து மூர்த்தியின் பாதங்களில் தாலியை வைத்து, அத் தாலியைக் கடவுளே கட்டினதாகப் பாவித்துக் கழுத்தி லணிந்துகொண்டு, விட புருடர்களின் காம விகாரத்திற் கிலக்காகித் தன்னை யர்ப்பணஞ் செய்துகொள்ளுவது என்ன பயங்கரமான மனப் பான்மை! அதிலும் கொடியது, தேவ தாசிகளின் ஆசை நாயகரின் மனப் பாங்கு! நம்மைப் படைத்த கடவுளாம் தந்தையினும் மேலான தந்தைக்குத் தன் ஆடல் பாடல் சேவைகளால் களிப்பிக்கும் தேவ தாசிகள், சர்வ மானிடர்களுக்கும், தாய் அல்லது மாற்றாந் தாய்க்குச் சமமும் இதினும் மேலான முறைமையுடனும் கூடியவர்க ளில்லையா? தேவ தாசிகளை விலை மகளிராகக் கருதி விலைகொடுத்துத் தன் வேட்கை நோய்க் கிரையாக்குவது என்ன தர்மம்?

நமது பல பாப கருமங்களும் அக் கருமங்களால் கிடைத்த சாபங்களும் உருவெடுத்து வந்தாற்போல இப்பொழுது இணக்க மற்ற விவாகமும், பல விவாகமும், நமக்குள் தாராளமாகப் பரவி நம்மைத் தலையெடுக்க விடாமல் அமுக்கி வருகின்றன. மணவாழ்க்கையின் மெய்யுருவை மறந்து, முதுமைப் பருவமடைந்து புருடத் தன்மையை யிழந்தும், வேட்கைப் பெருக்கால் குமரிக் கன்னிகையைநாடிப் பொருள் வலிவால், வறுமை யடைந்த பெற்றோர்களின் பெண்ணைக் கட்டுவதையும், நோயாளிகளுக்கும் பேடிகளுக்கும் தரித்திரர்களுக்கும் மூர்க்கர்களுக்கும் தங்களின் ஜாதியென்ற ஒரே அயோக்கியதையால், ஆரோக்கியமும், நேர்மையும், உயிர் வலிவும் நிறைந்த பெண்களைக் கட்டிக் கொடுப்பதையும் நாம் ஒவ்வொருவரும் கண் கூடாய்ப் பார்த்து வருகிறோம்.

ஒரு வகை விசித்திரமான இணக்கமற்ற விவாகம் நம் தென்னாட்டில் சில ஜாதியாருக்குள் இருந்து வருகிறது. அதாவது, தகுந்த வயதில் பருவ மடைந்த பெண்ணை, முறை தவறக் கூடாதென்றாவது அல்லது வேறு காரணத்தாலாவது பெண்ணிற்கு எத்தனையோ வயது (ஆண்டுகள்) குறைந்த பையனுடன் மணம் செய்து வைப்பது. இதன் பலன் எப்படி முடிகிறதென்பதை, நாம் எடுத்துரைக்கவும் வேண்டுமோ?

பையன் தன் மனைவியுடன் கூடிவாழ்ந்து, இல்லறம் நடாத்துவதற்குமுன் "மனைவி" குழந்தைகளைப் பெறுவதை அச்சாதியாருக் குள்ளாவது விபரீதமாகக் கருதப்படுவதில்லை. வடநாட்டிலுங்கூட ஏதோ கொஞ்சம் இம்மாதிரியான இணக்கமற்ற விவாகங்கள் வழக்கத்திலில்லாமலில்லையென்று தோன்றுகிறது. அப்பேர்ப்பட்ட ஓர் விவாகம், ஏப்ரல்மீ 25-ம்வ பிரசுரமான ஹிந்தி நவஜீவன் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. "இந்து உலகத்தில் இம்மாதிரியான கருணைக் கிடமான கணக்கற்ற கதைகள் உதாரணங்களாகக் கிடைக்கும்" என்றெழுதுகிறார் மகாத்மா காந்தியடிகள். அவர் இணக்கமற்ற விவாகங்களைத் தடுப்பதற்கும் திருத்துவதற்கும் தனக்குத் தோன்றிய சில உபாயங்களைக் கூறிவிட்டுக் கடைசியாக "இச் சீர்திருத்தத்தில் தலையிடுபவர்கள், உண்மையைக் கடைப் பிடித்தல், அச்சமற்ற தன்மை, உறுதி, துணிவுள்ளவர்களாக விருக்கவேண்டும்" என்கிறார். மேலும் "எந்த விவாகம், விவாகத்தினுடைய, உண்மையான வியாக்கியானத்தை யனுசரித்திருக்க வில்லையோ அது விவாகமாக மாட்டாது" என்றும் அவரே எழுதுகிறார். இக் கொள்கையின் ஆதாரத்தின்மேல் தான் நாம் முன்னேறிச் செல்ல முடியும்.

எவனுக்குச் சாதியினுடையவும், வறுமையினுடையவும், அல்லது அம்மாதிரியான வேறு விஷயத்தினுடையவும் பயமிருக்கிறதோ, அவன் எக் காலத்திலும் திருந்த மாட்டான். சீர்திருத்



தக்காரர்கள் தங்கள் உயிர்களைப் பலி கொடுத்திருக்கிறார்கள். துக்கங்களை யனுபவித் திருக்கிறார்கள். அபவாதங்களையும், நிந்தனைகளையும் பொறுத் திருக்கிறார்கள். பசியால் உயிரைத் துறந்துமிருக்கிறார்கள்!

இத்தியாகங்களா லல்லாமல் உலகத்தி னெப்பகுதிகளிலும் உண்மையான சீர் திருத்தம் நடந்தேறியதே யில்லை. ஆதலால் சுகபோக ஜீவனத்தை விரும்புவோ ரெக்காலத்திலும், கசப்பும் கடுப்பும் கொடுக்கும் இச் சீர்திருத்த வழியை வெறுக்காமலிரார். புருடர்கள் தங்கள் மனோ விகாரம் மழுங்கு மட்டும் வேண்டிய பெண்களை மணப்பது, மிக்க மதிப் பென்றும், பெரும் பெருமையென்றும், நமது பாரத நாட்டில் மட்டுமல்லாமல் மற்றைய கீழ் நாடுகளி லெல்லாங் கருதப்பட்டு வருகிறது. இவ் வழக்கம் அயல் நாடுகளிலும், பிற மதத்தினர்களிடத்தும் காணப்பட்ட போதிலும் நம்மிந்துக்களி லிருக்கவேண்டு மென்பதற்கு நியாயமாவது ஆதாரமாவது கிடையாது. பற்பல விவாகத்தால் நடக்கும் தீங்குகள் உலகப் பிரசித்தமானவை.

பெண்களுக்கு வேறு எவ்வித சுதந்தரங்க ளளிக்கப்பட்ட போதிலும், ஆடவர்களுக்கு மனைவி யிருக்கும் பொழுது மறுமணம் செய்து கொள்வதற்கு லைசென்ஸ் பொது மக்களால் பாராட்டப் பட்டு வரும்வரை, பெண்களின் நிலைமையை நாம் ஒருபோதும் உயர்த்தவே முடியாது.

விதவா விவாகமே அனுமதிக்கப் படாத இக்காலத்துப் பாஷாண்டித் தர்மத்தில், ஸ்திரீகளுக்கு விவாக ரத்துச் செய்துகொள்ளும் உரிமையை மனதில் நினைத்தாலே மஹா பாதகமென்பார்கள். ஆனால் விவாகத்தைத் தகுந்த காரணங்களால் ரத்துச் செய்து மறுமணம் செய்துகொள்வதற்கு நம் நாட்டில் முற்காலத்தில் ஸ்திரீகளுக்குப் பூரண சுதந்தர மிருந்ததாக கௌடில்பரின் அர்த்த சாஸ்திரம் என்னும் நூலால் தெரியவருகிறது.

அந்நூல் மஹா புருஷரான சாணக்கியரால் வரையப் பெற்றது. அது மற்ற ஸ்மிருதிகளைப் போல் ஆகமங்களையே வாழ்விற் காதாரமாகக் கொண்டு எழுதப்படவில்லை. அக்காலத்தும் அதற்கு முற்காலத்தும் அமுலிலிருந்து வந்த வழக்குகளை அந்நூலிற் காணலாம்.

2200 வருடங்களுக்கு முன் நம் நாட்டில் எவ்வளவு தாராளமாகப் பெண்களுக்கு மறுமண விஷயத்திற் சுதந்தரங்களிருந்தன வென்பது மேற்கூறிய நூலின் மூன்றாவது பாகம், 2, 3, 4-வது அத்தியாயங்களிற் காணலாம்.

கொடுங்கோன் மன்னர்கள், குடிகளைக் குனியவைத்துக் குதிரையேறி, மன மொவ்வாத ஆட்சியை, எவ்வகையினும் நிலைநிறுத்தும் பொருட்டும், எவ்வடக்கு முறைகளையும் எப்படிப் பிரயோகஞ் செய்கிறார்களோ, அப்படியே பெண்களை யடக்கி யாளுவதற்கு இவ் விழிவான உபாயங்களை, நம் மேல்ஜாதி ஆண்மக்கள் பிரயோகஞ் செய்கிறார்கள்.

ஆடவர்களின் அபரிமிதமான ஆதிக்கத்திற்கு அடிப்படையான ஆதாரங்கள், நம் விவாக முறைகளேயாம். பெண்களின் பேதமை யென்னும் பெருங் கடலில், பெருகப் பாயும் ஜலதாரை பெண்களுரிமை மறுப்பேயாம்.

இறுதியில் இந்து இனத்து இயற்கை மலர்ச்சிக்கு இடர்களாயிருப்பவைகளும் இவையே.



# சுதேச கைத்தொழில்கள்.

## ஸ்ரீமாந் T. N. வெங்கடேசன் அவர்கள்

நந்தாய் நாட்டு மக்களில் பெரும்பாலோர், மேனாட்டின் நாகரீகத்திற் கடிமையாகி, அந்நிய நாட்டுச் சாமான்களின் மீதே பேரவாக்கொண்டு, நம் சுதேச சாமான்களை அலக்ஷியம் செய்வதால் உள்நாட்டுக் கைத் தொழில்கள் ஆதரிப்பாரின்றிக் குடத்திலிட்ட தீபம்போல் பிரகாசம் குன்றி நாளுக்கு நாள் க்ஷீணதிசை யடைந்து வரத் தலைப்பட்டுவிட்டன. நம்மிந்திய தேச சரிதங்களை உற்று நோக்குவோமாயின் நம் பண்டைய இந்தியா கைத்தொழிலில் எத்தகைய உந்நத நிலையை யடைந்திருந்ததென்பதும், அப்போழ்து நம்மிந்திய மக்கள் கைத்தொழில்களை எவ்வளவுதூரம் ஆதரித்துப் போற்றி வந்தனரென்பதும் செவ்விதிற் புலனாகும். சுதேச கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு அந்நிய நாட்டின் சாமான்கள் பஹிஷ்காரமும் ஓர் தக்க சாதகமாயிருக்குமெனக் கருதி, நம் மஹாத்மா காந்தியவர்கள், ஒரு பெருங் கிளர்ச்சியை நம் நாட்டில் பொதுமக்களிடையே உண்டாக்கினார். அதைப்பலர் ஆதரித்தும் சிலர் தூற்றியும் வந்தார்கள். இதன் உட்கருத்தை நன்குணராதாரே இக் கொள்கையைப் பின்பற்றாமல் தூற்றி அலக்ஷியம் செய்ய முற்பட்டார்கள். ஓர் நாட்டின் கைத்தொழில்கள் அபிவிருத்தியடைய வேண்டுமானால் அந்நாட்டு மாந்தர்களுக்கு அந்நியநாட்டுச் சாமான்களின்மீது ஏற்பட்டிருக்கும் அவாவைக் குறைத்து அச்சாமான்களை அவர்கள் பஹிஷ்கரிக்கும்படி

செய்யவேண்டுவது ஒவ்வொரு தேசாபிமானியின் முக்ய கடமையாகும். மேனாட்டார்களும் தங்கள் உள்நாட்டுக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்காக இதே முறையைக் கையாண்டிருக்கிறார்களென்பதை நாம் என்றும் மறக்கலாகாது. நம் நாடு, கைத்தொழில் வியாபாரம் முதலியவற்றால் சிறப்படைந்து கடல் மார்க்கமாக மேனாட்டாருடன் சாமான்கள் போக்குவரவு ஏற்படுத்திக்கொண்டிருந்த சமயம் அவர்கள் நம்மவரிடம் பொறாமை கொண்டதோடமையாது நம்நாட்டின் சாமான்கள் அங்கு போக முடியாமலிருக்கும்படி ஏற்றுமதி இறக்குமதிச் சுங்கங்களை உயர்த்தியும் நம்மனோர் சாமான்களைப் பஹிஷ்கரித்தும் தங்கள் உள்நாட்டில் பெருங் கிளர்ச்சிகளைச் செய்து தங்கள் சுதேச கைத்தொழில்களை விடா முயற்சியோடு விருத்தி செய்து தற்போதுள்ள உந்நத நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டார்கள். இத்தகைய சூழ்ச்சிகள் ஏனோ இன்னும் நம்மவர்களுக்கு நன்கு புலனாகவில்லை. இது நம் தாய்நாட்டின் துர்ப்பாக்கியமேயாகும். நம் சகோதர சகோதரிகளுக்கு நம்மிந்திய நாடு பல்லாற்றானும் முன்னேற்றமடைய வேண்டும் என்னும் விருப்பம் இருக்குமானால், நமக் கத்யாவசியமான ஒவ்வொன்றிற்கும் பிறர் கையையே எதிர் பார்ப்பது பேதமை என்பது நன்கு விளங்கினால், உடனே சுதேச கைத்தொழில்களை ஆதரித்து நம் உள்நாட்டிலும் பல கைத்தொழிற்சாலைகளை ஏற்படுத்தி அதை முன்னுக்குக் கொண்டுவரவேண்டிய முயற்சிகள் செய்தல்வேண்டும். இத்தகைய பெரும் முயற்சிகளுக்கு நம் நாட்டிலுள்ள செல்வவந்தர்களின் சகாயமும் பெரிதும் வேண்டற்பாலது.

நம் நாட்டிலுள்ள செல்வம் படைத்த சீமான்களோவெனில், தங்கள் பணங்களை வட்டிக்குக் கொடுப்பதிலேயே மிகவும் கவனமுடையவர்களாயிருக்கின்றனர். சிலரோ அதிக வட்டிக்குக் கொடுப்பதின்மூலம் நாட்டின் மக்களை வாட்டுகின்றனர். பலர் பணமோ வருஷம் ஒன்றிற்கு நூற்றிற்கு இரண்டு ரூபாய் வட்டியுமின்றி தங்கள் இல்லத்திலும், மிகவும் சொற்ப வட்டிக்குப் பொது பாங்குகளிலும் லக்ஷக்கணக்காக வறிதே தூங்கிக்கொண்டிருக்கிறது. இதனால்



நாட்டிற்காவது அவர்களுக்காவது எட்டுணை நன்மையும் கிடையாது. இனியேனும் இத்தகைய பணக்காரர்கள் விழிப்படைந்து சுதேச கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்காகத் தங்கள் தனங்களையுதவிப் பல நகரங்களிலும் ஆங்காங்கே கைத்தொழிற் சாலைகளை ஏற்படுத்தி நாட்டிற்கும் தங்களுக்கும் பெரிதும் நன்மை தேடிக்கொள்ள முன்வருதல் வேண்டும். அந்நிய நாட்டினர் கேவலம் சொற்ப சாமான்களையும் ஊக்கத்தோடு செய்து அதனால் அதிக லாபம் அடைகிறார்கள். நம்மனோரும் தீப்பெட்டி, காகிதம், பென்சில் முதலிய இதுபோன்ற அவசியமான எல்லாச் சாமான்களையும், பிறதேயத்தார் செய்யும் விளையாட்டுக் கருவிகள்போன்ற வினோத சாமான்களையும் செய்வதுடன், யந்திர சகாயங்களைக் கொண்டு நூல் நூற்கவும் உள்நாட்டிலேயே பல மில்களை ஏற்படுத்தி வஸ்திரங்கள் செய்யவும் முற்படலாம். யந்திர சகாயங்களை நம்மவரில் சிலர் வெறுக்கின்றனர்.

அந்நியதேச ஆடை முதலிய சாமான்கள் ஏராளமாய் நம் நாட்டில் வந்து குவிந்திருக்கும் தற்காலம் நாம் யந்திர சகாயமின்றி அவைகளை வெல்ல முடியாது. மேலும் யந்திர சகாயமில்லாவிட்டால் நம் தேசத்திற்கு வேண்டிய ஆடை முதலிய யாவும் நாமே உற்பத்தி செய்துகொள்ள இயலாமற்போகும். கைராட்டினத்தைக் கொண்டு நூல் நூற்கும் தொழில் நந்தேயத்தில் பண்டைக் காலத்திலேயே கிராமங்கள்தோறும் நடந்துவந்ததென்பதை யாவருமறிவார்கள். அவ்வமயம் அது மிகவும் சிறப்பாக நடந்து வந்திருக்கிறது. சில வனிதா ரத்தினங்கள் 200-ம் நெம்பர் நூல்வரை கையால் நூற்றிருக்கிறார்களென்றால் நூல் நூற்கும் தொழிலில் அக்கால மக்கள் எத்துணைப் பயிற்சி பெற்றிருந்தார்களென்பதை நாமறிய வேண்டியிருக்கிறது. அந்நிய நாட்டின் ஆடைகளின் மிகுதியால் அந்நியரின் வியாபார தந்திரத்தால் நம் நாட்டின் ராட்டினத் தொழில் நாளடைவில் இருந்த இடம் தெரியாமல் வெகுநாள் மறைந்து கிடந்தது. புண்ணிய சீலராகிய மகாத்மா, காந்தியவர்கள் மீண்டும் அத்தொழிலுக்குப் புத்துயிரளித்து நடைமுறையில் அதைக் கொணர்ந்திருக்கி

ஞர். சின்னாட்களாக அத்தொழில் நம் தேயத்தில் பரவிவருகிறது. ஆயினும் பலர், இக் கதர் இயக்கத்தை ஆதரித்தும், சிலர் இதனால் ஏழை மக்களுக்குப் போதுமான கூலி கிடைக்கவில்லையென்றும், நம்நாட்டு மக்கள் யாவருக்கும் வேண்டிய ஆடைகளையெல்லாம் இவ்வியக்கம் ஒன்றினாலேயே வழங்கிவிட முடியாதெனவும் குறைகூறி அநாதரித்தும் வருகின்றனர்.

என்றாலும் இக்கதர்ப் பிரசாரம், மிகவும் அத்யாவசியமானதும் கைத்தொழில் அபிவிருத்திக்கு மிகவும் இன்றியமையாததுமாகும். நம்மவர்களில் ஒவ்வொரு குடும்பத்திலும் சிலர் தாம் உணவருந்திய நேரம்போக மீதி நேரங்களையெல்லாம் பயனற்ற விளையாட்டுகளிலும் வீண் குதர்க்க வாதங்களிலும் கழிக்கிறார்களென்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இத்தகையோர்கள் நூல்நூற்கும் தொழிலை மேற்கொண்டால் எவ்வளவு பிரயோஜனகரமாகவிருக்கும். மேலும் ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் தத்தம் ஓய்வுநேரங்களை வீணாக்காமல் இத்தொழிலிற் பயிற்சிசெய்து வந்தால் அவரவர்கள் குடும்பங்களுக்கு வேண்டிய ஆடைகளுக்குப் போதுமான நூல் உற்பத்தி அவரவர்களே செய்துகொள்ளலாம். இந்நூலை நெசவுகாரர்களிடம் கொடுத்து ஆடைகளாக நெய்யச்செய்து இலகுவில் சொற்பச் செலவுடன் வேண்டிய ஆடைகளைப் பெறலாம். நம்மிந்திய தேயப் புதல்வர்களே! நீங்கள் முன்னேற்றமடைய விரும்பினால், உங்கள் நாடு விடுதலையடைய வேண்டுமானால், நம்சகோதர ஏழை மக்களின் பசிப்பிணியைப் பறக்கடிக்கக் கருதினால், நம்தாய் நாட்டில் தனலக்ஷ்மி தாண்டவமாட ஆசைப்பட்டால், அந்நிய நாட்டாரின் தயவை எதிர்பார்க்காமல் வாழ நினைத்தால், நம்நாட்டின் செல்வங்களையெல்லாம் பிறதேயத்தார் கொள்ளை கொள்ளாமல் தடுக்க எண்ணினால் உடனே ஒவ்வொருவரும் வீராவேசத்துடன் விழிப்படையுங்கள். சுதேச கைத்தொழிலை ஆதரித்து வளர்க்க மென்மேலும் முயற்சி செய்யுங்கள். அந்நிய நாட்டுச் சாமான்களையும் ஆடைகளையும் அறவே பஹிஷ்காரம் செய்யுங்கள். சுத்தக் கதரையே சதா உடுத்துவதுமன்றிச் சுபாசுபகாரியங்கள் முதலிய எச்சமயங்களிலும்



# நெல்.

வக்கீல், ஸ்ரீமாந் நடேச பிள்ளையவர்கள்.

தென்னிந்தியாவில் நெற்பயிர் செய்யக்கூடிய பூமிகள் விசேஷமாக இருந்தும் அப்பயிர் செய்ய நம்மவர்கள் முன்வரவில்லை. அளவிறந்த நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன.

சென்னை இராஜதானியில் உற்பத்தியாகும் நெல்லில், சிற்சில ஜில்லாக்களின் நெல்தான் அன்னிய நாடுகளில் விற்கப்படுகின்றன. மற்ற ஜில்லாக்களில் விளையும் நெல் அந்தந்த ஜில்லா வாசிகளின் உணவுக்கு மட்டும் போதுமானதாக இருக்கிறது. கஞ்சம், விசாகபட்டணம், கோதாவரி, கிருஷ்ணா, தஞ்சாவூர், மலையாளம் இந்த ஜில்லாக்களில்தான் நெற்பயிர் ஜாஸ்தியாக செய்யப்படுகிறது. அவைகளிலும், கிருஷ்ணா, கோதாவரி, தஞ்சாவூர் இந்த ஜில்லாக்களில்தான் நெல்லரைக்கும் யந்திரங்கள் மிகுதியாக ஏற்பட்டிருக்கின்றன.

---

உபயோகப்படுத்துங்கள். உங்கள் இல்லந்தோறும் சுதேச சாமான்களையே நிரப்புங்கள். இதுவே நீங்கள் செய்யவேண்டிய தேசத்தொண்டும் பரோபகாரமும் சுதர்மமுமாகும். நம் பாரதமாதாவின் நற்றவப் பயனாய் இதுபோழ்து நம் தேசத்திற்காகச் சதா உழைப்பதே தன்னரும் பெருங் கடமையெனக் கொண்டு அதற்கெனவே தோன்றியுள்ள தேசீய மணங்கமழும் ஒப்பற்ற நம் "பாரதி" யும் சுதேச கைத்தொழிலை விருத்தி செய்வதற்கு வேண்டிய பற்பல இனிய சுவைகளோடு கலந்த எண்ணிலாக் கட்டுரைகளைத் தன்னிடம் அடக்கிக்கொண்டு மாதாமாதம் நம் இருப்பிடம் தேடிவந்து நம்மைத் தட்டி எழுப்பித் தேசாபிமானம் வளரும்படி செய்யுமென்பதில் எட்டுணையும் ஐயமின்று.

கோதாவரி கிருஷ்ணா ஜில்லாக்களில் அரைக்கப்படும் புழுங்கலரிசி கோயம்புத்தூர், மலையாளம், கொழும்பு, மோரீஸ் இவைகளுக்கு அனுப்பப்பட்டு விற்கப்படுகின்றன. இந்த ஜில்லாக்களில் அரைக்கப்படும் பச்சரிசி பம்பாய் இராஜதானி, நைஸாம் இராஜ்ஜியம், பல்லாரி ஜில்லா, சென்னை நகர் இவைகளுக்கு அனுப்பப்பட்டு விற்கப்படுவதுடன் பங்களூருக்கும் சொற்பம் அனுப்பப்படுகிறது.

தஞ்சை ஜில்லாவில் பச்சரிசி அரைப்பதில்லை. புழுங்கலரிசி தான் அரைக்கிறார்கள். இந்தப் புழுங்கலரிசியில் பெரும்பாகம் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இவ் விந்தியாவில் நெல் உற்பத்தியாகுந் தேசங்கள் ஒவ்வொன்றிலும் சென்ற (1923—24) ஒரு வருஷத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்ட நிலம் ஏக்கர் 1-க்கு சராசரி கிடைத்த அரிசி இவைகளைக் காட்டக்கூடிய ஜாப்தா வொன்று அடியிற் காட்டப்பட்டிருக்கிறது.

| தேசம். | நில விஸ்தீரணம் ஏகர். | எவ்வளவு டன் நெல். | ஏகர் 1-க்கு சராசரிகிடைத்த அரிசி பவுண்டு. |
|---|---|---|---|
| பங்காளம் | 20327000 | 7575000 | 828 |
| பேகார் ஒரிஸா | 13997000 | 4899000 | 784 |
| சென்னை இராஜதானி | 10634000 | 4720000 | 994 |
| பர்மா | 11453000 | 4167000 | 815 |
| யுனைடெட் ஸ்டேட்ஸ் பிராவின்ஸ் | 7039000 | 1971000 | 627 |
| ஸெண்ட்ரல் பிராவின்ஸ் பேரார் | 5815000 | 1796000 | 692 |
| அஸ்ஸாம் | 3472000 | 1486000 | 761 |
| பம்பாய் இராஜதானி | 3196000 | 1358000 | 952 |
| குடகு | 83000 | 40000 | 1080 |
| ஹைதராபாத் | 502000 | 160000 | 714 |
| மைசூர் | 638000 | 160000 | 562 |
| பரோடா | 171000 | 26000 | 341 |



பங்காளம், பேகார், சென்னை இந்த இராஜதானிகளில் நெற்பயிர் விசேஷமாகச் செய்யப்பட்டாலும் இந்தத் தேசங்களில் விளையும் நெல்லில் பெரும் பாகம் அந்தந்தத் தேச வாசிகளின் உணவுக்கே செலவழிக்கப் படுகின்றன. பர்மா தேசத்திலோ அப்படிக் கில்லை. விளைந்த நெல்லில் முக்கால் பாகம் கப்பலிலேற்றுமதி செய்யப்பட்டு அன்னிய நாடுகளில் விற்கப்படுகின்றன.

சென்ற 1924-ம் வருஷத்தில் சென்னை இராஜதானியினின்றும் 52937 டன் அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டு அவை 10576065 ரூபாய்க்கு விற்கப்பட்டிருப்பதாகவும், பர்மா தேசத்தினின்றும் 1214497 டன் அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டு 211667236 ரூபாய்க்கு விற்றுமுதல் செய்யப்பட்டதாகவும் கணக்கிட்டிருக்கிறார்கள். பர்மா தேசத்திலின்றும் சென்ற வருஷத்தில் 579400 டன் அரிசி இவ் விந்தியாவிலேயே விற்கப்பட்டதாகவுந் தெரிகிறது. பர்மா தேசத்தில் பச்சரிசியே மிகுதியாக அரைத்து விற்கிறார்கள்.

ஐரோப்பாவுக்குப் பர்மா, ஸயாம் தேசங்களினின்றும் பச்சரிசி மிகுதியாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. பங்காள தேசம் பாட்னாவினின்றும் பச்சரிசி சொற்பந்தான் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆங்கில நாட்டிலுள்ள லிவர்பூர் நகரத்தில் இந்தப் பச்சரிசி வியாபாரம் பலமாக நடக்கிறது.

சென்ற 1924-ம் வருஷத்தில் ஆங்கில நாட்டுக்கு 108116 டன் பச்சரிசி இறக்குமதி செய்யப்பட்டு ரூ. 19720409-க்கு விற்கப் பட்டதாகவும், ஜர்மன் தேசத்துக்கு 231270 டன் பச்

சரிசி இறக்குமதி செய்யப்பட்டு ரூ. 39789308 க்கு விற்கப் பட்டதாகவும் கணக்கிட்டிருக்கிறார்கள்.

இவ் விந்தியாவில் சாகுபடி செய்யப்படும் நிலங்களில் 100-க்கு 35 பாகம் நெல் சாகுபடி. அஸ்ஸாம் தேசத்தில் 100-க்கு 80' பர்மா தேசத்தில் 100-க்கு 74, பங்காள தேசத்தில் 100-க்கு 70 வீதம் நெல் சாகுபடி யென்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் இந்தியாவைத் தவிர ஆசியாக் கண்டத்தில் ஸயாம், சைனா, கொச்சின் சைனா, ஜபான், ஜாவா, ஸ்ட்ரெயிட் செட்டில்மெண்டு அதாவது மலேயா நாடுகள், இலங்கைத் தீவு, பிலிபியன் முதலிய தீவுகள் இவைகளில் நெற்பயிர் செய்கிறார்கள்.

ஆப்பிரிக்கா கண்டத்தில் ஈஜிப்ட் தேசத்தில் நீல நதிக் கரையில் விசேஷமாகவும் கீழ ஆபிரிகா, மேல ஆபிரிகா, பிரான் ஸிலாகா ஸெனிகால், சூடான், மெடகாஸ்கர் இத் தேசங்களிலும் நெற்பயிர் செய்கிறார்கள்.

ஆஸ்திரேலியா கண்டத்தில் நியு சவுத் வேல்ஸ், குவீன் ஸ்லாண்டு, ஸாண்டுவிச் தீவுகள் இவைகளில் நெற்பயிர் சில பாகங்களில் செய்கிறார்கள்.

ஐரோப்பா, கண்டத்தில் இத்தாலியா தேசத்தில்தான் விசேஷமாக நெற்பயிர் செய்கிறார்கள். ஸ்பெயின், போர்சிகல், கிரீஸ் இத்தேசங்களிலும், பிரான்ஸ் தேசத்தில் ரோன் நதிக்கரையிலும் நெற்பயிர் செய்கிறார்கள்.

வட அமெரிக்கா யுனைடெட் ஸ்டேட்ஸைச் சேர்ந்த லௌஸியானா, ஜியார்ஜியா, வட காரொலயினா, தென் காரொலயினா, தென் அமெரிக்காவில் ஈஸ்டு இந்தியா தீவுகள் இவைகளில் நெற்பயிர் செய்கிறார்கள்.



அமெரிக்கா தேசத்துக்கு நெல் ஆதியில் இவ்விந்தியாவினின்றும் கொண்டுபோய்ப் பயிர் செய்தாலும் உருவம், நிறம், சுத்தம் இவைகளில் அமெரிக்கா தேசம் காரோலயினாதேச அரிசிக்கு வேறெந்த அரிசியும் ஒப்புவமை சொல்ல முடியாது. இதனால் அமெரிக்கா தேசத்திலுள்ள பற்பலவகை நெல்லை வரவழைத்துச் சென்னை இராஜதானியில் பயிர் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

அமெரிக்கா யுனைடெட் ஸ்டேட்ஸ் தேசமும் இந்தியாவும் சமமான சீதோஷ்ண பூமியாகையால் அத்தேசத்தில் பயிர் செய்யப்படுவன யாவும் இவ்விந்தியா தேசத்தில் பயிர் செய்யலாம்.

தஞ்சை ஜில்லா அரிசி பெரும்பாலும் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இரங்கூன் பங்காளம் இத் தேசங்களினின்றும் அரிசி ஷை கொழும்பில் இறக்குமதி செய்யப்படுவதில் போட்டா போட்டிகளேற்பட்டுத் தஞ்சை ஜில்லா அரிசி குறைந்த விலைக்கு விற்கும்படியான அவசியம் நேருகிறது. ரெங்கூன், ஸயாம், அமெரிக்கா இத தேசங்களில் பயிர் செய்யப்படும் உயர்ந்த தினுசு நெல்லைக் கருவித்து இத் தஞ்சை ஜில்லாவில் பயிர் செய்து, புச்சரிசியாக அரைப்பதுடன் பாலீஷ் யந்திரங்கள் கருவித்து நன்றாகப் பாலிஷ் செய்து இங்கிலாந்து ஜர்மனி இத் தேசங்களுக்கு அனுப்பினால் தகுந்த விலைக்கு விற்கலாம்.

அமெரிக்கா தேசத்தவர்கள் செய்வதுபோல் மோட்டார்க் கலப்பைகளால் உழவேண்டும். நம் தேசத்தவர்கள் பெரும்பாலும் ஆற்று ஜலம் ஏரிஜலம் மழை ஜலம் இவைகளை நம்பியே நஞ்சையைப் பயிர் செய்கிறார்கள். பர்மா தேசத்தில் மட்டும் மழை, வெள்ளம் எந்த வருஷத்திலும் நிரந்தரமா யிருக்கிறது. தென்னிந்தியாவில் அப்படிக்கில்லை. ஆகையால் நஞ்சை நிலங்கள் நாலைந்து ஏகர்களுக்கு ஓரிடத்தில் அகண்ட அறவுகள் ஏற்படுத்தி ஆயில் இஞ்சினைக் கொண்டு தண்ணீ ரிறைத்தால் விசேஷ நெல் உற்பத்தி செய்யலாம். பூமிக் குடையவர்களுக்குத் தகுந்த இலாபங் கிடைக்கும்.

# பரத கண்டத்தின் பெருமையும் தற்காலத் தன்மையும். *

கவிச் சக்ரவர்த்தியான ரவீந்திரநாத் தாகூரால் ஸ்தாபிக்கப் பெற்றிருக்கும் சாந்தி நிகேதனம் என்ற பெயருடன் விளங்கும் கலாசாலையின் பெருமையை எவ்வாறு விவரிப்பது? சாந்திநிகேதனம் என்றால் சாந்திக்கு இருப்பிடம் என்பது அதன் உள்ளுறை. இந்தச் சர்வ கலா சாலை ஒழுக்கத்தாலும், ஆராய்ச்சிகளாலும், கல்வி கேள்விகளாலும், பல திற உயர்வுகளாலும் சிறந்து விளங்குகிறது. இந்தியர்கள் இன்று சுயேச்சையுடனிருந்தால், உலகமே கண்டு ஆச்சரியப் பட்டுத் திகைத்துப் போகும்படியான அனேக அரிய பெரிய காரியங்களைப் பாரத புத்திரர்கள் செய்து தீர்க்கும் அபார ஆற்றல் வாய்ந்தவர்களென்பதற்குச் சாந்தி நிகேதனமே ஒரு உயரிய உதாரணமாக நின்று விளக்குகிறது. அகில மனுக்கத்திற்கும் ஒரே ஒரு சாந்தி நிகேதனம் தான் இருக்கிறது. பலப் பல சாந்தி நிகேதனங்கள் உலக மெங்கும் தோன்றல் வேண்டும். ஐரோப்பாக் கண்டம், ஒரு ரவீந்திரரை மட்டும் அறிந்திருக்கிறது. இந்தியர்கள் சாதாரணமானவர்களல்லவென்பதையும் அவர்கள் அபார ஆற்றலையும் உயரிய நாகரீகத்தையும் தங்களுக்குள் கொண்டிருக்கிறார்களென்பதையும் நமக்கு (ஐரோப்பியருக்கு) ரவீந்திரநாத் தாகூரின் பொன்னுரைகளும் அவருடைய ஆச்சிரமுமே போதிக்கின்றன.

* சில ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீமான் J. A. ஸ்பெண்டர் என்பவரால் "வெஸ்ட்மினிஸ்டர் கெஜெட்"டில் இக் கட்டுரை ஆங்கிலத்தில் எழுதப் பட்டது. இதன் கருத்தைத் தழுவி இங்கு மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

ஆசிரியர், "பாரதி"



மாணவர்களும் மாணவிகளும் ஜாதி மத வித்தியாசமின்றி ஆச்சிரமத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். மாணவ மாணவிகளின் புத்திக் கூர்மையையும், நடத்தையையும், பரிசுத்தமான மனதையும், கம்பீரமான தோற்றத்தையும் எவரால் குறைவு படுத்திக் கூறக் கூடும்? இக்கால நாகரீகத்திலும் சர்ச்சைகளிலும் உன்னதமாய்ப் பிரகாசிப்பதாகப் பெருமை பாராட்டிக் கொள்ளும் எந்த ஐரோப்பிய வகுப்பாரும் சாந்தி நிகேதனத்துச் சிறுவர் சிறுமிகளுடைய பழக்க வழக்கங்களைப் போற்றுவார்களென்றே தைரியத்துடன் சொல்லுகிறேன். இயற்கையின் அழகுகளையும் ஆச்சர்யங்களையும் அறிந்து அனுபவிக்கும் ஆற்றல் அவர்களுக்கு அதிகம். எவ் விஷயத்தையும் எளிதில் கிரகித்து உண்மையை யறியும் சக்தி அவர்களுக்கு அபாரம். அந்த ஆச்சிரமத்தி லிருக்கும் போதகர்களும் மாணவர்களும் சிந்தனை உலகத்தில் தங்களையே மறந்து உலாவித் திரிந்து பேரின்பம் அனுபவிக்கிறார்கள். அதனை நமது ஆங்கில மாணவன் கண்டறிந்து அனுபவிப்ப தில்லை. இந்திய மாணவனுடைய கற்பனை உலகையும் அவன் அனுபவிக்கும் தெவிட்டாத இன்பத்தையும் நமது (ஐரோப்பாக் கண்டம்) மாணவர்கள் மடமை என்று பேசி இகழ்கிறார்கள். இது மடமையிலும் மடமையே.

## கிராமத்திய அறிஞர்கள்

கிராமங்களிலும் பட்டி தொட்டிகளிலும் உள்ள அறிஞர்கள் இந்தியாவில் நட்சத்திரங்கள் போன்று பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்திய நாட்டாரது மகோன்னத பதவியை நமது தேசத்தார் உண்மையாகவே அறிவதில்லை. "ஏன்?" என்று கேட்டாலோ, கேவலமான புலன் இன்பங்களில் ஈடுபட்டு அவதிப் படுகின்றோம். சிந்தனை சக்தியையும், மன எழுச்சியையும், இயற்கையின் ஆழ்ந்த ஆராய்ச்சியையும் கவனிக்காது, நாம் நமது மூளையை-மனோ சக்தியைப் பணப் பேய்க்கு அடிமைப் படுத்தியிருக்கிறோம். "புலனால் உண்டாகும் இன்பம் சாஸ்வதமானதல்ல; மனதுக்கு-ஹிருதயத்துக்குத் தேடிக் கொடுக்கும் இன்பமே

"என்றும் நிலைத்து நிற்பது; அதுவே பேரின்பம்" என்ற மேலான நோக்கம் ஐரோப்பியரிடமில்லை. அதற்கு மாறாக, இந்தியாவிலுள்ள சிசுக்களுக்குங் கூட இந்த மேலான உணர்ச்சி இல்லாமலில்லை.

இந்தியாவின் இவ்வுணர்ச்சியினுடைய மர்மத்தை ஒவ்வொரு பிரிட்டிஷாரும் அதிகமாக அறிய வேண்டியது அத்யாவஸ்யம். அவ்வுணர்ச்சியோ மதத்தையும் வகுப்பையும் தழுவினது. படித்தவர்களென்றும் படியாதவர்களென்றும் இந்தியர்களை இரண்டு பாகமாகப் பிரித்து படிப்பில்லாதவர்களே கோடிக் கணக்கானவர்கள் என்று மதித்து "கல்வி கல்லா மடையர்கள்" என்று இந்தியர்களை நகைக்கிறார்கள். இவ்வாறு கூறுவதை மடமையென நான் கூறுகிறேன், படிப்பு என்பது என்ன? ஒரு பாஷையை அழகாக எழுதுவதும், படிப்பதும், பேசுவது மட்டும் கல்வியெனக் கொள்ள முடியுமா? வாசிக்கவும் எழுதவும் அநேக இந்தியருக்குத் தெரியாதாகையால், இந்தியர்கள் அறிவு இல்லாதவர்களென்றும், சுதந்திரம் அடைய அந்தஸ்து அற்றவர்களென்றும் நம்மவர்கள் விபரீதமாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

கவிச் சக்ரவர்த்தி ரவீந்திரருடைய அபிப்பிராயம் இதற்கு முற்றிலும் விரோதமானது. இந்திய நாட்டின் பாமர ஜனங்களுடைய கல்வியானது அநேக நூற்றாண்டுகளாக வெகு அழகாகப் பரவி வந்ததென்று அவர் கூறுகிறார். உயர் நூற்களையும், சாஸ்திரங்களையும், இதிகாச புராணங்களையும் பரத கண்டத்தில் பாமர மக்கள் தலைமுறை தலைமுறையாக மனப் பாடம் செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். ஆகையால் அவர்களுடைய மனம் முற்றுமுணர்ந்த பண்டிதர்களுடைய மனதைப் போல் பயிற்சி பெற்றிருக்கின்றது. இயற்கை அழகின் மர்மத்தைக் கண்டு உண்மையான இன்பத்தை அவர்கள் என்றும் அனுபவிக்கிறார்கள். உலக அபிவிருத்தியைக் கருதி உயர் தனி நோக்கத்துடன் அவர்கள் வாழ்கிறார்கள். கீழ் வங்காளத்தின் நாட்டுப் புறங்களில் வாழும் சில பண்டிதர்கள் ஓய்வு ஏற்பட்ட பொழுது எழுதிய கவிகளைச்



சேர்த்துத் தொகுத்து ஒரு சிறிய புஸ்தகமாக வெளியிட்டிருக்கிறார் ரவீந்திரர். அக் கவிகளைக் கவனித்து வாசித்துப் பார்க்குமிடத்து, அக்கிராமப் பண்டிதர்கள், சொல் வளமும் பொருள் நயமும் பொருந்திய உயர்தரப் பாக்கள் இயற்றுவதில் எவ்வளவோ மேன்மையுற்று விளங்குகிறார்கள் என்பது தெரிய வரும். அக் கவிகள் உலக போகத்தை மட்டும் குறிக்காது, தத்துவ ஞானத்தையும் விவரிக்கின்றன.

இயற்கை வர்ணிப்பு மட்டுமின்றி எத்தனையோ வகை வகையான வனப்பு வாய்ந்த வஸ்துக்களை உலகத்தாருக்குக் கொடுத்தருளிய ஆண்டவனது அபார அருளை அப் பாடல்கள் ஸ்துதிக்கின்றன. விசாலமான மைதானங்களில் கல்வியினால் தேர்ந்த வித்வான்களை வரவழைத்துப் புராணக் கதைகளைப் படிக்கச் செய்தும் தக்க கல்வி கற்றறிந்த நடிகர்களை வரவழைத்து நடிக்கச் செய்தும் கிராம வாசிகள் பார்த்தும் கேட்டும் சந்தோஷம் கொள்கிறார்கள். தற்காலத்தில் ஆங்கிலேயருக்கும் இந்தியருக்கும் ஏற்பட்டிருக்கும் போர், கேவலம் ராஜ்ஜியத்தினால் மட்டும் உண்டானதல்லவென்று கூறுகிறேன். இரண்டு தேசத்தார்களும் நடைமுறை பாவனைகளிலும், மனோ பாவத்திலும், அறிவின் போக்கிலும், தன்மையிலும், நோக்கத்திலும் மாறுபட்டவர்களாயிருக்கிறார்கள். இவ் வேற்றுமையை மிக நன்றாய் வங்காளத்தில் காணலாம்.

வங்காளத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் பண்டைக் கலா ஞானம் ஜோதியெனப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. சாந்தியும் அன்பும் பொங்கித் ததும்பும் கவிகளை உலகத்திற்களிக்கும் இந்திய நாட்டுப் புனிதர்களின் நிர்மலமான மனதில் துரதிர்ஷ்ட வசமாய் இப்பொழுது இராஜீய விவகாரங்கள் புகுந்து விட்டன. அன்பார்ந்த அவர்களது உள்ளத்தில் இப்பொழுது வெறுப்புத் தோன்றியிருக்கிறது. அப்பகைமையை, அடிமை வாழ்வின் மீதுள்ள வெறுப்பென்றே கூறவேண்டும். உண்மையை அறியும் சக்தியில்லாத நாம் பொறுப்பில்லாது கவிவாணர்களான வங்காளிகளைக் கேவலமாக நினைத்து, நகைத்து, அவமதிக்கிறோம்.

சில முட்டாள்களும் வங்காளத்தில் இருக்கிறார்கள். நான் ஒரு சமயத்தில் ஹௌரா ரயில் நிலையத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கும்பொழுது, ஒரு ஏழை வங்காளி பிச்சை கேட்டுத், தன்னுடைய குறைகளை விவரித்துச் சொன்னான். அழகுடனும் உணர்ச்சியுடனும் கூடிய பெரிய பிரசங்கம் போன்ற அவனுடைய பேச்சு என்னை இளக்கி விட்டது. நம்மைக் காட்டிலும் வங்காளிகள் அறிவாளிகள். அப்பேர்ப் பட்டவர்களை ஆங்கிலேயராகிய நாம் அறியாமையாலும் அகந்தையாலும் இழிவு படுத்தி, அவர்களுடைய பண்டைச் சிறப்பை மறந்து ஏசினால், வங்காளிகளுக்குக் கோபமும் பகைமையும் நம்மிடம் ஏன் உண்டாகாது? இச் சினமும் பகைமையும் பாமர மக்களிடத்தில் மட்டுமின்றிக் கற்றுத் தேர்ந்தவர் உள்ளத்திலும் வேரூன்றி யிருக்கிறதென்பதை ஆங்கிலேயர்களுக்கு எச்சரிக்க வேண்டியது என் கடமை.

இந்தியர்களது பண்டை நிர்மலமான உன்னத நாகரீகத்தை, உலக இன்பத்தை மட்டும் பெரிதென நம்பி மதித்து வாழும் நம்முடைய நிலையற்ற நாகரீகம் அசைக்க முடிய வில்லை. அவர்களது நாகரீகத்தைச் சிதைக்க வேண்டுமென நாம் ஆரம்பிக்கும் வழிகளையெல்லாம் இந்தியர் வெறுக்கிறார்கள். கல்வி பயின்ற வாலிபர்களுடைய மனம் மேனாட்டுக் கல்வியின் மூலம் நமது நாகரீகத்தில் ஈடுபட்டிடவில்லை. தங்களின் முன்னோர்களது நாகரீகத்திலேயே அவர்கள் அமிழ்ந்து கிடக்கிறார்கள். அந்நியரால் அவர்களது நாகரீகத்திற்குச் சிதைவு ஏற்படுமெனத் தெரிந்தவுடன் அவ் வாலிபர்களுக்கு ஆவேசம் பொங்கி எழும்புகிறது. அவ்வித ஆவேசத்தை அன்புடன் கௌரவிப்பதற்குப் பதிலாக நாம் அடக்குமுறைகளை அனுசரித்து அவர்களின் எழுச்சிகளை அடக்க வேலை செய்கிறோம். இம் மாதிரியான நமது செய்கைகளைக் கண்டவுடன் இளம் இந்தியர்கள் தங்கள் நாட்டுப் பற்றாலும், தங்கள் நாகரீக பாசத்தாலும் சீறு கொண்டெழுந்து மாதரு பூமியைக் காப்பாற்றுவதற்காகத் தங்கள் உயிரையே கொடுக்கிறார்கள்.



# தமிழ் மொழி.

ஸ்ரீமாந் சி. பொ. செல்லையா அவர்கள்.

நாம் பச்சிளங் குழவிகளாயிருக்கும்போது மழலைச் சொற்கள் கூறி, நம் தாய் தந்தையரை மகிழ்விக்கச் செய்த மொழி எம் மொழி? தேனினுமினிய தீந்தமிழ் எல்லையில்லா இயற்றமிழ்க் கம்பன், ஔவை, பவணந்தி, திருவள்ளுவர் முதலிய கவிவாணர்கள் போற்றி வளர்த்த, தொன்மையாந் தமிழ் மொழியன்றோ? தாய் மொழியே மனிதனை இயற்கை யின்பத்துள் புகுத்துகிறது. இறவாத இன்ப அன்பைப் பெருக்க வல்ல

---

இந்த இயக்கத்தின் மர்மத்தை அறியாது நாம் அராஜகமெனக் கருதி அடக்குமுறைகளைச் செய்கிறோம். நம்முடைய பிரயத்தனங்கள் என்ன செய்யும்? பல புற நாட்டினர் தங்கள் நாகரீகத்தை இந்தியாவில் புகுத்த ஆரம்பித்தார்கள். அவைகளெல்லாம் சித்தி பெற வில்லை. உண்மையை நான் கண்ட அளவில் அராஜகக் கிளர்ச்சிக்காரர்களென்று நாம் சொல்லும் இவர்களுக்குப் பிரிட்டிஷாரிடம் விசேஷமான அன்பு இருக்கிறது. அவர்கள் நமது செய்கைகளை மாத்திரம் வெறுக்கிறார்கள். அபார சுதந்திர தாகங்கொண்டு கிளர்ச்சித்த அயர்லாண்டு தேசத்தைப் போலவே வங்காளமும் ஆகி விட்டது. ஒவ்வொரு உண்மைப் பிரிட்டிஷ்காரனுக்கும் இந்த உதாரணம் பெருங் கிலி உண்டாக்கு மென்றே நான் எண்ணுகிறேன். ஆட்சி செய்வோர் வங்காளிகளது மனோபாவத்தை வெறுக்கிறார்கள். வங்காளிகளோ நமது நாகரீகத்தைப் பகைத்துத் தள்ளுகிறார்கள். இதனுடைய இரகசியத்தை அன்புடன் ஆராய்ச்சி செய்து நைந்துபோன வங்காளிகளது மனத்தைக் குணப்படுத்த நம்மவர்கள் தாமதிக்காது உடனே முன் வந்து முயலல் வேண்டும்.

தம் தாய் மொழியேயாம். தமிழ் நாட்டிற் பிறந்த ஒவ்வொரு ஆண் மகனும் ஒவ்வொரு பெண் மணியும் அடைய வேண்டிய பேறுகளுள் முதன்மையது தமிழ் மொழியையே விரும்பிக் கற்பதாகும். அத்தகைப் பேறுடைய தமிழ் மொழி இந்நாளில் எந்நிலையுற்றிருக்கிறது? தமிழ் நாட்டிற் பிறந்த இளைஞர்கள் தமிழன்னையின் குருதியிற் பிறந்த தமிழக மாந்தர்கள் தமிழ் மொழியை நஞ்செனவெறுக்கின்றார்கள். தாய் மொழியிற் பேசுதற்குக் கூட அவர்கட்கு வெட்கமாயிருக்கிறது. என்னே தமிழ் நாட்டின் நிலை! "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோ லினிதாவ தெங்குங் காணோம்" என்று செந்தமிழ்த் திலகன், பாரதியார் பாடிய பாடல்கள் நம் கண்முன் காட்சியளிக்கின்றனவே!

உலகில் மக்களாய்ப் பிறந்தாரனைவரும், நாட்டுப் பற்று, மொழிப் பற்று, நாட்டுக் கலை, ஓவியம் முதலியவைகளில் ஆர்வங்கொண்டவர்களா யிருத்தல் வேண்டும். தமிழில் எண்ணிறந்த நூற்கள் உள்ளன. சமரசம் ததும்பும் நூற்களும் காவியங்களைப் புடம் [illegible] நூற்களும் பலவிருக்கின்றன. இளங்கோவடிகள் யாத்த "செஞ்சொற்பவளமும்" சிலப்பதிகாரம் என்னும் தேனூறும் கம்பன் யாத்த கவிப்பெருங் கடலும், சேக்கிழார் அருளிய திருமுறைகளும், வடலூர் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் பாடிய [illegible] கொழிக்கும் அருட்பாவும் தமிழர்கட்குச் சேமநிதியாகும். தமிழ் நூற்களுள் புகுந்தால் எக்காட்சி காணலாம்? எப்பேறு பெறலாம்? ஆ! ஆ!! மக்களுள்ளத்தைக் கவர்ந்து இயற்கை நெறியிற் புகுத்தும், அவ்வழகிய காட்சியை என்னென்பேன்! என்னொரு நாவால் கூறவல்லனோ? செஞ்ஞாயிற்றின் ஒளியும், வானத்திற் படியும் திங்களின் நிலவும், இளந் தென்றலின் இனிமையும், பொழில்களின் வனப்பும் காவியமாக வுருக்கொண்டு காட்சியளிக்கின்றன! இவ்வியற்கைத் தோற்றத்தைப் படம் பிடித்துக் காட்டும், அக் காவிய மாளிகையைக் காணா மகனும் மகனோ? அவ்வியற்கையிற் படிந்து, அவ்வியற்கையமிழ்தைப் பருகா மனிதனும் மனிதனோ?



மேல் நாடுகள் நாளுக்கு நாள் உயர்வுபெற்று விளங்குவதற்குக் காரணம் என்ன? மேல் நாட்டினர்க்குத் தம் தாய் மொழியின்மீது, அதிகப் பற்றுண்டு. பிறமொழிகளிலுள்ள அருமையான நூற்களைத் தம் தாய் மொழியில், மொழி பெயர்த்துத் தம் நாட்டினர்க்குப் பயன் படுமாறு செய்கிறார்கள். எதற்கும் தங்கள் தாய் மொழியையே பரப்ப முயல்கிறார்கள். நம் தமிழ் நாட்டின் ஒப்பற்ற அருமணியாய்க், காண்போர் மனதைக் கவரத் தக்க எழில் வாய்ந்ததாய், எம் மதத்தினராலும் எத் தேயத்தவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட அருமை நூலாய்த் திகழும் "திருக் குறளும்" ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, மேல் நாட்டில் இன்றும் ஒவ்வொரு ஆங்கிலேயர் கையிலும் திகழ்கின்றது! இன்னும், காவிய உலகிற்கு ஒப்பற்ற அருந் திலகமாய் விளங்கும், கம்பன் யாத்த "ராம சரிதையும்" (Study of Kamban) ஆங்கில நூலாய் மேல் நாடுகளில், ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஏன் அவர்கள் அவ்வாறு மொழிபெயர்த்தல் வேண்டும்?

தம் நாட்டு மக்களுக்குத் தாய் மொழியில், பற்று இருத்தல் வேண்டுமென்று எந்தப் புது நூல்களை யாத்தாலும், எங்குச் சென்றாலும், எவ்விடத்திற் சொற்பொழிவு நிகழ்த்த வேண்டுமானாலும் தம் தாய் மொழியிலேயே பேசவும் எழுதவும் சுருங்கச் சொன்னால் தம் தாய் மொழியையே உயிராகவும் மதிக்கிறார்கள்,

உலகம் போற்றும் கவியரசர் தாகூர், தாம் பாடிய "கீதாஞ்சலி" யை எம்மொழியி லியற்றினார்? காந்தியடிகளும், தாம் எழுதிய நூற்களைத் தம் தாய் மொழியிலேயே எழுதி யிருக்கிறார். நம் செந்தமிழ் நாட்டில் தற்காலம் தாய் மொழியில் எழுதப்பட்ட நூற்களைக் கவனிப்போம். சுவாமி வேதாசலம் அவர்கள் தமிழ் மொழியிற் பல நூற்கள் எழுதித் தமிழகத்திற் குதவியுள்ளார். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்க

ளால் "தமிழ்த் தென்றல்", "பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை", "முருகன் அல்லது அழகு" என்னும் இயற்றமிழ்கொழிக்கும் சிறந்த நூற்கள் உதவப் பட்டுள்ளன. பாரதியார் என்னும் ஒரு கவித் திலகன் தோன்றி, தமிழிற்குப் புத்துயிரளித்துச் சென்றார். அவரது பாடல்கள் பெரிதும், பண்டைத் தமிழ் நாட்டின் வீரத்தை எழுப்ப வல்லவாய்த் தமிழ் நாட்டிற் பிறந்த ஒவ்வொரு தமிழன் உள்ளத்திலும், தமிழ்த் தாயினிடத்து ஆர்வம் உதிக்கும் வண்ணமாய் சுதேசிய உணர்வை யூட்டவல்ல முறையில் பாடித் தமிழர்கள் உள்ளத்தில், தமிழ்ப் பாவை விதைத்துச் சென்றார். இன்னும் பண்டைத் தமிழ் மாதர்களின் ஞாபகச் சின்னமாக, இரண்டொரு வனிதா ரத்னங்கள் தமிழ் நாட்டில், தமிழ்க் கலைகளை யோம்பிப் புதுப்புது நூற்கள் இயற்றி வருவது குறித்துக் களிபேருவகை யெய்துகின்றேன். அப் பெண் மணிகளால், இனிவரும் தமிழ் நாட்டு மாதரசிகளும், தமிழன்னையின் கடனை ஆற்றுவார்களென்று எதிர் பார்க்கிறேன்.

ஆயினும் நந்தமிழ் நாட்டில் கல்வி கற்ற தாய்மார்கள், மிக மிகச் சிலரே. அதிலும் தாய்மொழிப் புலமை வாய்ந்த மாதர்கள் இரண்டொருவரே இருக்கின்றனர்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டு மக்களுள் வேற்றுமை காட்டாது ஆண், பெண் இரு பாலார்க்கும் சம கல்வியளிப்பதேயாகும். ஆண் மாத்திரந்தான் கல்வி கற்றல் வேண்டும், பெண் கல்வி கற்றல் கூடாது என்று இவ்விருபதாம் நூற்றாண்டில் நாம் வாய் கூசாது கூறினால், உலகில் நாகரீகமுள்ள நாட்டார்களென்றாவது நாகரீகமுள்ள மனிதர்களென்றாவது பெருமை பாராட்டிக்கொள்ள முடியுமா? சகோதரர்களே! தமிழ் நாட்டிற் பிறந்த வீரர்களே! காலச் சக்கரம் வெகு வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. பழயன கழிந்து, புதியன புகும் காலம் நெருங்கிவிட்டது. நம் நாட்டிற் பிறந்த-நம்தரு தாயின் வயிற்றில் ஜெனித்த-நம் உடற் பிறப்பாளராய்த் திகழ்கின்ற கண்மணிகளுக்கு-வனிதா ரத்னங்களுக்கு, நமதருமைத் தாய்



மொழியைப் புகட்டாதிருப்போமானால், நம்மினுங் கொடியர் யார்? தாய்மார்கள் கல்வி கற்றால்தான், பெண்மணிகள் நல்லறிவைப் பெற்றால்தான், பண்டைத் தமிழ் மாதரசிகளைப் போல் பாவையர்கள் பாவழிழ்மை யுருந்தினால்தான் நாடு அடிமை வாழ்வை யகற்றிச் சுதந்திரமெய்தும். தமிழ்த் தாயுங் கோலோச்சி, அரியாசனத்தமர்ந் தகமகிழ்வள். பண்டை நாளில் பெண் திலகங்களின் நாவில், தமிழன்னை குடிகொண்டிருந்தாள். அவர்கள் வீடெல்லாம் பாமணம், காடெல்லாம் இசை முழக்கம், தெருவெல்லாம் தமிழ் முழக்கம். காரைக்காலம்மையார், ஔவையார், பெருங்கோப்பெண்டு, பாரி மகளிர், காக்கை பாடினியார் முதலிய தமிழ்க் கருவூலங்கள் இயற்றிய பாடல்களே, அக்காலத்துக்குச் சான்று தரும்.

பண்டை நாளில், தமிழ் நாடுற்றிருந்த நிலைமையையும், இந்நாளைய நிலைமையையும் மலைக்கும் அணுவுக்குமே ஒப்பிடலாம். பண்டை நாளில் நம் நாடு, தாய்மொழியில் வேட்கை, சுதேசியம், வாணிபம் முதலியவைகளைப் பெரிதும் ஓம்பிவந்தது. இந்நாளில் நந் தமிழகத்தில் என்ன காண்கின்றோம்? தமிழ்த் திரையை மட்டும் காண்கின்றோம். நாட்டின் உயிராகிய கலைகள் யாது காப்பாரின்றித் தவிக்கின்றன. உயிரில்லா உடம்பிருந் தென்ன பயன்? நாட்டுக் கலைகளல்லவோ நாட்டின் உயிர். சகோதரர்களே! நம் தமிழ்த் தாய் இன்று பிறந்தவளல்ல, நேற்றுப் பிறந்தவளல்ல. அவள் பிறந்த காலம் வரையறுக்கப் படவில்லை. தலைச் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என்ற முச்சங்கங்களின் காலம் இன்றைக்கு 10090 ஆண்டுகளாகின்றன வென்று பழைய நூற்கள் கூறுகின்றன. அத்தகைத் தொன்மை வாய்ந்த, நம் தமிழ் மொழி ஆதரிப்பாரின்றி அலக்கணுறுகின்றது. வீரர்களே! எழுங்கள்! எழுங்கள்! தாய் உங்களது அரிய உதவியை எதிர் பார்க்கின்றாள். பிற மொழிகளெல்லாவற்றினுந் தொன்மையார் தமிழ் மொழியையுடைய, தமிழ் நாட்டிற் பிறந்ததற்காக மகிழ்வெய்துங்கள். தமிழென்னும், இனிமைச் சுவையைப் பருகக்

# வாலிபர்களுக்கு எச்சரிக்கை.

## ஸ்ரீமான் இராஜாராம் யம். கோம்டா அவர்கள்.

அன்புள்ள சகோதரர்களே!

சதிபதிகள் சாமளவும் கண்ணும் இமையுமென ஒத்து வாழக் கடமைப்பட்டவர்கள் என எண்ணினல்,

சதிபதிகள் என்றல் சட்டிபானைகளைப்போல் மாற்றிக்கொள்ள முடியாத பாந்தத்வம் உடையவர்கள் என்று அறிந்தால்,

சதிபதிகளுடைய சம்பந்தம் தெய்வீகத்தன்மை பொருந்தியது என அறிந்தால்,

சதிபதிகள் பாம்பும் கீரியும் போலல்லாமல், குரு சிஷ்ய பாவமாய் இன்புற்று வாழ அபிப்பிராயம் இருக்குமானல்,

பெற்ரோர் மகிழப், பிள்ளைகள் தற்கொலை புரிந்துகொள்வது மடமை என்று அறிந்தால்,

---

கிடைத்ததற்காக இறும்பூ தெய்துங்கள். தமிழ் நாட்டிற் பிறந்த சகோதரர்களே! உங்களது அரிய காலத்தை வீணுக்காமல் உங்களது காலத்தைத் தாய் மொழி வளர்ச்சிக்காகச் செலவிடுங்கள். உங்கள் உள்ளத்திலிருந்து, தமிழ் மொழிக்குச் சேவை செய்யும் புதிய கருத்துக்களும் வீரத்தை யூட்டும் கவிதைகளும் வெளி வரட்டும். தமிழகம் உங்களது அரிய உதவியை எதிர் பார்க்கின்றது. சகோதரிகளே! தாய்மார்களே! உங்கள் நெஞ்சிலிருந்து தமிழகத்திற்குத் தொண்டு புரியும், உயரிய கருத்துக்களும், நறுமணம் பூக்கும் அருமைக் கவிதைகளும் வெளி வரட்டும். நீங்கள் செல்லும் எப்பாங்கரிலும், நீங்கள் செய்யும் எவ் வேலைகளிலும், நீங்கள் பாடும் எப் பாட்டுகளிலும், தாய்ப் பாஷை தாய் மொழி என்ற சொற்களே, உங்கள் நெஞ்சிலிருந்து எழும்பட்டும். உங்கள் உடலமே தமிழ் நூற்களாகவும், உங்கள் உயிரே, அந்நூற்களுள் திகழும், உள்ளுரையாகவு மிருக்கட்டும். தமிழ்மொழி வளர்க! - தாய்மொழி யோங்குக!!

---



பெண்ணைத் தேர்ந்தெடுக்கும் பூரண சுதந்திரம் பிள்ளைக்கே உரியது என்னும் உண்மையை அறிந்தால்,

'கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்திக் காட்சிகெடுத்திடல்' அறிவீனம் என அறிந்தால்,

"பத்தினிப்பெண்டிர் பெய் எனப் பெய்யுமழை" என்பதை மெய்ப்படுத்த வேண்டுமானல்,

விரிந்த நோக்கத்துடன் ஆடம்பர மற்ற வாழ்க்கையை விரும்பினல்,

தேசத்திற்கும் சமூகத்திற்கும் சேவை செய்யும் தாகம் இருக்குமானல்,

நம் ஏழைமக்கள் வயிரார உண்ணுதலைக்கண்டு மகிழ எண்ணினல்,

உங்களுக்குப் பிறக்கும் சிங்கக்குட்டிகள் மாபெரும் சபை மேடைகளின் மீதேறிக் கர்ஜிக்க வேண்டுமென விரும்பினல்,

பிரம்மச்சரிய ஆசிரமத்தைவிட கிருஹஸ்தாசிரமம் சிறந்தது என எண்ணினல்,

பெண்கல்வியால் பெரும்பயன் விளையும் என்று எண்ணினல்,

ரூ 5000 பெறுமானமான நகைக்கு வட்டி ரூ 50-ஐக் கொண்டு 10 ஏழை மாணவர்களை மாதந்தோறும் காப்பாற்றமுடியும் என்னும் தத்துவத்தை அறிந்தால்,

உங்களுக்கு இகபர சுகம் வேண்டுமானல்,

இல்வாழ்க்கை ராஜ்யத்திற்கு ஒரு நன்மந்திரி வேண்டுமானல்,

இல்வாழ்க்கையில் ஒற்றுமையும் விருப்பும் வேண்டுமானல்,

குந்தி, கைகேயி, ஜீஜாபாய் போன்ற வீரத்தாய்மார்கள் வேண்டுமானல்,

நாளாயினி, சாவித்திரி, துரௌபதை போன்ற பதிவிரதா சிரோமணிகள் வேண்டுமானல்,

சரோஜனி, ராமபாய், கஸ்தூரிபாய் போன்ற வீர சகோதரிகள்
வேண்டுமானால்,
விவேகானந்தர், அரவிந்தர், போன்ற ஞானக்குழந்தைகள்
வேண்டுமானால்,
பீம், அர்ஜுன், சிவாஜி போன்ற வீரக் குழந்தைகள் வேண்டு
மானால்,
வால்மீகி, காளிதாஸ், ரவீந்திரர் போன்ற மஹா கவிகள் பிறக்க
வேண்டுமானால்,
போஸ், ராய், ராமன் போன்ற பௌதீக ஞானிகள் பிறக்க
வேண்டுமானால்,
திலக், காந்தி, தாஸ், லஜபதி போன்ற தேசிய வீரர்கள் பிறக்க
வேண்டுமானால்,
சுபாஸ் போஸ், ஜவ்ஹர்லால், சென்குப்தா போன்ற தேசிய
அதிவீரர்கள் பிறக்கவேண்டுமானால்,
பெண் கல்வி அபிவிருத்தியில் ஆற்றல் இருக்குமானால்,

படித்த

**"எண்ணும் எழுத்தும் அறிந்த"**

**பெண்களையே மணந்து கொள்வதென்கின்ற பிரதிக்ஞை**
**செய்துகொள்ளுங்கள்.**





# ஆசிரியர் குறிப்புகள்

## "பாரதி" ஆசிரியரின் வேண்டுகோள்

மிகுந்த செலவில் அதிக கஷ்டத்துடன் ஒரு கிராமத்திலிருந்து கொண்டு "பாரதி"யை நடத்துகிறோமென்று சந்தா நேயர்கள் நன்கறிவார்கள். சந்தா நண்பர்கள் ஊக்கமே பத்திரிகையை அபிவிருத்தி அடையச் செய்யும் என்று சொல்லத் தேவையில்லை. ஆகையால் பத்திரிகாபிவிருத்தியைக் கருதிப் "பாரதி"யின் வளர்ச்சியை அன்புடன் எண்ணி ஒவ்வொரு சந்தாதாரரும் தத்தம்மால் கூடிய சந்தாதார்களைச் சேர்த்துக் கொடுத்து எமது வேலையில் உற்சாகத்தைக் கொடுக்குமாறு வேண்டுகிறோம்.

## ஸ்ரீமான் நாடிமுத்துப் பிள்ளையவர்கள்

தஞ்சை ஜில்லாவின் பிரபுக்களில் ஒருவரும், பாங்கரும், கொச்சின் சைனாவில் அதிகமான பூஸ்திதியுடையவரும், பட்டுக்கோட்டைத் தாலுகா போர்டு பிரஸிடெண்டுமான ஸ்ரீமான் நாடிமுத்துப் பிள்ளையவர்கள் வாணிபத்தை முன்னிட்டுக் கம்போடியா, சயாம், கொச்சின் சைனா முதலிய இடங்களுக்குச் சென்றுவிட்டு இப்பொழுது நமது தாயகத்திற்குச் சுகமாகத் திரும்பி வந்திருக்கிறார். கம்போடியா மன்னரது ஜென்ம தினக் கொண்டாட்டத்திற்கு அவர் அழைக்கப்பட்டார். ராஜ பரிவாரங்கள் சூழ அங்கு அவர் விஜயம் செய்த பொழுது அவர் ராஜ மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டு, அரசரால் "கேவலியர்" என்ற பட்டமும் அளிக்கப் பெற்றார். அரண்மனை, மியூசியம், புஸ்தகசாலை முதலியவைகளையும் பார்வையிட்டபொழுது, அரண்மனையில் இந்திய உருவங்களைப்போல ஆச்சர்யமான படங்களையும் அரண்மனைச்

சுவர்களில் வரையப் பட்டிருந்த ராமாயணப் படங்களையும் கண்டு ஸ்ரீமான் பிள்ளையவர்கள் ஆச்சர்யப் பட்டாராம். கம்போடியர்களுக்கும் இந்தியர்களுக்கும் உள்ள வித்தியாசங்களையும், அங்குத் தமது யாத்திரையில் தாம் கண்ட காட்சிகளையும் தமிழில் ஒரு புஸ்தக ரூபமாக வெளியிடத் தீர்மானித்திருக்கிறார்.

பின்னர் ஸயாம் நாட்டிற்கு விஜயம் செய்து, அவ்வரசரது அரண்மனை, அந் நாட்டுப் புத்த பிரான் கோவில், புஸ்தகசாலை முதலியவைகளையும் பார்வையிட்டதோடு, ஸயாமின் பழைய நகரமாகிய **அயோத்தியா** என்னும் பட்டணத்தையும் போய்ப் பார்த்தார். ஸயாம் தேசத்துப் புஸ்தகசாலையில் சில ஆராய்ச்சிகள் செய்து ஸயாம் தேச ஜனங்களுக்கும் இந்தியருக்குமுள்ள சம்பந்தங்களைப் பற்றி ஒரு புஸ்தகம் எழுதுவதற்கு ஏற்பாடும் செய்திருக்கிறார்.

எத்தனையோ தமிழர்கள் எத்தனையோ தேசங்களுக்குச் செல்கிறார்கள், திரும்பி வருகிறார்கள். நமது பிள்ளையவர்கள் செய்திருக்கிறதைப் போன்ற காரியங்கள் எவரும் செய்ய முன் வந்ததில்லை. அவர் மூலமாக வெளிவரும் புஸ்தகங்களை ஆவலுடன் எதிர் பார்க்கிறோம். திரு பிள்ளையவர்கள் வாழ்க, நெடுங்காலம் வாழ்க!

## பத்திரிகைகளுக்குக் கஷ்டங்கள்

எத்தனையோ பத்திராதிபர்களுக்கு அபராதங்கள், தண்டனைகள். எத்தனையோ பத்திரிகைகள் அடக்கு முறைகளால் மாண்டன. தேசோபகாரிகளான பத்திராதிபர்கள் அயோக்கியர்கள் போன்று சிறையில் கஷ்டப்படுகிறார்கள். உண்மைப் பத்திராதிபர்களின் உள்ளம் அறிவின் பொக்கிஷம், தேசபக்தியின் வற்றாப் பேரூற்று என்பதை எவர் மறுக்க முடியும்? உலகத்தைப் பேனா முனையில் அடக்கும் பத்திராதிபர்கள் அடிமை நாடுகளில் கஷ்டப் படுகிறார்கள். பத்திரிகைகளுக்குச் சுதந்திரமில்லாத வரையில், தேச முன்னேற்றமென்பது வீண் வார்த்தையேயாகும். தேசபந்து தாசர் உயிர் கொடுத்த உத்தம "பார்வர்டு"ப் பத்திரிகை-பங்காளிகளுக்குப் பெரும் வேகத்தில் தேச பக்தியை யூட்டிக் கொண்டுவரும் பத்திரிகை, தனக்கு நேர்ந்த இலட்சக் கணக்கான இன்னல்களைத் தாங்காது மாண்டு "நியூ பார்வர்டு" என்ற புதிய பெயருடன் வெளிவந்து மேலும் அஃது அடக்குமுறையால் அடக்கப்பட்டு, இப்போது "லிபர்ட்டி" என்ற நாமதேயத்துடன் தோன்றியிருக்கிறது. இனி உள்ளதை உள்ளபடி வீராவேசத்தில் அஞ்சா நெஞ்சத்துடன் பத்திராதிபர்கள் எழுத முடியாது. எழுதுவதில் கூடத் தந்திரமாய் எழுதவேண்டியிருக்கிறது. எழுதுவதிலும் கள்ளத்தனம், கோழைத்தனம்!



## கவீந்திரர் ரவீந்திரர் சுற்றுப் பிரயாணம்

அமெரிக்காவின் துறைமுகத்தில் கவி தாகூர் "பாஸ் போர்ட்" இல்லாமற் சென்ற பொழுது, அமெரிக்கத் துறைமுக அதிகாரிகள் அவரை இன்னாரென்று அறியாது அனுமதிச் சீட்டுப் பெறாது வந்தவர்களை நடத்துவது போன்று நடத்த, அவர் கோபமடைந்து அமெரிக்காவிற்குச் செல்லாது ஜப்பான் பிரயாணமாகிவிட்டார். அங்குச் சில பிரசங்கங்கள் செய்து விட்டுக் கானடாவிற்கு அரசாங்க அழைப்பின் மீது சென்றிருக்கிறார்.

அமெரிக்கர், டாக்டர் தாகூர் மீது அளவற்ற அன்பு கொண்டிருக்கிறார்கள். அவரை அறிந்திருந்தால் அளவற்ற மரியாதையுடன் வரவேற்றிருப்பார்கள். இதே மாதிரியான சம்பவம் சென்னைக் கோட்டையில் சர். சங்கர நாயருக்கு நேர்ந்தது. பஞ்சாப் படுவதை காலத்தில் "நைட்" பட்டத்தைத் தூக்கி எறிந்த கவிச் சக்கிரவர்த்தி, முன்பு இந்திய சகோதரர்களுக்கு ஏற்பட்ட "கோமகாடு மாரு" சம்பவத்தை எண்ணி, "மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்" என்று அமெரிக்காவில் அடியெடுத்து வைக்காது அப்படியே திரும்பி விடடார்.

## கலப்பு மணங்கள்

பால்ய மணத்தால் மனமற்ற மணங்கள் மலிந்து கொண்டிருக்கின்றன. விதவைகள் பெருகிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால்

காதல் மணங்கள் அருகிக் கொண்டு வருகின்றன. சில விடங்களில் கலப்பு மணங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஜாதி பேதத்தால் நைந்து போயிருக்கும் இந்தியா, காதல் மணங்களாலும் கலப்பு மணங்களாலும் பலமடைய வேண்டியிருக்கிறது. விவாகம் தெய்வீகத் தன்மை பொருந்தியதென இந்தியர்கள் ஒப்புக்கொண்டாலும், இத்தேசத்தில் விவாக விஷயமாக அநேக சீர் திருத்தங்கள் செய்ய வேண்டியதிருக்கிறது. சமீபத்தில் தனவைசியர் வகுப்பைச் சேர்ந்த, ஸ்ரீமான் அருணகிரி செட்டியாருக்கும் டாக்டர் ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மை அவர்கள் ஆதரவிலிருக்கும் ஆந்திரப் பெண் ஸ்ரீமதி சுந்தரி அம்மாளுக்கும் விவாகம் நடந்தேறியது. ஜாதிக் கட்டுப்பாட்டையும் வைதீக எதிர்ப்பையும் பொருட் படுத்தாது வருங்கால இந்தியாவிற்குத் தகுதியாய் நடந்துகொண்ட இத் தம்பதிகளைப் பாரத அன்னை வாழ்த்திப் போற்றுகிறாள். ஒரு ஜாதியிலிருந்து மற்றொரு ஜாதியில் விவாகம் செய்ய ஜனங்கள் பயப்படும் பொழுது, தேச ஒற்றுமையைக்கோரி ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்தில் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமெனச் சில தேசாபிமானிகள் கூற முன் வந்திருக்கிறார்கள். பண்டைத் தமிழ் மணத்தை எண்ணுங்கள். பழம் இந்தியர்களின் காதல் மணத்தைக் கவனியுங்கள். வழக்கம் என்ற அடிமைச் சங்கிலியை அறுத்தெறியுங்கள்.

## விதவா விவாகங்கள்

விதவைச் சகோதரிகளுக்கு இந்து சமூகம் ஒரு பெருங் கொடுமை செய்துகொண்டிருக்கிறது. அவர்கள் விடும் கண்ணீரே கங்கையெனும் சிந்துவெனும் நதிகளாக ஓடிக்கொண்டிருக்கிறதாகச் சொல்ல வேண்டும். இவர்களுடைய குறைகளைப்பற்றி "பாரதி" யில் ஒரு தனி வியாசம் ஒன்று சீக்கிரத்தில் வரும். கட்டாயக் கைம்மைவழக்கத்தால் ஹிந்து சமூகம் பாழடைந்து கொண்டு வருகிறது. பஞ்சாபில் சர். கங்காராம் அவர்களால் ஏற்படுத்தப் பட்டிருக்கும் விதவா விவாக சங்கத்தார் பலவிடங்களில்



சங்கங்கள் ஏற்படுத்தி, விதவைகளுக்கு ஆதரவளித்து விதவைகளுக்கு ஏற்ற மணவாளர்களைத் தேடிக் கல்யாணம் செய்து வைக்கிறார்கள். மாதத்தோறும் இவர்களுடைய கணக்குப்படி நூற்றுக் கணக்கான விவாகங்கள் நடத்தி வைக்கிறார்கள். தற்கொலை, சிசுக்கொலை, மதம் மாறுதல், எங்கேனும் ஓடுதல், இயற்கையை எதிர்க்கச் சக்தியில்லாது பலவழிகளில் தவறுவது முதலிய குற்றங்களிலிருந்து விதவைச் சகோதரிகளைக் காப்பாற்ற நாம் உடனே முன் வரல் வேண்டும்.

## கவர்ன்மெண்டு பிரஸ், மதறாஸ்.

1927-28-ம் வருஷத்தில் இந்த அச்சுச்சாலைக்கு வரவு ரூ. 2,51,880—3—6. இது 2,000 பேருக்கு வேலை கொடுத்து உதவுகிறது. சென்னை ராஜதானியே இந்தியாவிலுள்ள மற்ற எல்லா மாகாணங்களைக் காட்டிலும் அச்சில் தலை சிறந்து நிற்கிறது. நமது நாட்டில் அச்சுத் தொழில் மிகவும் விருத்தியாக வேண்டியிருக்கிறது. தேசத்தில் தொழிலின் உயர்வைக் கவனிக்காதபடியால் இது உயரவில்லை. டாக்டர் ரவீந்திரநாத் தாகூர், ஸ்ரீமதி சரோஜினிதேவி, தேசபக்தர் லஜபதிராய், சர். போஸ், அறிஞர் ராதா கிருஷ்ணன் முதலியோர் போன்றவர்கள் அச்சிடும் நேர்த்தியைக் கவனித்துத் தங்கள் புஸ்தகங்களை அச்சிடுமாறு அயல் நாட்டுக்கு அனுப்பினார்களென்றால், நம் நாட்டில் இத் தொழிலில் கவனமில்லை என்பதற்கு என்ன சந்தேகம். வெள்ளைக் காகிதத்தில் கருத்த மையினால் எப்படியேனும் எழுத்தை அச்சிட்டுக் குறைந்த விகிதத்திற்குக் கொடுத்தால் சரி என்று அநேக ஜனங்கள் எண்ணுவதால், இத் தொழில் இங்கு விருத்தியாகவில்லை.

அச்சுத் தொழில், பாஷாபிமானத்திற்கு அடிப்படையென்பதை ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டும். தமிழில் ஆங்கிலத்தைப் போன்று அநேகவகையான எழுத்துக்கள் இல்லை. ஆங்கிலத்தில் எழுத்து 26; தமிழிலேயோ எழுத்துக்கள் அதிகம். ஆகையால் தமிழில் அநேக வகை எழுத்துக்களை உண்டாக்க

முடியவில்லை" என்பதை அப்படியே ஒப்புக்கொண்டு விடக் கூடாது. தமிழாபிமானம் அச்சுத் தொழிலில் சென்றிருக்குமானால், அறிவாளிகள் இத் தொழிலில் பிரவேசித்திருப்பார்களானால் எத்தனையோ வகை வகையான புத்தம் புதிய எழுத்துக்கள் தமிழில் உண்டாயிருக்கும். அச்சுச் சாலைகளின் அபிவிருத்தி, தேச முன்னேற்றத்தின் குறிகளில் ஒன்று. இந் நாட்டில் ஒவ்வொரு பெரிய கிராமங்கள்தோறும் அச்சு இயந்திரங்கள் எந் நாளில் ஏற்படப் போகிறதோ?

## இந்தியாவின் தலையிலெழுத்து

தலைவர் கனம் படேலை மே. த. வைசிராய் கண்டித்துப் பேசியது, பொதுஜன அபிப்பிராயத்தைக்கூடக் கவனிக்காது தொழிலாளர் தகராறு மசோதாவை நிறைவேற்றியது, கனம் படேல் நியாயத் தீர்மானத்தை லட்சியம் செய்யாது தனது பிரத்தியேக அதிகாரத்தை உபயோகித்து அவசரச் சட்டமேற்படுத்தியது, பார்லிமெண்டுத் தேர்தல் பிரச்சாரத்தில் இந்திய சங்கதியைப் பற்றிப் பேசக் கூடாதென இங்கிலாந்திலுள்ள சகல கட்சியாரும் செய்துள்ள தீர்மானம், சர்க்காரின் அடக்கு முறைகள், நேரு திட்டத்தைப் பற்றிய சைமன் கமிஷன் நோக்கம், தேசியப் பத்திரிகைகள்மீது பாணங்கள் ஆகிய இவை முதலியவைகளில் பொதுவாகச் சர்க்கார் போக்கு முதலியவைகளைக் கவனித்துப் பார்த்தால் சைமன் கமிஷன் நமக்கு என்ன செய்யப் போகிறது? சைமன் கமிஷன் இந்தியாவின் தலையில் என்ன எழுதப் போகிறது? அதை நாம் எப்படி அழித்துவிட்டு அதன் தலையில் நாம் என்ன எழுதப் போகிறோமோ! அறிவோம்.

## திருவாங்கூரில் கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவரல்லாதவர்களுக்கும் பகைமை

பிரிட்டிஷ் மலபாரில் இருக்கும் மாப்பிளைகள் முகம்மதியர்கள்; ஆனால் திருவாங்கூரிலிருக்கும் மாப்பிளைகளோ கிறிஸ்தவர்கள். திருவாங்கூரில் சிரியன் கிறிஸ்தவர்கள் அதிகம். ஏசு



நாதரின் கூடவிருந்த சீஷரான ஸெயின்ட் தாமஸ் (St. Thomas) என்பவரால் முதன் முதலாவதாக இந்தியாவில் இவர்கள் கிறிஸ்தவராக்கப்பட்டதாக இவர்கள் சொல்லுகிறார்கள். இது எப்படியும் இருக்கட்டும். இப்பொழுது திருவாங்கூரில் கிறிஸ்தவர்கள், கல்வியிலும் மற்ற விஷயங்களிலும் மிக்க வேகத்துடன் முன்னேறிக்கொண்டு போகிறார்கள். ஒத்துழையாமைக் காலத்தில், திருவாங்கூரில் பிறந்த கிறிஸ்தவரான பாரிஸ்டர் ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோஸப் இந்திய மாதாவிற்குத் தன்னை அர்ப்பணம் செய்து உழைத்தார். இந்த இந்து சமஸ்தானத்தில் ஒவ்வொரு மதத்தினரும் சகோதர பாவமாயிருக்க வேண்டியதிருக்க, இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் மத்தியில் பகைமை வளர்ந்துகொண்டு வருவது தேச முன்னேற்றத்திற்கு நல்லதல்ல. வடநாட்டில் இந்து முஸ்லீம் சச்சரவு; தமிழ் நாட்டில் பிராமணர் பிராமணரல்லாதார் குழப்பம்; திருவாங்கூரில் கிறிஸ்தவர்களுக்கும் இந்துக்களுக்கும் பிணக்கு. ஒவ்வொரு மனிதனையும் கடவுளாகக் கொண்ட மதத்தையுடைய இந்துக்களுக்கும், பாவியையும் பகையாது சோதரராகக் கொண்டாட வேண்டுமென்ற அன்பு மதமுடைய கிறிஸ்தவர்களுக்கும் இடையில் பகைமை உண்டாவதேனோ? எங்கும் ஜாதித் திமிர், மதச் செருக்கு ஒழியவேண்டும். பொதுவாகக் கருதுமிடத்து நாட்டில் இந்தியரென்ற சகோதர வாற்சல்யம் குறைந்துகொண்டு வருவதைத் தேசத்தார்கள் கவனித்து ஏற்ற வழியில் நடக்கவேண்டும். திருவாங்கூரின் இத் தொல்லைக்குத் தமிழர்கள் உட்புகுந்து வேலை செய்யவேண்டும். மலையாளத்திற்கும் தமிழகத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு.

## தமிழ் நாட்டு நாவலர் மணியின் மறைவு

தமிழகத்தின் பிரசங்கப் பிரசண்டமாருதம்-பிரசங்கப் பெருமாரி-தமிழகத்தின் நாவலர்கோன்-மணம் பூண்டி ஸ்ரீமான் குமாரசாமி பிள்ளையவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்து அப்பாலுக்கு அப்பால் சென்று விட்டாரென்று அறிய அளவற்ற துக்கமடைகிறோம். அவரது அமிர்தப் பிரசங்க மாரியைப் பருகியவர்களெல்

லாம் ம. ரா. குமாரசாமி பிள்ளையாரா காலஞ் சென்று விட்டார்! என்று ஆச்சரியத்துடன் கேட்டு அப்படியே திகைத்துக் கண்ணீர் பெருகிக்கொண்டு நிற்கிறார்கள்.

மகா வேகமாய் அடுக்குத் தொடர்களுடன் அவரது திருவாயிலிருந்து சரமாரி போன்று வெளிவரும் இனிய அரிய மொழிகள், சபையாரை மந்திரத்தில் கட்டுண்டவர்களைப் போன்று அப்படியே மயங்கி மௌனமாகக் கிடக்கச் செய்யும். அவர், அவரது சொல்வன்மையை நாட்டிற்கும் மொழிக்கும் சமயத்திற்கும் நல்வழியில் உபயோகப் படுத்தினார். தமிழ் நாட்டில் பல பிரசங்க மேடைகளிலும் பல சபைகளிலும் பேசிப் பேசிச் சுமார் இருபது வருஷங்களாகத் தொண்டாற்றியவர்.

நமது தேசம் தளர்வுற்றிருக்கும் இத்தருவாயில், தேசாபிமானப் பயிரை வளர்க்க, வாலிபர்களுக்கு நெஞ்சில் உரம் கொடுக்க, பொது ஜனங்களுக்கு உணர்ச்சி உண்டாக்க, ஜனங்களிடை வேரூன்றி யிருக்கும் மூடக் கொள்கைகளை நிர் மூலப்படுத்தப் பிரச்சாரம் செய்ய, பல வகை நல்லியக்கங்கள் உண்டாகும்படி பாடு பட நம்மிடை எத்தனையோ நாவலர்கள் வேண்டியிருக்கிறது. சொற்பொழிவில் வல்லவர்கள் எங்கேயோ அரிதாய்த் தோன்றுகிறார்கள். அருமையும், அன்பும், அறிவும், அடக்கமும் அவைகளுக்கேற்ற அருங்குணங்களும் ஒருங்கே அமையப் பெற்ற நாவலர் மணி-தியாகி இப்பொழுது மறைந்து விட்ட நஷ்டத்தைத் தமிழ்த் தாய் எப்படி ஈடு செய்யப் போகின்றாள்,

சரீரத்தின் தன்மையைக் கருதாது அதிகமாய்த் தொண்டிலீடு பட்டு உழைத்து உழைத்து அவர் நோயுற்று அகால மரணத்தை அடைந்தார். பிரசங்கம் புரிவதில் பயிற்சி பெறும் மாணவர்கள் அவருடைய பிரசங்கத்தைக் கேட்டிருக்க வேண்டும். தேச பக்தர்கள் "காந்தீயம்" என்ற விஷயத்தை அவரிட மிருந்து கேட்டு மகிழ்ந்திருக்க வேண்டும். சைவர்கள் "சமரசம்" என்ற பிரசங்கத்தை அவரிடமிருந்து செவிமடுத்து ஆநந்தித் திருக்கவேண்டும்.



மணம் பூண்டியிலே பார்க்கவ குலத்திலே நியாயவாதி ஸ்ரீமான் ராமசாமி பிள்ளையின் புத்திரராகத் தோன்றி திரு. கந்தசாமி பிள்ளை யவர்களின் மூலம் சைவத்தில் திரும்பி, திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகளின் முதல் மாணவராகவிருந்த குமாரசாமி பிள்ளை யவர்கள் சமரசத்துடன் சமய, தேச, மொழித் தொண்டராய் வாழ்ந்து மறைந்தார். பண்டித பாமர ரஞ்சிதமாய் உள்ளம் உருகும்படி உணர்ச்சி தோன்றும்படி அபாரப் பிரசங்கமாரி பொழியும் குமாரசாமி பிள்ளையவர்களை இனி என்று தமிழ் நாடு காணப் போகிறது? தமிழர் நெஞ்சில் அவர் தோற்றுவித்த பிரசங்க இனிப்பு, தமிழர்களை என்றும் அவரை நெடுங்காலம் மறக்காது வைத்திருக்கும். அவரது பிரிவால் பார்க்கவ குலம் ஒரு தலைவரை யிழந்தது; சைவ சமயம் ஒரு அடியாரை இழந்தது ; தமிழகம் ஒரு நாவலர் மணியை யிழந்தது ; இந்தியா தேசம் ஒரு தேசாபிமானியை யிழந்தது. அவரது ஆத்மாவுக்குச் சாந்தி! சாந்தி!!

## மைசூரில் அபிவிருத்தி

சிறிதுகாலத்திற்கு முன்னரே இந்திய சமஸ்தானங்களிலெல்லாம் பரோடாவே பலவகை விர்த்தியில் முன்னேறிக்கொண்டிருந்தது. இப்பொழுது மைசூர்ச் சமஸ்தானமோ அநேக வழிகளில் வெகு வேகமாய் அபிவிருத்தி அடைந்துகொண்டிருக்கிறது. மைசூருக்கெனத் தனிச் சர்வகலாசாலை ஏற்பட்டிருக்கிறது. சிவசமுத்திரம், கண்ணம்பாடி நீர் வீழ்ச்சியின் மூலம் மின்சாரம் அதிகமாய் உண்டாக்குகிறார்கள். இந்த மின்சாரத்தைப் பலவகை வேலைகளிலும் உபயோகப்படுத்தப் போகிறார்கள். கைத்தொழில் இலாகா அங்கு நன்கு வேலைசெய்கிறது. பட்டு உற்பத்தி பெருகிக் கொண்டிருக்கிறது. சென்ற வருடத்தில் சந்தனத் தைலம் மட்டும் ரூ 21,92,600 பெறுமான 1,38000 பவுன் அளவு ஏற்றுமதி செய்திருக்கிறார்கள். 1927-28 ஹுல் சுத்தம் செய்யாத 10,884 டன் இரும்பு ரூ 5,22 000-க்கும், உற்பத்திசெய்த சாமான்கள் ரூ 3,85,000-க்கும் பத்ராவதி இரும்புத் தொழிற்சாலையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. சர்க்கார், கைத்தொழில் செய்வோருக்குச் சொற்ப வட்டியில் கடன் கொடுத்து உதவுகிறார்

கள். சினிமாப் படத் தொழிற்சாலையும் அதற்காக ஒரு பாடசாலையும் பங்களூரில் ஏற்படப் போகிறது. இன்னும் சில வழிகளில் கைத்தொழில் அபிவிருத்திக்குரிய ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். விவசாய இலாகாவும் குடிகளுக்கு மிகவும் ஒத்தாசையாயிருக்கிறது. சாஸ்திரீய முறையில் விவசாயம் செய்யும்படி போதிப்பதற்காக இந்த இலாக்கா மிகவும் பாடுபடுகிறது. சில விவசாயப் பாடசாலைகள் ஏற்படுத்திச் சுதேச பாஷையில் போதிக்கிறார்கள். தரிசாயிருக்கும் நிலங்களைக் குடிகளுக்குக் கொடுத்துச் செலவுக்குங்கூடப் பணம் சகாயிக்கிறார்கள். காப்பி ஏலம் தேயிலை முதலிய மலைக் கிருஷித் தொழில் செய்வதற்கு மைசூர்ச் சமஸ்தானம் இப்பொழுது ஏற்ற இடமாயிருக்கிறது. இதிலும் சர்க்கார் உற்சாகிக்கின்றது. ஒடுக்கப்பட்ட சமூகத்தார்களுக்குப் பொருளாதார விருத்திக்கும் அவர்களுடைய கல்விக்கும் சர்க்கார் நன்கு பாடுபடுகிறது. பொதுவாக மைசூர்ச் சமஸ்தானத்தின் வேலை மெச்சத் தக்கதா யிருக்கிறது.

## இந்தியாவில் சிகரெட்டு

சிகரெட்டுக்குடி இந்தியாவில் அதிக வேகமாய்ப் பரவிக் கொண்டிருக்கிறது. சண்டைக்கு முன் 100 கோடி சிகரெட்டுகள் இங்குச் செலவாயின. இப்பொழுது 650 கோடி சிகரெட்டுகள் இந்தியாவில் செலவாகின்றன. உலகத்தில் சுருட்டுக் குடி சிறுத்துச் சிகரெட்டுக்குடி பெருத்துக்கொண்டு வருகிறது. புகையிலைக்கு உலக தேவை அதிகமாகிக்கொண்டு வருகிறது. புகையிலை பெரும் உலக வியாபாரமாக ஆகிவிட்டது. அமெரிக்காவும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் புகையிலையின் உலக தேவைக்குப் பாதியைக் கொடுக்கின்றன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இந்தியா, கானடா, தென்னாப்பிரிக்கா, தென் ரொடேசியா, நயாசாலாண்டு, வட ரொடேசியா, ஆஸ்திரேலியா, சைப்பிரஸ் முதலிய தேசங்களில் புகையிலை உண்டாகிறது. அதிகமாகப் புகையிலையை உற்பத்தி செய்யும் சில தேசங்களே, அதை அதிகமாக உபயோகிக்கின்றன.



புகையிலை நமது நாட்டிற்குப் புதிது. நமது ஏழை இந்தியாவின் பணம் புகையாகப் போகிறதே! மதுபான வகையை ஒழிப்பதற்குத் தேசிய வாதிகள் முயற்சி செய்கிறதுபோல, சிகரெட்டுக் குடியை இந்தியாவிலிருந்து ஒழிப்பதற்கு ஏற்றபடி உழைக்கவேண்டும். இதன் மூலம் அநேக ரோகங்கள் தேசத்தில் உண்டாகியிருக்கின்றன. சிகரெட்டுப் பழக்கம், வாலிப உலகத்தைக் கெடுத்துக்கொண்டு வருவதைத் தேசத் தலைவர்கள் கவனிக்கவேண்டும்.

## கிராமங்களில் சுகாதாரம்

இயற்கை வசதிகள் அமைந்த கிராமங்களில், கிராமவாசிகள் கல்விக் குறைவின் அறியாமையால் சுகாதாரத்தைக் கவனிக்கிறதில்லை. தாங்கள் குடியிருக்கும் வீடுகளில்கூட ஆபாசம் செய்கிறார்கள். ஜலதாரை, மாட்டுத் தொழுவம், படுக்கை, கோழிக்கூடு, முதலியவைகளைக் கவனித்து வீடுகளைச் சுத்தமாய் வைத்திருக்க முடியவில்லை. ஆகாரத்தைப் பற்றியோ சொல்லத் தேவையில்லை. தங்கள் கிராம வீதிகளை மிகவும் அசுத்தம் செய்கிறார்கள். யூனியன்போர்டுகள் உள்ள கிராமங்களில் தலைவர்கள் கவனித்தால் மட்டும் என்னாகும்? ஒவ்வொருவரும் தன் வீட்டையும், தன் ஊரையும் தன் தேசத்தையும் சுத்தமாய் வைத்திருப்பது தனது கடமையென்று கவனித்தால் தானே தேசம் நன்மையடையும். நடைபாதைகளின் நிலையை எப்படிச் சொல்வது. சில கிராமங்களில், வீடுகளைச் சூழ முள் வேலிகளை அடைத்து வைத்திருக்கிறார்கள்.

மலைச்சுரம், வைசூரி, காலரா, பிளேக், நரம்புச் சிலந்தி முதலிய தொத்து நோய்கள் கிராமங்களை வாட்டிக்கொண்டிருக்கின்றன. கடனுக்குமேல் கடன் ஏறிக்கொண்டிருப்பதால் சுய விஷயங்களைக்கூடக் கவனிக்க விருப்பமில்லாமற் போகிறது. கிராமங்களைத் திருத்துவதற்குத் தொண்டாற்றக் கணக்கற்ற இச்சா

சேவகர்கள் தேவை. பெயாளவில் ஸ்தல சுயாட்சி ஸ்தாபனங்கள் ஏதோ செய்து கொண்டிருக்கின்றன. இந்தியாவில் அநேக ரோகங்கள் வந்து குடிபுகுந்திருக்கின்றன. ஒரு நாட்டின் செல்வம், அந் நாட்டாரது ஆரோக்கியம் என்பதை மறத்தலாகாது. புதிய துர்க்கியிலும், சைனாவிலும் அவைகளின் அரசாங்கங்கள், சில வகை ஆபத்தான தொத்து வியாதிகளுக்குத் தடுக்கும் முறைகளைக் கண்டுபிடித்து அத் தேசத்தார்களைக் காப்பாற்றியிருக்கின்றன. கிராம சேவை, கிராம சேவை யென்று பட்டினங்களில் மேடைப் பிரசங்கங்களினால் பயன்யாது? தேசத்தின் உதவியால் கல்விகற்ற பண்டிதர்களும், பட்டதாரிகளும் பலவகை அறிஞர்களும் தேசத்தொண்டு செய்யாது பெருத்திருந்து என்ன பயன்? கிராம சுகாதாரம் கவனிக்கப்படாவிடில் தேசம் நாளடைவில் நாசமடையும்,

## கனம் படேலின் தீரமான தீர்ப்பு

சர்க்கார் போல்ஷவிக் மசோதாவைச் சட்டமாகச் செய்ய வேண்டுமென இந்திய சபைக்குக் கொண்டுவந்தார்கள். பிரஸ்தாப போல்ஷவிக் மசோதாவுக்கும் மீரட்டில் விசாரிக்கப்படும் கேசுக்கும் சம்பந்தமிருந்தால், மீரத் வழக்கை வாபஸ் வாங்கியபின் தான் போல்ஷவிக் மசோதா விஷயம் கவனிக்கப்படும். அல்லது அந்த வழக்கு முடியும் பரியந்தம் மசோதா விவாதத்தை ஒத்தி வைக்க வேண்டுமெனத் தலைவர் கனம் படேல் நடு நிலையினின்றும் வழுவாது தீர்ப்புச் சொன்னார். இவ்வாறு பயமற்று பட்சபாதமற்று நேர்மையுடனும் நியாய வரம்புடனும் கூடிய கனம் படேலின் தீர்ப்பை ஒருவராலும் நியாயமான முறையில் மறுக்க முடியாது. இவர் செய்த முடிவு, அவருடைய உத்தியோக கௌரவத்தையும் தேச நலத்தையும் காப்பாற்றி யிருக்கிறது. இந்திய தேசிய சரித்திரம் எழுதப் படுங்கால், இவரது ஆண்மையுள்ள ஆணித் தரத் தீர்ப்பைப் பற்றிப் பொன்னுரைகளால் எழுதப்பட வேண்டும்.



## மே. த. வைசிராயின் எதேச்சாதிகாரம்

போல்ஷவிக் மசோதா சட்டமாக நிறைவேறாவிடில் தேசத்திற்குப் பெருங் கெடுதல் வந்து விடும் என்று கனாக் கண்டு, கனம் படேலின் நியாயமான முடிவையும் உல்லங்கனம் செய்து, போல்ஷ்விக் மசோதாவைச் சட்டம் செய்து விட்டார். ஆள்த் தூக்கிச் சட்டம் என்ற ரௌலட் சட்டத்தை லார்டு ரீடிங், நள்ளிரவில் சட்டமாக்கினார். லார்டு இர்வின் அவரைக் காட்டிலும் ஒரு படி முன் சென்று விட்டார். அக்காலத்தில் இந்தியாவுக்கு, அனேகம் பிரயாணிகள் வந்து இந்தியர்களை வெகுவாய்ப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். இதுமட்டு மன்று, அநாதிகால முதற்கொண்டு இந்தியர்களின் உண்மைக்காக எல்லாத் தேசத்தவர்களும் இந்தியர்களைப் போற்றி யிருக்கிறார்கள். "இந்தியர்களுடைய ஒப்பந்தங்களுக்கு எழுத்து மூலமாக ஆதாரவு தேவையில்லாமலும், அவர்களுடைய கதவுகளுக்குப் பூட்டுகள் தேவையில்லாமலும் அவர்கள் அவ்வளவு யோக்கியமா யிருந்தார்கள்" என்று ஸ்ட்ராபோ என்பவர் சொல்லுகிறார். "உண்மை யில்லாத ஒரு இந்தியரையும் பார்க்க முடியாது" என்று ஆரியனும் "நேர்மைக்கும் ஒழுக்கத்திற்கும் இந்தியர் பெயர் பெற்றவர்கள்" என்று சீன யாத்ரீகர் ஹியோவன்ஸ் தாங்கும் "தைரியம் எப்படியோ அப்படியே அவர்களுக்கு உண்மையும் சிறந்தது" என்று சர். ஜான் மால்கமும் "தவறி நடக்கவும் பொய் பேசவும் அறியாதிருந்தார்கள்" என்று கர்னல் சிலீமனும் சொல்லுகிறார்கள். இன்னும் பலரும் இந்தியர்களை உயர்தரமாகக் கூறுகிறார்கள். இப்படி யிருக்க மே. த. வைசிராய் இந்தியர் மீது சந்தேகப் பட்டுச் சட்டங்கள் இயற்றக் காரணமேயில்லை.

## இந்திய சட்ட சபையில் வைசிராயின் பிரசங்கம்

இந்திய சட்ட சபையில் கனம் படேல் செய்த தீர்மானத்தைக் கண்டு மே. த. வைசிராய் கன கோபங் கொண்டு இந்திய சட்ட சபையில் பேசி யிருக்கிறதைப் பார்த்தால், மே. த. வைசி

ராய் ஏதேச்சாதிகாரத்தைத் தெரிவிக்கிறது. சர்க்கார் ஏற்படுத்திய சட்டத்தைச் சர்க்கார் ஏன் அனுசரிக்கக் கூடாது? சர்க்காரும் குடிகளும் சட்டத்திற் குட்பட்டே நடக்க வேண்டும். சட்ட சபை தீர்மானிக்கும் தீர்மானத்தை மே. த. கவர்னர்-ஜெனரல் தனது விசேஷ அதிகாரத்தால் ரத்துச் செய்யவும், சட்ட சபை புறக்கணித்த விஷயங்களை அனுமதிக்கவும் உபயோகப் படுத்தினால் இந்திய சட்ட சபை இருந்தென்ன இல்லாது போயென்ன? எதற்கும் நிதானம் வேண்டும்.

## தஞ்சாவூர் ஜில்லாவில் துறைமுகம்

இந்தியாவின் கடற் கரைகள் துறைமுகங்களுக்கு வசதியாக அமைந்தும் இந்தியாவில் அநேக துறைமுகங்கள் திறக்க வில்லை. தரை வழியைக் காட்டிலும் தண்ணீர் வழியில் ஏற்றுமதி இறக்குமதியில் செலவு மிகக் குறைவு.

திருவாங்கூரில் காயல்களின் மூலமாகவும் கால்வாய்களின் மூலமாகவும் வியாபாரமும் பிரயாணமும் நடத்துவதில் அவர்களுக்குக் குறைந்த செலவே ஏற்படுகிறது. சென்னையிலிருந்து காக்கிநாடா வரைக்கும் வெட்டியுள்ள பக்கிங்காம் கால்வாயைச் சீர் திருத்தம் செய்தால் ஜனங்களுக்குச் சௌகர்யமாயிருக்கும்.

தமிழ் நாட்டிலுள்ள வேதாரண்யத்துக்கு அருகிலுள்ள அகஸ்தியன் பள்ளிக்கும் இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்திற்கும் மற்றவிடங்களுக்கும் சில காலத்திற்கு முன்பு கப்பல் போக்கு வரவு நடந்துகொண்டிருந்தது. தஞ்சை வாசிகள் இவ் வழியாக இலங்கைக்குச் செல்வது எவ்வளவு இலகு, எவ்வளவு சௌகர்யம்! இந்தத் துறை முகத்தை அடைத்து விட்டார்கள். காரணத்தை அறிய முடியவில்லை. ஏன்? என்று சர்க்காரைக் கேட்போர் எவரும் கிடையாது. தஞ்சை வாசிகள் கிளர்ச்சி செய்து அங்குத் துறைமுகத்தை உண்டாக்குவார்களாக.



## இயற்கை வைத்தியம்

வியாதியுற்றால் மருந்தே யுட்கொள்ளாது இயற்கை வழியில் நின்று நோயைப் போக்குவதே இயற்கைச் சிகிச்சை(Nature bure). நமது பண்டைத் தபோதனரும் இயற்கை வாழ்வு வாழ்ந்து நோயற்றிருந்தார்களென்று நமது சாஸ்திரம் கூறுகின்றது. நமது தேயத்தில் தோன்றிய இம்முறை லூயிகூனி என்பவரால் மேனாட்டில் புத்துயிர் பெற்றுப் பரவி வருகிறதுமன்றி, உலக முழுவதும் பலரால் மெல்லெனப் பரவ ஆரம்பித்திருக்கிறது. இவ்வழியில் சிகிச்சை செய்குவதற்குச் செலவு கிடையாது. தீரமான மனம் மட்டும் இவ்வழியில் பிரவேசிப்பதற்கு வேண்டும். வெயில், தண்ணீர், மண் முதலியவைகளே இதற்கு வேண்டும் மருந்துகள். பட்டினியின் மூலமாகவும் சிகிச்சை செய்துகொள்ளுகிறார்கள். ஆங்கில, ஆயுர் வேத, யூனானி, சித்த வைத்தியர்களால் கை விடப்பட்ட நோயாளிகள் இயற்கை வைத்தியத்தை அனுசரித்துப் பலர் சுகம் பெற்றிருக்கிறார்கள்.

திருவாங்கூரில் ஸ்ரீமான் ராம வாரியார்மூலம் இது வெகு வேகமாய் விசாலித்துக் கொண்டிருக்கிறது. ஆந்திர நாட்டிலும் அப்படியே. புதுச்சேரியிலிருந்து கொண்டு இயற்கை வைத்தியப் பிரச்சாரம் செய்யும் ஸ்ரீமான் லட்சுமண சர்மாவைத் தமிழகம் நன்கு கவனிக்காதிருக்கிறது. இவ்வைத்தியத்தில் பெனிடிக் லஸ்ட், அடோல்ப் ஜஸ்ட், பூரிங்டன், லிண்டார், மாக்பாடன், பில்ஜ் முதலிய டாக்டர்கள் இயற்கை வைத்தியத்திலீடுபட்டு நூற்கள் எழுதியும், இயற்கை இல்லங்கள் அமைத்தும் பிரச்சாரங்கள் செய்கிறார்கள். வருங்கால உலகத்தில் இந்த வைத்தியம் மிக்க விருத்தியுடனிருக்குமென்று நம்புகிறோம். தமிழ்நாடு இதன் தத்துவத்தை என்று அறியப்போகிறதோ?

## எனவன், முதுவான், ஊராளி

தோடர்களும், படகர்களும் நீலகிரி மலையில் மலைவாசிகளாய் [illegible]மற்றிருப்பது போலவே, திருவாங்கூர் மலையில் எனவன், முதுவான், ஊராளி என்ற மலை ஜாதியர்கள் இருக்கிறார்கள்.

இவர்கள் வருஷாவருஷம் குடியிருப்பையும் தங்கள் வேளாண்மைக் காடுகளையும் மாற்றிக்கொண்டிருப்பார்கள். இவர்களுக்குச் சொந்தமான பூமி எதுவும் கிடையாது. சிம்லா மலைப்பக்கத்தில் வாழும் மலைச் சாதியாரைக் கட்டாய வேலைக்கு சிம்லாவிலிருக்கும் சில்லரை அதிகாரிகள் இழுப்பதைப் போன்று, திருவாங்கூர் மலையிலிருக்கும் தாழ்ந்ததர உத்தியோகஸ்தர்கள் கூலி கொடுக்காமல் ஏதோ கஞ்சிக்குக் கொடுத்துக் கொண்டு கட்டாயமாய்ச் சில சமயங்களில் துன்பப் படுத்துவது வழக்கம். இது இப்பொழுது அநேகமாய் நின்றுவிட்டது. திருவாங்கூர் மலைப் பிராந்தியங்களெல்லாம் தேயிலை, ரப்பர், ஏலம் முதலிய கிருஷிகளுக்காகத் திறக்கப்பட்டுக்கொண்டு வருகிறதால், திருவாங்கூர் மலைப்பிரதேசத்தில் வாழும் காட்டுச் சாதியார்களுக்கு இனிக் கஷ்டம் உண்டாக ஆரம்பித்திருக்கிறது. இவர்கள் இப்படியே யிருந்தால் இவர்கள் வருங்கால நிலை என்னவாகுமோ வென்று பயப்பட வேண்டியதிருக்கிறது.

திருவாங்கூர்ச் சமஸ்தானம், கல்வியில் முதன்மைபெற்றிருக்கிறதென்று சொல்லிக்கொண்டாலும், தேவிகுளம், கோட்டயம் முதலிய டிவிஷன்களில் வசிக்கும் மலைச் சாதியார்களைப் பற்றிச் சிறிதும் கவனம் இச்சமஸ்தானம் செலுத்தாமலிருக்கிறது வருந்தத்தக்கது. நீலகிரி மலையில் வாழும் படகர்களுக்கும் தோடர்களுக்கும் அபிவிருத்தி செய்யச் சென்னை அரசாங்கம் முன் வந்திருக்கிறது. அமெரிக்காவில் அடிமைகளா யிருந்த நீகிரோவர்கள் ஆர்ம்ஸ்டிராங், புக்கர் வாஷிங்டன் என்ற மேதாவிகளால் ஏற்படுத்தப்பட்ட கலாசாலைகளின் மூலம் எத்தனையோ கோடிக்கணக்காகக் கல்வி கற்று வேகத்துடன் சீர்திருத்தம் அடைந்துகொண்டு வருவதை உலகம் கவனித்துக்கொண்டு வருகிறது. இவர்கள் கிறிஸ்தவ பாதிரிகள் பார்வைக்குத் தப்பினது ஆச்சர்யம். இந்தியாவிலிருக்கும் மலைச் சாதியாரெல்லாம் படித்து முன்னேற்றமடைந்து சகோதர வாத்சல்யத்துடன் கூடிக் குலாவுவதை இந்தியத் தாய் என்று காணப்போகிறாள்? அந்நாளும் வராமலிருக்கப் போவதில்லை.



## அண்ணாமலைச் சங்கீதக் கல்லூரி

சிதம்பரம் அண்ணாமலைக் கலாசாலைக்காக எவ்வளவோ பொருள் உதவிசெய்த தர்மப் பிரபு ராஜா சர். அண்ணாமலை செட்டியாரவர்கள் சங்கீதத்தின் அருமை பெருமைகளை உணர்ந்து, இப்பொழுது சிதம்பரத்தில் அண்ணாமலைச் சங்கீதக் கல்லூரி ஏற்படுத்தி யிருப்பது போற்றத்தக்கதே. ஸ்ரீமான் சபேச அய்யர் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். நுண் மாண் கலைகளில் சங்கீதமே தலைசிறந்தது. சரஸ்வதியின் வீணையும் கண்ணபிரானது புள்ளாங்குழலும் இதற்கு உதாரணங்களாம். நமது சரீரத்தின் அமைப்பு சங்கீதத்தின் வழியே ஏற்பட்டதாகும். மனிதனிடத்திலிருக்கும் குப்த சக்தியை எழுப்பி மனிதனை இன்பத்தி லீடுபடும்படி செய்ய வல்ல சங்கீதத்தின் பெருமையை எவ்விதம் வருணிப்பது! ராஜா செட்டியாரவர்கள் வேலையால் தமிழகத்தில் சங்கீதம் புத்துணர்ச்சியும் புத்துயிரும் பெற்றுப் பரவப்போகிறது.

## அமெரிக்காவில் இந்திய மாணவர்கள்

மற்றெல்லா நாடுகளைக் காட்டிலும் அமெரிக்காவில் கல்வி போதிக்கும் முறை, மாணவர்களுக்கு மனதில் இலகுவில் படும்படியாகவும் சந்தோஷகரமாயு மிருக்கிறது. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கிறது. மாணவர்கள் தொழில் செய்து சம்பாதித்துக்கொண்டே தங்களுடைய படிப்பை முடிக்கலாம். எல்லாவகைப் பாடங்களையும் ஒன்றாய் வாசித்து ஒரேசமயத்தில் பரீட்சைக்குப் போகவேண்டுமென்பதில்லை. ஒவ்வொன்றாய் மெல்ல மெல்ல வாசித்து முடிக்கலாம். எத் தொழிலையும் அமெரிக்கர் கேவலமாய்க் கருதமாட்டார்கள். அங்கு தொழிலைக் கௌரவமாகவும் தெய்வீகத் தன்மை பொருந்தியதாகவும் கருதுகிறார்கள்.

இன்னும் அமெரிக்காவில் கல்வி விருத்திக்காக அநேக வழிகளிருக்கின்றன. ஆகையால் அமெரிக்காவிற்கு, கற்கும் அநேக மாணவர்கள் பல தேசங்களிலிருந்து செல்லுகிறார்கள். சட்ட

யையில் ரூபாயுடன் அமெரிக்காவிற்கு ஓடிய ஸ்வாமி சத்திய தேவர் எம். ஏ. (M. A) படிப்பை முடித்துக்கொண்டு பட்டம் பெற்று, இங்கு வந்திருக்கிறார். கையில் காசில்லாமற் சென்ற சுதீந்திரபோஸ் தான் எம். ஏ., பிஎச். டி. (M.A., Ph. D.) வகுப்பில் ஒரு சர்வ கலாசாலையில் தேறி, இப்பொழுது அயோவா (Iowa) சர்வகலாசாலையில் ஆசிரியராயிருக்கிறார். சில வருஷங்களுக்குமுன் வேலைசெய்து படிக்கும் மாணவர்களுக்கு ஏற்ற வழிகளிருந்தன. இப்பொழுது அமெரிக்க சர்க்கார் பணமில்லாது படிக்க வரும் மாணவர்களைத் தடுக்கின்றனர். அமெரிக்கா ஒரு குடியரசு நாடாயிருப்பினும், சில விஷயங்களில் அது தவறிக்கொண்டிருக்கிறது. நமது இந்திய மாணவர்கள் அங்கு வாசித்துக்கொண்டிருப்பவர்களெல்லாம் சேர்ந்து தங்களுடைய சங்கடங்களை நீக்கி முன்னேற்றமடையக் கருத அமெரிக்காவின் ஹிந்துஸ்தான் சங்கம் (Hindustan Association of America) என்று ஒரு சங்கம் 1911-ம் ஹுலிருந்து உண்டாக்கி "இந்துஸ்தான் மாணவன்" (Hindustanee Student) என்ற பெயருடன் ஒரு பத்திரிகையும் நடத்துகிறார்கள்.

அமெரிக்காவில் எப்படிச் சட்டமேற்படுத்திய போதிலும் சுயமுயற்சியால் பொருள்தேடிக் கல்லூரிகளில் கற்கும் இந்திய மாணவர் அநேகர் இருக்கின்றார்கள். வட இந்தியாவிலிருந்துதான் மாணவர்கள் அங்கு அதிகமாகச் சென்றிருக்கிறார்கள். தமிழகத்திலிருந்து இரண்டொருவர் சென்றிருப்பதாகத் தெரிகிறது. "அநேக சந்தர்ப்பங்களைக் கொடுக்கும் அமெரிக்காவிற்கு நூற்றுக்கணக்காக, ஆயிரக்கணக்காக அவசியம் வாருங்கள், வாருங்கள்" என்று ஹிந்துஸ்தான் சங்கத்தின் காரியதரிசி, இந்திய சகோதரர்களுக்குச் செய்தி ஒன்றை அனுப்புகிறார். தமிழ்நாட்டு மாணவர்கள் அமெரிக்காவிற்கு அநேகர் சென்று தொழிற்கல்வி கற்[illegible]க்குவந்து நமது தேசத்திற்குப் பு[illegible] வேண்டுமென்பது [illegible] ஆழ்ந்த ஆசை.

198524

## Silk Pitamber coy,. Benares City.

**சுத்தமான பட்டுகள்!** **சகாயமான விலை!!**

**காசிப் பட்டுச் சேலைகள்:** 12. 16. அல்லது 18 முழம் நீளம் 2½ முழம் அகலம் அழகான ஜரிகை கரைகளும் முகதலையும் போடப்பட்டது. சேலை 1-க்கு விலை ரூ 20 முதல் ரூ 25. 30. 50. 75 வரை.

**சாவித்திரி பட்டுச் சேலைகள்:** 12. 16. அல்லது 18 முழம் நீளம் 2½ முழம் அகலம் கரைகளும் முகதலையும் ஜரிகையால் செடி, கொடி, பூ வேலைகள் செய்யப்பட்டது சேலை 1-க்கு விலை ரூ 45 முதல் ரூ 60. 80. 100 வரை.

இந்தச் சேலைகள் தினந்தோறும் தோய்த்து உடுத்தலாம். உடல் மிகவும் நயமாக இருக்கும். எந்த நிறத்திலும் கிடைக்கும்.

**உல்லன் போர்வைகள்:** 6 முழம் நீளம் 3 முழம் அகலம் கெட்டியும் நைசுமானது. 1 நிர் 1-க்கு ரூ 12. 2 நிர் ரூ 10. 3 நிர் ரூ 8.

**காசிவைரவர் கயிறு:** 1 நிர் 100-க்கு ரூ 3. 2 நிர் ரூ 2½. 3 நிர் ரூ 2.

மற்றும் சகலவிதமான பட்டுச் சரக்குகளும் பித்தளைச் சாமான்களும் உத்திராக்ஷ மாலைகள் கண்டிகள் ஏறுமுகமணிகள் கண்டிகள் முதலியன மிகவும் சாசமான விலைக்கு அனுப்பிக் கொடுப்போம்.

உடனே எழுதுங்கள். விலாசம்

மானேஜர், பட்டு பீதாம்பர கம்பெனி காசி.

---

## UVAIS & BROTHERS,

MERCHANTS, AGENTS, DIRECT IMPORTERS
AND
WHOLESALE DISTRIBUTORS.
9, KEYZER STREET,
*Colombo.*

எங்களிடம் எல்லா விதமான சீமைத் துணிகளும் கிடைக்கும் விதம் விதமான நினுசுகள் வேலைப்பாடமைந்தவைகள். எல்லாவித உடைக்கும் உகந்தவைகள். உயர்ந்த சரக்கு, நயந்த விலை. மொத்தமான வியாபாரிகளுக்குக் கொடுக்கப்படும்.

---

## பைரவாஞ்சனம்.

அருமையாகத் தயாரிக்கப்பட்ட இவ் வாஞ்சனமானது தலைவலி, பல்வலி, இடுப்புவலி, முதுகுவலி, வாய்வுப் பிடிப்பு, சில்பிடிப்பு, ஜ... தோஷம், வெட்டுக்காயம் மு... ...வைகளுக்கு உபயோகிக்கலாம். புட்டி 1-க்கு விலை அணா 0—5—0

*N. B*:—எங்கள் கம்பெனியில் இன்னும் அநேக நூதன சாமான்கள் தயார் செய்து வைத்திருக்கிறோம்.

விப்பமுள்ளவர்கள் எழுதினால் விலை ஜாப்தா அனுப்பப்படும்.

பைரவர் கம்பெனி,
ராஜாத்தெரு, பழநி: *S. I. Ry.*

வந்தேமாதரம்.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

தமிழ் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த

## "பாரிஸ்டர் சவர்க்காரின்"

ஜீவிய சரித்திரம் வெளிவந்துவிட்டது.

இவர் பாரிஸ்டராகப் படிப்பதற்கு இங்கிலாந்து சென்றதும், அங்கு இந்தியச் சங்கம் ஒன்றை ஏற்படுத்தித் தன் தாய் நாட்டிற்காக ரகசியமாய் பலாத் காரத்தில் நம்பிக்கைகொண்டு வேலைசெய்ததும், கைதியாக்கப்பட்டுக் கப்பலில் வரும்போது அற்புதமாகத் தப்பியோடிச் சமுத்திரத்தில் ஆறுமைல் நீந்தி பிரஞ்சுத்தீவு ஏறியதும், ஆங்கு பிரிட்டீஷார் சட்ட விரோதமாய்க் கைது செய்ததும், ஆங்கிலேயர்களுக்கும், பிரஞ்சுக்காரர்களுக்கும் அகில தேசசங்கத்தில் கேஸ் நடந்ததும் படிப்பவர் மனதைத் தேச பக்தியில் பரவசமடையச் செய்யும். ஒவ்வொரு இந்தியரும் இப் புத்தகத்தைக் கையில் வைத்திருப்பது இன்றியமையாதது. விலை அணா 0—12—0

தபால் சார்ஜ் வேறு

புத்தகம் கிடைக்குமிடம்:

பாரத பிரசுராலயம்,
581, பைகிராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

## "கலா நிலயம்"

இது ஓர் இலக்கிய வாரப்பத்திரிகை.

கலையுணர்வும், கலாஞானமும் பெறுவதற்கு இது ஒரு நல்ல கருவியென்றால் மிகையாகாது. இதில் இலக்கிய வளர்ச்சிக்குரிய கட்டுரைகளே மலிந்து வருகின்றன. கம்பராமாயணம், தமிழ்ப் பாடம், அகப்பொருள் வரலாறு, செந்தமிழ்நாவல், ஆங்கிலப் புலவர்களாகிய கார்லைல், ரஸ்கின், எமர்ஸன் முதலியோரின் கட்டுரை மொழிபெயர்ப்புகள் மற்றும்பல விஷயங்கள் அவ்வப்போது வெளிவரும்.

சந்தா விபரம்.

சந்தா உள்நாட்டிற்கு ரூ. 7-8-0.
,, வெளிநாட்டிற்கு ரூ. 9-0-0
தனிப்பிரதி அணா 3. ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—மானேஜர்,
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

# வியாபாரத்திற்கழகு : :
# : விளம்பரஞ் செய்தல்.

லாபமடைந்து க்ஷேமம் பெற விரும்புவோர்க்கு விளம்பரஞ் செய்தலே இன்றியமையாதது.

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| பக்கம் 1-க்கு | மாதம் 1-க்கு | ரூ. | 10—0—0 |
| ,, ½-க்கு | ,, | ,, | 5—8—0 |
| ,, ¼-க்கு | ,, | ,, | 3—0—0 |

பக்கத்திற்குக் குறைந்த விளம்பரங்களை அனுமதிப்பதில்லை. விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன் பணம் அனுப்பவேண்டும் நீண்ட காலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

# "பாரதி"

## ஒரு தேசிய மாதப் பத்திரிகை.

சுதந்திரம் பொங்கி சமத்வம் ததும்பி சகோதரத்வம் ஜ்வலித்து
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாஸிகையாய் மத பேதமற்று ஜாதி பேதமற்றுக்
கட்சி பேதமற்று இந்தியரனைவரும் பாரத
மாதாவின் மக்களென்ற மேலான
கொள்கையுடன் தேசாபி
விருத்தியை முக்கிய
முதல்நோக்கமாகக்
கொண்டு

**தேச விடுதலைக்காக உழைக்கும்**
**தேசிய மணங் கமழும்**
**'பாரதி'க்கு**

உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள். உங்கள்
நண்பர்களுக்கும் இதனைப்பற்றி அறிமுகம்
செய்து சந்தாதாரர்களாய்ச் சேர்த்துக்
கொடுங்கள்.

**சந்தா விபரம்.**

உள்நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ 2=0=0
வெளி நாடுகளுக்கு ,, ரூ 2=8=0
அல்லது 4 ஷிலிங்.

தனிப் (சாம்பிள் காப்பி) பிரதி விலை அணா 8. வேண்டுவோர்
ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

விலாசம் :—

பொறுப்பாளர்,
"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

Edited and Published by R. NARAYANASWAMI.
Printed at ANANDA PRESS, Uthamapalayam, Madura Dt.